# அறிவின் சமூகவியல் சிந்தனைகள்



பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவின் சமூகவியல் சிந்தனைகள்

பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arivin Samookaviyal Chinthanaikal
(Thoughts on Sociology of Knowledge)

First edition:2013.06.22

Published by
Nagalingam Noolalayam,
'Nagula Giri'
Myliddy South, Tellippalai.
© Gowri Shanmugalingan
All rights reserved

ISBN: 978-955-51560-1-1

Printed by
Harihanan printers
Jaffna

Prize: 390/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னாரின் பேரன்
எனும்
உன்னதத்தை
எனக்களித்த
என் அம்மப்பாவுக்கு



பரிகாரியார்
வேலுப்பிள்ளை நாகமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மானுட வாழ்வின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டுக்கும் மிக முக்கியமான துறையாக விளங்குவது சமூகவியலாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையானது சமூகவியலை ஒரு சிறப்புக்கற்கை நெறியாகப் பயிற்றுவித்து வருகின்றது. இத் துறை ஆசிரியர்கள் யாழ்ப்பாணச் சமூகத்தைப் பற்றியும், உலகளாவிய சமூகவியல் பற்றியும் நல்ல ஆக்கங்கள் பலவற்றைச் செய்துள்ளனர். இத் துறையில் பல முன்னோடி நூல்களை எழுதியுள்ள இப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரிருமாகிய கலாநிதி என். சண்முகலிங்கன் அவர்கள் இப்போது 'அறிவின் சமூகவியல் சிந்தனைகள்' (Thoughts on Sociology of Knowledge) எனும் நூலினைப் படைத்துள்ளார். சமூகவியல் துறையில் இந்நூலின் வரவு காலத்தாலும் இடத்தாலும் முக்கியத்துவம் பெறுகின்றது; மிகுந்த வரவேற்பையும் பெறுகின்றது.

சமூக அறிவியல்கள் தமிழில் எழுதப்படும் போது இரண்டு வகையான பங்களிப்பு கிடைகின்றது என்று பேராசிரியர் சண்முகலிங்கன் கூறுவார். தமிழை அறிவியல் மொழியாக்கும் பயன் ஒருபுறம் நிகழ்கிறது. மறுபுறம் அறிவின் புதிய பரிமாணங்கள் நமக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்றன. பேராசிரியர் சொல்வது போலவே அத்தகைய இரண்டு பரிமாணங்களும் இந்த நூலின் வழி நமதாகின்றன.

இன்று புவியியல் காலனியவாதம் போய் கலாச்சாரக் காலனியவாதம் வந்திருக்கிறது. இதில் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் (LPG) ஆகிய மூன்றும் அசுரவேகத்தில் நம்மைக் கவ்வி நிற்கின்றன. இவற்றின் பிடியிலிருந்து ஒவ்வொரு சமூகமும் நிலைபெற வேண்டுமானால் அது சுதேசத் தன்மையுடனும் தற்சார்புத் தன்மையுடனும் அசைவியக்கம் பெறவேண்டும். இதற்கான ஒரு சிந்தனைத் தளத்தை பேராசியர் என். சண்முகலிங்கன் அவர்களின் இந்த நூல் முன்வைக்கின்றது.

அறிவொளிக்கால சிந்தனை மரபுதந்த நவீன அறிமுறைகள், அவற்றினை சமூகமயமாக்கும் இன்றைய கல்வி முறைகள் பற்றிய ஆழமான விமர்சனங்களைத் தரும் இந்நூலானது, சமூகவியலுக்கு மட்டுமன்றி, தமிழ்ப் புலமை உலகிலும் ஒரு புதிய நூலாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றது. அறிவின் பயனை உய்த்துணரவும் நம் சமூக வாழ்வை மேம்படுத்திக் கொள்ளவும் சமூகவியல் அறிவு நமக்கு என்றென்றும் துணைபுரியும். பேராசிரியர் அவர்களின் ஆழ்ந்த, நுட்பமான சமூகவியல் பார்வை நம்முடைய வாசிப்புக்கு என்றென்றும் பயன் தரும்.

**முனைவர் பக்தவத்சல பாரதி**
இயக்குநர்
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

புதுச்சேரி
தென்னிந்தியா
05.மே 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அறிவின் சமூகவியல் பற்றிய சிந்தனைகளை தமிழுக்காக்கும் எம் நோக்கம் இந்நூலின் வழி கைகூடுகின்றது. அறிவு - அறிவியல் பற்றிய இன்றைய கருத்தாக் கங்களை, அவற்றின் சமூக பரிமாணங் களை, தன் ஆய்வு-அனுபவங்களினடியாக ஆழப்படுத்தியும் மதிப் பீடு செய்தும் இந்நூலினை வடிவமைத்துள்ளார் பேராசிரியர் என். சண்முகலிங்கன்.

அப்பாவின் நினைவுகளைக்காக்கும் எங்கள் நாகலிங்கம் நூலாலயத்தின் பதினொராவது வெளியீடாக இந்நூல் அமை கின்றது.

பாரம்பரிய அறிவுச் செல்வங்களான சித்த - ஆயுள்வேத மருத்துவம், சோதிடம், இலக்கியம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமையுடன் புகழ் பதித்த அம்மா நகுலேஸ்வரியின் அப்பா பரிகாரியார் வேலுப்பிள்ளை நாகமுத்து அவர்களுக்கு இந்நூலை காணிக்கையாக்குவதில் பெரு நிறைவு காண்கின்றோம்.

இந் நூலிற்கான அணிந்துரையினை வழங்கிப் பெருமைப் படுத்தும் புகழ்பூத்த மானிடவியலாளரும், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநருமான முனைவர் பக்தவத்சல பாரதி அவர்களுக்கும் அழகுற நூலாக்கம் செய்த கரிகணன் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தினருக்கும் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**பேராசிரியர் மனோ சபாரத்தினம்**
அதிபர்
நாகலிங்கம் நூலாலயம்

'கந்தன் அருள்'
அம்பலவாணர் பாதை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மனித சிந்தனைக்கும் சமூக சூழமைவுக்கும் இடையிலான உறவின் கற்கையாக அறிவின் சமூகவியல் வளர்ச்சி கண்டுள்ளது. உலகளாவிய அறிவுத் திரளின் சமூக-பண்பாட்டு அடிப்படைகளை ஆராயும் இத் துறை, சமூகவியலின் ஒரு கிளைவிரிவாகும். மனித நடத்தையின் பண்புசார் புரிதலுக்குகான மிகச் சிறந்த முறையியலாக அறிவின் சமூகவியலின் பிரயோக முக்கியத்துவம் இன்று அனைத்துப் புலங்களிலும் உணரப்படும். மனிதவாழ்வின் அனைத்து முகங்களிலும் அறிவின் வியாபகம் நிறைந்துள்ள வேளையில், அந்த அறிவின் பரிமாணங்களை, அது சார்ந்த முறையியல்கள், அவை தொடர்பான விமர்சன நோக்குகள் என்பவற்றினை அறிந்து கொள்ளுதலும் இன்றைய அறிவின் தேவையாய் உள்ளது. புறவயமான புலனறிவாத அறிவியற் குழுமங்கள், அகவயமான புரிதலினடியான அனுபவவாதக் குழுமங்கள் என இன்று அறிவுலகில் முதன்மை பெறும் அணுகுமுறைகள் எதிர் எதிரான கட்சிகளின் வெளிப் பாடுகள் அல்ல. மாறாக சமூக ஆய்விற்கான பன்மை முறையியல் வாய்ப்புகள் ஆகும்.

அறிவின் சமூகவியல் பற்றிய கருத்தாடல் தவிர்க்க முடியாதபடி கருத்தியல் பற்றிய சிந்தனைக்கு எம்மை இட்டுச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. யாருடைய அறிவு, எந்த நோக்கிலான அறிவு என்ற வினாக்கள் அறிவின் அரசியல் பற்றிய உண்மைகளுக்கு எம்மை அழைத்துச்செல்வன. பண்பாடுகளுக் கிடையிலான புரிதல் வேறுபாடுகளை பழமை-புதுமை என்ற வார்த்தைகளுக்குள் மட்டுப்படுத்தியும், தாழ்வு-உயர்வு என தரப்படுத்தியும் அறிமுகம் செய்யும் இக்கால கல்வி முறைமையும் கலைத்திட்ட உள்ளடக்கங்களும்கூட உரிய பகுப்பாய்வினை வேண்டி நிற்பன.

அறிவென்பது மனித மேம்பாட்டிற்கானது; ஆக்கபூர்வ மானது. குறுகிய பயன்பாட்டு நோக்கிலான காரிய வாத அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிலைக்கு அப்பால் அறிவை ஆக்கபூர்வமானதாக்குதல் எம் காலப்பணியாகியுள்ளது. அறிவின் சமூகவியல் சார்ந்த கருத்தாடல்கள் வெறுமனே சமூகவியல் வரையறைக்குள் மட்டும் அடங்குவன அல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மானிடவியல், சமூக-உளவியல், வரலாற்றியல், இனவரைவியல் என விரியும் பல்துறை இணைநோக்கின் வழியாகவே புதிய புரிதல்களை நாம் எட்ட முடியும்.

மனிதனின் அனுபவ எல்லைகள் விரிய விரிய அவன் அறிதல் சார்ந்த முறையியல்களிலும் மாற்றங்கள் வேண்டப்படுகின்றன. அறிதலை மதிப்பிடும் அளவுகோல்களிலும் கூட புதிய ஏற்பாடுகள் வேண்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஊடகப் பண்பாட்டின் ஆளுகைக்குள் அமிழ்ந்துள்ள இன்றைய மனிதனின் அறிவு பற்றிய மதிப்பீடு வெறும் நுண்மதியினால் பெறப்பட முடியாதது. ஊடக அறிவு என்ற புதிய அளவுகோலை வேண்டி நிற்பது. இவ்வாறே நவீன அறிவியலின் வழிப்பட்டது என்ற பெயரில் சுதேச பண்பாட்டுத் தளங்களில் செழுமையை மறுக்கும் ஐரோப்பிய அறிவு வாதம் போன்றவையும் விமர்சனத்திற்குரியவை. பல்லாண்டுகால பண்பாட்டுப் பெறுமதிகளை, அடையாளங்களை, கூட்டு ஞாபகங்களை வெளிக்கொணர்ந்து எங்களை எங்கள் வழியில் வாழவிடுங்கள் என்று கேட்கும் இலத்தின் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசியப் புலங்களின் குரல்கள் உணர்த்தும் அறிவின் ஆத்மா பற்றிய உண்மைகளும் எம் கவனத்திற்குரியன.

அறிவின் பயன் எல்லை மனிதம். இந்த அறிவின் பயனாய் மனித வரலாறு கண்ட சுதந்திரம், சமத்துவம் போன்ற மேலான கருத்தாக்கங்கள் யாவும் வெறும் பயன்பாட்டு விடயங்களாகி குறுகிடும் நிலைமைகளை புரிந்து கொள்வதற்கும், எதிர்கால மனித வரலாற்றின் செல்நெறியை மேம்பட்டதாக நிலைபேறானதாக கட்டமைப்பதற்குமான காலக்கடமையின் வெளிப்பாடாகவே இந்நூல் அமைகின்றது எனலாம்.

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
முன்னாள் துணைவேந்தர்
சமூகவியல் பேராசிரியர்
சமூகவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1) நிலைபேறான மேம்பாட்டிற்கான சுதேச அறி. 01

2) அறிதலின் முறையியல் 18

3) அறிவொளியின் வரம்புகள் 42

4) அறிவின் அரசியல் 54

5) அறிவின் வழியான சமூக மேம்பாடு 60

6) சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக் கல்வி 71

7) பிள்ளை மனங்களை புரிவதற்கான அறிவு 82

8) தாகூரின் மனித முழுமைக்கான கல்வி 95




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# நிலைபேறான மேம்பாட்டுக்கான சுதேச அறிவு

சுதேச அறிவென்பது குறித்தவொரு பண் பாட்டின் அல்லது சமூகத்தின் தனித்துவமான அறிவுத் திரளாகும். உள்ளூர் அறிவு, நாட்டார் அறிவு, மக்கள் அறிவு, மரபுவழி ஞானம், மரபுவழி விஞ்ஞானம், எனவும் சுதேச அறிவு அறியப்படுகின்றது. உலகளாவிய மனித சமூகங்கள் யாவும் தத்தம் சூழமைவில் செழுமையான அனுபவங்களை பெற்றுக்கொள் கின்றன. இந்த அனுபவங்களின் வெளிப்பாடாக சுதேச அறிவுத் திரளமைப்பு திகழ்கின்றது.

இந்த அறிவானது தலைமுறை தலைமுறையாக கடத்தப்படு கின்றது. வாய்மொழியாகவும் பண் பாட்டுச் சடங்குகளினடியாகவும் இவை கையளிக் கப்படுகின்றன. விவசாயம், கால்நடை வளர்ப்பு, வேட்டை, மீன்பிடி போன்ற வாழ்வாதார செயற்பாடு களிலும் நோய்களுக்கு எதிரான மருத்தும், கல்வி, சூழல் காப்பு போன்ற பரந்த செயற்பாடுகளின் வழியாகவும் நிலைபேற்றுக்கான வழி வகைகளை இவை வெளிப் படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சுதேச அறிவுத் திரளானது முழுதளாவியது. இன்றைய நவீன அறிவுமுறையின் துண்டாடல்கள் இங்கு இல்லை. இவ்வறிவானது இம் மக்களின் ஆத்மீக நலம், பண்பாடு, மொழி என்பவற்றில் வேர்விட்டுள்ளது. இது அவர்களின் வாழ்க்கை முறையாகவே உள்ளது. சுதேச வாழ்வினை ஆளுகின்ற விதிகளின் தொகுப்பாகவும், சூழல் வளங்களை காக்கின்ற முறைமையாகவும் கூட அது விளங்குகின்றது. இந்த அறிவினைக் காப்பதும் பகிர்ந்து கொள்வதும் ஒரு கடமையாகவே மேற்கொள்ளப்பட்டது. இதன் வழி இவ்வறிவானது இயங்கியல் தன்மை கண்டது. சுதேச வாழ்வியலில் நல்லதொரு வாழ்வுக்கான ஞானமாகவும் இவ்வறிவானது போற்றப்பட்டது. இதயத்தையும் மூளையையும் ஒருங்கிணைக்கும் அறிவாக இதனை குறிப்பிடலாம். சுதேச அறிவின் மூலங்களான சமுதாயங்களைப் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனங்கள் இங்கு நம் கவனத்திற்குரியன.

இந்த வகையில் சுதேச அறிவின் முதன்மையான பண்புகள் பற்றிய பின்வரும் கருத்துக்கள் நம் கவனத்திற் குரியன.

- சுதேச அறிவு என்பது குறித்வொரு இடத்தில் வாழும் மக்களின் அனுபவம் சார்ந்தது.

- சுதேச அறிவானது வாய்மொழி மூலமாகவும் போலச் செய்தல் போன்ற முறைகளின் ஊடாகவும் காலங்காலமாக கடத்தப்படுகின்றது.

- இவ்வறிவானது ஒவ்வொரு பண்பாட்டிலும் முயன்று தவறுதல் வழியாகக் கட்டமைக்கப் படுகின்றது.

- பல தலைமுறைகளுக்கு ஊடாக இந்த அறிவுத் திரளமைப்புக் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஏனைய அறிவின் வடிவங்களோடு ஒப்பிடுகையில் சுதேச அறிவானது பெருமளவிற்கு பகிர்ந்து கொள்ளப்படுகின்ற அறிவாக உள்ளது. இதனால் தான் மக்கள் விஞ்ஞானம் என்ற அடைமொழி சுதேச அறிவிற்கு வழங்கப்படுவதைக் காணலாம்.

* சுதேச அறிவானது, இயற்கை வளங்கள் பற்றிய உணர்திறனும் சூழலியல் அறிதிறனும் கொண்டதாகும்.

காலனித்துவ ஆக்கிரமிப்புகளுக்கு முன்னதாக தத்தம் பண்பாட்டுப் புலங்களில் சுதேச சமுதாயங்கள் கண்ட இவ்வறிவானது, அவர்களின் இனத்துவ அடையாளமாகவும் பண்பாட்டு உரிமையாகவும் கூட விளங்கியது. சுதேச மக்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனங்கள் இதனை தெளிவாகவே புலப்படுத்துகின்றன. தத்தம் நிலங்களோடு சுதேச மக்கள் கொண்டுள்ள ஆத்மீக ரீதியான ஈடுபாட்டின் அறுவடையாக விளங்கும் இவ்வறிவுத் திரளை காக்கின்ற உணர்வு விழிப்பு என்பது இம் மக்களின் பண்பாட்டு அடையாளங்களை பாரம்பரிய மேன்மைகளை காக்கும் செயற்பாடாகவும் அர்த்தம் பெறும்.

உலக இனக்குழுமங்களின் சிந்தனை வளர்ச்சியின் அடிப்படையாக அமைந்த முன்னை உலகாயதம் (Proto Materialism) பற்றிய இன்றைய ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மைகள் எம் கவனத்திற்குரியன. உலகை அறியும் மனித செயல்முறையாக அறிவின் வளர்ச்சி உலகப்பண்பாடுகள் பலவற்றிலும் அழகாகவே வெளிப்பட்டது. தமிழர் சிந்தனை மரபுபற்றிய தரிசனங்களும் இதனையே உணர்த்துவன.

புலன்கள் மூலமான அறிதலையும் அறிவின் மூலமான அறிவினையும் மிகத்தெளிவாகவே வரையறுக்கும் தொல்காப்பியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.

எனும் தொல்காப்பியச் சூத்திரம் புலனறிவோடு மனம் எனும் அறிவினை ஆறாவது அறிவாக குறிப்பிடும். இன்றைய புலனறி வாதமும் ஏனைய அகவய அறிதல் முறைகளும் உணர்த்தும் அறிவு பற்றிய உண்மைகளை தமிழ் சிந்தனை மரபில் தெளிவாகவே காணமுடியும். காட்சி , கருத்து, உவமை, ஒப்புமை, உத்தியுணர்வு என்றவாறு அறிதலுக்கான அடிப்படைகளை தமிழ் இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் சைவசித்தாந்த ஆராச்சி நூல்களும் குறிப்பிடுவதனையும் இங்கு மனதில் கொள்ளலாம்.

தமிழர் சிந்தனை மரபில் சித்தர்கள் வெளிப்படுத்திய அறிவு மரபும் இங்கு எம் கவனத்திற்குரியதாகும். சித்' என்றால் அறிவு. சித்தர்கள் தமிழ் சிந்தனை மரபின் விஞ்ஞானிகள் என பேராசிரியர் கைலாசபதி, சாமிசிதம்பரனார் போன்றோர் எழுத்துக்கள் வெளிப்படுத்திய உண்மைகள் சுதேச அறிவின் முக்கியத்துவத்தினை உணர்த்தி நிற்பன. சித்தர்களின் மருத்துவம், ரசவாதம் பற்றிய நூல்களினைப் பற்றிய பகுப்பாய்வு எங்களது சுதேச அறிவின் வரலாற்றினை மீட்டுத்தரும் என்பார் தேவி பிரசாத் சட்டோ பார்த்தியாயா. (n.d)

தெரியாது என்றலைந்தால் தெரியுமோதான்
தேடியல்லோ ஆராய்ந்து பார்க்கவேணும்
அறியாத மூடருக்கு அறியப்போமோ
அன்னத்தை திரட்டி மெல்ல வாய்க்கீந்தாலும்
குறியாக முழுங்குதற்கும் மாட்டார் மூடர்
குறிப்பாக இதுவல்லால் என்னசொல்வேன்
மறைவான அறிவொன்றும் இல்லை; இல்லை
மட்டாத மூடருக்கு அறிவுதானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் அகத்தியர் ஞானம் உணர்த்தும் தமிழரின் அறிதல் முறைபற்றிய ஞானம், அறிவைப் போற்றும், கல்விவழி உண்மையான அறிதலை வலியுறுத்தும் மேன்மைகள் எமக்கானவை.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்

எனும் திருவள்ளுவரின் கருத்தியல் உணர்த்தும் உண்மைகள் இன்றைய அறிவின் சமூகவியல் பற்றிய கருத்தாக்கங்கள் தோன்று வதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சுதேச அறிவுச் செல்வமாக எமக்கு வாய்த்திருந்தது.

அறிவியல் வரலாற்றில் ஐரோப்பிய விஞ்ஞானிகள் **16ம், 17ம்** நூற்றாண்டு காலத்திலேயே கண்டுகொள்ளாத பலவற்றை கீழைத்தேயத்து விஞ்ஞானம் கண்டுகொண்டமை இன்று அறியப்படாத வரலாறாகவே உள்ளமையும் இங்குநம் கவனத் திற்குரியது. எடுத்துக்காட்டாக ஐரோப்பிய விஞ்ஞானத்தில் காய்ச்சிவடித்தல் என்பதற்கு ஆவியை வசமாக்கி குடிப்பது என்றே அர்த்தம் தரப்பட்டது. சாராயம் காய்ச்சும் தொட்டியில் இருப்பது மிக மூர்க்கத்தனம்கொண்ட எளிதில் அடக்கமுடியாத ஆவிகளில் ஒன்று எனவே விளக்கப்பட்டது. இந்த விளக்கத்தின் அடியாகவே மதுவகைகளுக்கு Spirit என ஆங்கிலமொழியில் வழங்கப்பட்டது. ஆனால் காய்ச்சிவடிக்கும் இச்செயன்முறையை ஆவிபற்றிய கருத்தாக்கம் எதுவும் இல்லாமலேயே ஆதி இந்திய அறிவியல் முன்வைத்திருந்தமை இங்கு நம் கருத்துக்குரியது. அறிவியலின் வரலாறுபற்றிய பேர்ணல் **(1969)** அவர்களின் நூல் இதனைத் தெளிவாகவே விளக்கிடக் காணலாம். எனினும் இந்த அறிவியல் முறைகளை வளர்த்தெடுக்கும் ஏற்பாடுகள் இல்லாத நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அவை மறக்கப்பட்ட அறிவாகவும் சிலவேளைகளில் மறைக்கப்பட்ட வரலாறாகவும் கூட முடிந்துபோய் உள்ளன.

சுதேச மக்களின் அறிவுச்செல்வமாக, வாழ்வாதாரமாக, வறிய மக்களின் சமூக மூலதனமாக விளங்கிய சுதேச அறிவின் மீது காலனித்துவ காலம் முதலாக ஏற்பட்ட தாக்கங்கள் துயரம் தருபவை. குறுகிய கால நலன்கள், பிரச்சினைகளுக்கான தீர்வுகளி னடியாக பாரம்பரிய அறிவின் நிலைபேறான மேன்மைகள் புறந்தள்ளப்பட்டன. மேலை உலகின் சமூக பொருளாதார அரசியல் நோக்கங்களின் அடியாக அறிவியல், உலகம் தழுவியது என்ற வாய்ப்பாடு முன்வைக்கப் பட்டது. காலனித்துவ சூழலில் இத்தகைய கருத்தாக்கங்களை சுதேச பண்பாடுகளும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுகொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம். இதேவேளையில் உற்பத்தி அதிகரிப்பு, மிகை லாபம் என்ற முதலாளித்துவ தத்துவ மேலாண்மையும் இணைந்து கொண்டது. மக்களுக்கான உற்பத்தி என்ற நிலைபோய் உற்பத்திகளுக்காக மக்கள் என்றானது. இந்த வணிக முதன்மை பண்பாட்டில், அறிவை மிஞ்சிய மதிப்பை தொழில்நுட்பம் பெற்றுக்கொண்டமையும் இங்கு நம் கவனத்திற் குரியது. இயற்கையை அறிவியல் வென்றிட வேண்டும் என்பது இலக்காக அறம் பிழைத்த அறிவியல் தொழில்நுட்ப பயணம் தொடர்ந்தது.

ஆதிச் சமூகங்களில் தொழில்நுட்ப கருவிகளின் பயன்பாடு என்பது மனிதத் தேவைகளின் அடியாகவே அமைந்தது. கருவிகள் மிகச் சிலவாகவும் அக் கருவிகளை கையாளுதல் என்பது மனித திறன்களின் வெளிப்பாடாகவும் காணப்பட்டது. இன்றோ தலைகீழ் மாற்றமாக கருவிகள் கையாளும் மனிதனை கட்டுப்படுத்துவனவாக மாற்றங்கட்டுள்ளன. எந்தவித நியமங்களுமற்ற தொழில்நுட்ப நோக்கிடை மனித மதிப்பீடுகள் பொருள் இழந்து போயின. தனிமனித ஆக்கத்திறன் சுயம் என்பவற்றனைப் புறம் தள்ளி மனிதனை தொழில்நுட்ப பிராணியாக்கும் நிலைமாற்றம் விளைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு-நவீனத்துவம் என்ற இரட்டை நிலைக் கருத்தாக்கங் களின் அடியாகவே இந்த புறந்தள்ளுதல் அமைந்திடக் காணலாம். "மரபைத் தவிர்க்க வேண்டும், நவீனத்துவத்தைத் தழுவ வேண்டும்" எனும் இந்த விழுமிய நோக்கிலான கருத்தாக்கம் ஒரு புலமை மரபாகவே வளர்க்கப்படுகின்றமை இங்கு நம் கவனத்திற்குரியது. படிமலர்ச்சிக் கோட்பாடு, அதனடியான மேம்பாடு தொடர்பான கருத்தாக்கங்கள் யாவும் நவீனமயமாக்கத்தையே மேம்பாடாக வரித்து நிற்கின்றன. இது சார்ந்த புலமையாளர்கள் மரபுக்கும் நவீனத்துவத்திற்கும் இடையில் நிகழுகின்ற ஒரு போராட்டமாக மேம்பாட்டினை சித்திரிக்கவும் செய்கிறார்கள். தேசங்களை வகைப்பாடு செய்வதற்கும் இந்த வாய்பாடுகளை பயன்படுத்த இவர்கள் தவறவில்லை. வளர்ந்த நாடுகள் - வளர்ந்து வரும் நாடுகள் அல்லது குறைவிருத்தி நாடுகள் என்ற அடையாளங்களின் விளக்க உரைகளாக நவீனமயப்பட்ட நாடுகள், நவீனமயமாகிவரும் நாடுகள், குறைந்தளவிற்கு நவீனமயப்பட்ட நாடுகள் என இவர்கள் முன்மொழிகின்றனர். இதனடியாக நவீனமயமாக்கத்தின் மேலை மாதிரிகளை இவர்கள் வரப்பிரசாதங்களாக குறிப்பிடுகின்றனர்.

சுதேச அறிவியல் தொடர்பான கவனிப்புகளோ, பகுப்பாய்வுகளோ இல்லாமலேயே நவீனத்துவத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் நிலைமை பெரும்பாலான நாடுகளின் அனுபவம் ஆனது. காலனித்துவகால மேலை ஆட்சியாளர்களின் கருத்தியல் ஆதிக்கம், கல்வி முறைவழியான சமூகமயமாக்கம் போன்றவற்றின் ஊடாக மேலைமயமாக்கம் என்பது ஒரு விழுமியமாக, உளச்சார்பாகவே பல புலங்களிலும் வளர்க்கப்பட்டன. மேற்கண்ட இந்த சிந்தனை போக்கினை கேள்விக்குள்ளாக்கிய மாக்சிய வாதிகளின் மேம்பாட்டுச் சிந்தனைகள் நம் கவனத்திற்குரியன. நவீனமயமாக்க, தொழில்மயமாக்க சமூகங்களில் இயற்கை மனிதனுக்கு அந்நியப்பட்டு போனமையும் சமூக ஒழுங்கமைவின்மையும் தனிமனிதக் குழப்பங்களும் அதிகரித்துப் போனமையும் மரபார்ந்த அறிவியல் வாழ்க்கை முறைகள் பற்றிய அவசியத்தினை உணர்த்தி நிற்கின்றன. நவீன அறிவும் அவ்வறிவின் வழியான மனிதரைத் தேடும் ஆராய்ச்சியும் வெறும் சந்தை ஆராய்ச்சியாக, சந்தையை மையமாகக் கொண்ட நுகர்வோரைத் தேடும் முயற்சிகளாகவும் முடிந்து போனமை இன்றைய வரலாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு அப்பால் உலகளாவிய மனிதன், உலக மயமாக்கம் என்ற நவீன கருத்தாக்கங்களும் கூட சந்தையை மையமாகக் கொண்ட லாப கணக்குகளாகவே அமைந்துள்ள மையும் நம் கவனத்திற்குரியது. சுதேச அறிவை, சுதேச வாழ்க்கை முறையை புறந்தள்ளுகின்ற இந் நடைமுறைகள் நவீனத்துவத்தின் பெயரால் நடக்கின்ற வணிகங்களாகவே அமைந்த ஆபத்து இன்று பெரிதும் உணரப்படுகின்றது. நவீனத்துவத்தின் வழியான மேம்பாடு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வாழ்வின் அனைத்து தளங்களையும், அனைத்து தரப்பினரையும் சென்றடையவில்லை. குறிப்பாக சமூக-பொருளாதார நீதி, பொருளாதாரச் செழிப்பு, அரசியல் சுதந்திரம், சுகாதாரம், கல்வி என்பற்றில் தமக்குரிய பங்கினை பெறமுடியாதவாறு மறுக்கப்பட்ட மக்கள் எந்தளவிற்கு அவற்றினைக் கேட்கவும் பெறவும் முடிகின்றது என்பதனைப் பொறுத்தே உண்மையான அறிவின் பயனைத் துணிந்திடமுடியும்.

நவீனத்துவத்தின் வழியாக வந்த இந்த ஒருபக்கச் சார்பான மேம்பாடு பற்றிய தன் விமர்சனங்களிடை 'சுதேச அடையாளங் களை-மரபுகளை மீள உறுதிசெய்தல், மேட்டுக்குடி-பொதுமக்கள் என்ற வேறுபாடுகள் அகன்ற புதியதொரு சுய பிரதிமையை வளர்த்தல், "நாம் யார்க்கும் குடியல்லோம்", நாம் இரண்டாம் தரப்பிரஜைகள் அல்ல எனும் நிலையினை எய்துதல் எனும் பண்பாட்டு உருமாற்றச் செயன்முறைகளை வலியுறுத்தும் போட்சின் கருத்தியல் நம் கவனத்திற்குரியது. (Portes, 1976) மரபுகளை உறுதிசெய்தல், மேட்டுக்குடியினரின் அறிவாதிக் கத்திலிருந்து விடுபட்ட பொதுமக்கள் வாழ்வியலை உறுதிசெய்தல் எனும் இவ்விலக்குகளினடியாகவே இன்று மீளவும் சுதேச அறிவிற்குத் திரும்புதல், சுதேச வாழ்க்கை முறைகளை அங்கீகரித்தல் எனும் சிந்தனை இன்றைய சமுதாய மேம்பாட்டுப் புலங்களில் முதன்மை பெறக்காணலாம். சுதேச அறிவை, அதன்வழியான வாழ்க்கை முறைகளை பற்றிய அனுபவங்களை நேரடியாகவே அம்மக்களிடம் சென்று கற்றுக் கொள்ளுதல் என்பது இன்று சமுதாய மேம்பாட்டு முறையிலாகவே வளர்க்கப் பட்டுள்ளமை எம் கவனத்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் சுதேச அறிவிற்கும் பண்பாட்டுப் பல்வகைமைக்கும் இடையிலான உறவுபற்றிய மானிடவியல், சமூகவியல் சார்ந்த ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மைகள் பயனானவை. பல்வேறு பண்பாடுகளிடையான சுதேச அறிவின் முறைமைகளை புரிந்து கொள்வதற்கும் ஒப்பிடுவதற்குமான நான்கு பிரதான வழிமுறை களை இக்கல்விப் புலங்கள் எமதாக்குகின்றன.

* ஒத்த விடயங்கள் தொடர்பான வேறுபட்ட அறிவு
* வேறுபட்ட விடயங்கள் தொடர்பான வேறுபட்ட அறிவு
* வேறுபடும் வழிகளில் ஒழுங்கமைக்கப்படும் அறிவு
* வேறுபடும் வழிகளில் பெறப்படும், பரிமாற்றப்படும் அறிவு

இத்தகைய பண்பாட்டு பன்மையை மறுக்கும் நவீன அறிவு முறைமையானது, மிக எளிதான ஒரு சூத்திரத்திற்குள் பாரம்பரிய அறிவை மூடி நிற்கின்றது. இலகுவானது, உடனடியானது, லாபகரமானது என்ற இந்த சூத்திரத்திற்குள் நிலைபேறான வாழ்வினைக் காத்து நிற்கும் சுதேச அறிவின் மகத்துவம் உணரப்படாமையின் விலைகளை இன்றைய உலகம் பெருமளவில் கொடுத்துள்ளது. அறிவியலின் வளர்ச்சி என்பது அழிவின் வளர்ச்சி எனும் படியான அனுபவங்களையே அதிகளவில் தருகின்ற நிலையில், மனித இருப்பை காப்பது முதல் மனித வாழ்வுக்கான சூழலை இயற்கை வளங்களை காப்பது வரை மீளவும் சுதேச அறிவே தஞ்சம் எனும் நிலைமைகள் இன்று மேலெழக்காணலாம். எடுத்துக்காட்டாக விவசாயப் புலங்களில் நவீன வணிக விவசாய தொழில் நுட்பத்தின் வழி ஒரே பயிர் என்ற நிலையில் இழக்கப்பட்ட நிலவளத்தை, போசாக்குக் உதவாத பயிரின பெருக்கத்தை கேள்விக்குள்ளாக்கும் பல ஆய்வனுபவங்களை இன்று காணமுடிகின்றது.

உண்மையில் பிரச்சினை அறிவியலிலா அல்லது நியாயம் மறந்த தொழில்நுட்ப ஆதிக்கத்திலா என்பதனை ஆழ நோக்குவது அவசியமாகும். அறிவியல் என்பது பல்வேறு மாற்று அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலங்களைக் கொண்டது; பன்மைத் தன்மையானது என்ற உண்மையினடியாகவே இன்றைய விழிப்புணர்வுச் செயல்திட்டங்கள் அமைகின்றன. வளர்முக நாடுகள் என்றும், குறைவிருத்தி நாடுகள் என்றும் பட்டி கட்டப்பட்ட நாடுகள் பலவற்றினதும் உணவு உற்பத்தி, சுகாதாரமான வாழ்க்கை முறைகள், நலமான பண்பாட்டு கோலங்கள் என்பன சுதேச அறிவின் மேன்மைக்கான சான்றுகளாக விளங்குவன.

இந்தவகையில் லெவி ஸ்ரோஸ் போன்ற சமூக-மானிடவியலாளர்களின் ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மைகள் நம் கவனத்திற்குரியன. பல்வேறு இனக்குழு மனிதர்களோடும் உடனிருந்து அவன் பசியையும் நோயையும் தன்னதாக உணர்ந்து கொண்டு ,அவனை பயிலும் மனிதநேய நெறியாக மானிடவியல் போற்றப்படும். இந்தவகையில் செவ்விந்தியர்கள் பற்றிய தன்னுடைய ஆய்வொன்றின் முடிவுரையாக லெவிஸ்ரோஸ் குறிப்பிடும் கருத்துக்கள் சுதேச அறிவின் பெறுமதியை வெளிப்படுத்தி நிற்கக் காணலாம் (Levi-Strauss, 1970-1981). இன்றைய மனிதனின் கொந்தளிப்பான வாழ்வுக்கான ஒரு மாற்று வாய்ப்பாக சுதேச மக்களின் வாழ்க்கை முறையை, மனிதத் தன்மை கொண்ட அவர்களுடைய பண்பாட்டுக் கோலங்களை ஓர் அழகிய கண்ணாடிப் படிவம் போல பாதுகாத்துக் கொள்வது நம் கடமை என்பார் லெவி ஸ்ரோஸ். லெவி ஸ்ரோசின் இந்தக் கருத்தாக்கம் அமைப்பியலின் கற்பனாவாதமாக கருதப்பட்டாலும் சுதேச பண்பாட்டு வாழ்வின் பெறுமதியை வெளிப்படுத்தும் வாசகங்கள் என்பதனை மறுக்கமுடியாது.

இயற்கையோடு இயைந்த வாழ்வியலில், பல்வேறு கேடுகளையும் விளைவித்த அறிவின் பெயரிலான அனைத்துச் செயன்முறைகளையும் கேள்விக்குள்ளாகுவதும், இல்லாதொழிப்பதும் எங்களின் காலக் கடமையாகும். வீட்டிலிருந்து காடு வரை இந்தக் கடமைக்கான எல்லைக்குள் விரிந்துள்ளன. விட்டிலே அன்னையர்கள் கைப்பட தயாரிக்கப்பட்ட சத்துமாவைத் தூரத்தள்ளி இயந்திர அரையலில் பிளாஸ்ரிக் பைகளில் வந்து சேரும் வெளிநாட்டு உணவே அதிக சத்துக் கொண்டது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரங்களுக்குப் பின்னால் உள்ள பொய்மைகளை வெளிப் படுத்த வேண்டி இருக்கின்றது. இதுபோலவே சமூகநலக் காடுகள் என்ற பெயரில் யுக்கலிப்ரஸ் போன்ற ஒரே மரங்களை ,காணும் வெளியெலாம் நாட்டி மண்ணின் வளத்தை கெடுத்த நடைமுறை களுக்கு எதிராகவும் விழித்துக்கொள்ளவேண்டி இருக்கின்றது. மேம்பாடு என்ற பெயரில் அடர்ந்து நிலத்தை காத்து நின்ற பண் பாட்டின் மரங்கள் யாவும் அழித்தொழிக்கப்படும் கொடுமை களுக்கு எதிராகவும் செயல்பட வேண்டியுள்ளது. இவ்வாறே அதிக விளைச்சல், உயர் இலாபம் என்ற பெயரில் அறிமுகமாகும் இரசாயன உரங்கள் வழியான நில நஞ்சூட்டல் போன்றனவும் நம் கவனத்திற்குரியன. சாதாரண மண்ணின் மைந்தரான விவசாயி களின் பொது அறிவில் கூட புலப்படக்கூடிய தீமைகள் அறிவின் பெயரால் இரவோடு இரவாக அகற்றப்பட்ட நிலைமைகள், விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்தவகையில் பன்னாட்டு நிதிநிறுவனங்களுக்கும் அவர் தரும் பெருந்தொகை யான நிதி உபாயங்களுக்கும் அடிமைப்பட்டு உயிரி தொழில் நுட்பம் என்றும், வீரிய விதைகள் என்றும் சுதேச பண்பாட்டின் வழக்கங்களை இல்லாதொழிக்கும் உயர்கல்வி நிறுவனங்களின் ஆய்வு போக்குகளும் கூட மீள்விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறே மருத்துவம் என்றாலே அது அலோபதி மருத்துவம்தான் என்றான நிலைமையில் இருந்து மானிடவியல் அழுத்தி நிற்கும் முழுதளாவிய மருத்துவம் என்ற இலக்கினை நோக்கிய நகர்வும் நம்பிக்கை தருவன. சுதேச மருத்துவ முறைமைகளை மலினப்படுத்தி புறந்தள்ளும் நிலைமைகள் காணப்பட்ட போதிலும் கூட முன்னுதாரணமான ஒன்றிணைக்கப் பட்ட சுதேச நவீன அறிவு திரள் கட்டமைப்புக்களின் வளர்ச்சி நிலைகளை இன்று அதிகளவில் காண முடிகின்றது.

பண்பாட்டு பல்வகைமையுடனான அறிவுத் திரளமைப்பின் வளர்ச்சியிலேயே நிலைபேறான மேம்பாடு தங்கியுள்ளது என்ற இன்றைய விழிப்பின் பயனாய் அறிவைத் தேடி, அறிவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலங்களைத் தேடி மக்களிடம் செல்லும் ஆய்வுப் பயணங்கள் இன்று சமூதாய பங்கேற்புடனான ஆய்வு, தீர்மானங்களை எடுத்தல் என்றவாறு வளர்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுதேச மக்கள், நிலைபேறான வாழ்வுக்கான பரந்த பொது நிலைப்பட்ட அறிவினைக் கொண்டிருக்கின்றார்கள். ஆயினும் இன்று நிலவும் நியம கல்வி அமைப்புக்கள், சுதேச அறிவுத் திரளினை அவ்வறிவின் கற்றல் முறைமைகளை ஏற்றுக்கொள்வதில்லை. இன்றைய கல்வி மரபின் புறந்தள்ளலினால் பெருமளவான சுதேச அறிவுத் திரளை நாம் இழந்துவிட்டோம்.

புதிய விழிப்புணர்வின் பயனாய் உள்ளூர் பண்பாட்டின் வழியான அறிவை மதிக்கவும், அதனை இன்றைய கல்வி முறைமையில் பொருத்தமான முறையில் இணைக்கவும் வேண்டிய இன்று மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் நம்பிக்கை தருவன. இம் முயற்சிகள் பின்வரும் இலக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன:

* நிலைபேறான வாழ்விற்கான சுதேச அணுகு முறைகளை ஆராதித்தல்

* நிலைபேறான சமுதாயத்தை பேணிக்கொளவதில் சுதேச அறிவினதும் மரபுவழியான கற்றல் முறைமைகளினதும் இடத்தினை வலியுறுத்துதல்

* சுதேச அறிவினையும் அதன் கற்பித்தல், கற்றல் செயன் முறைகளையும் தாழ நோக்கும் 'நவீன' கல்வி முறையின் போக்கினை விளங்கிக் கொள்ளுதல்

* இன்றைய பாடசாலை கலைத்திட்டத்தில் சுதேச அறிவினையும், அதன் கற்பித்தல், கற்றல் அணுகுமுறைகளையும் பொருத்தமான முறையில் இணைக்கக் கூடிய வாய்ப்புக்களை இனங்காணல்.

மேற்கண்ட இலக்குகளினடியான முதல் செயல்பாடாக சுதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு அனுபவங்களுக்கான தேடல் அமைகின்றது. சுதேச பண்பாடுகளின் அனுபவமிக்க முதியவர்கள் இந்தத் தேடலின் குவிமையங்கள் ஆகின்றார்கள். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்பது தமிழின் முதுமொழி. இவ்வாறே 'முதியவர் ஒருவர் இறக்கின்ற பொழுது ஒரு பெரும் நூலகமே எரிகின்றது' என்பது ஆபிரிக்காவில் இன்றும் போற்றப்படும் பழமொழி. இத்தகைய பெருமைக்குரிய சுதேச அறிவின் மூலவர்களை நாடி அவர்கள் அறிவு அனுபவங்களை சேகரிக்கும் ஆய்வுக் களங்கள் பலவற்றை இன்று ஆபிரிக்க பண்பாட்டுப் புலங்களில் காண முடியும். நவீன இலத்திரனியல் சாதனங்களின் வழியான ஒளிப்பதிவு முறைமைகளைப் பயன்படுத்திப் பெறப்படும் இவ்வறிவுத் திரளானது ஏனைய புலங்களுக்கும் வழிகாட்டிகளாகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த அனுபவங்கள் எங்கள் புலங்களுக்கும் விரிவுபெற வேண்டும்.

19ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் பெரும்பாலான வளர்முக நாடுகளில் காலனித்துவ அரசுகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட நியம கல்விமுறையானது அரச நிர்வாகிகளை, எழுதுவினையர்களை, ஆசிரியர்களை இன்னோரன்ன தேவைகளுக்கான பயிற்சியாளர்களை உருவாக்கும் கல்வியாக மட்டுப்பட்டுப்போனது. மேலை முதலாளித்துவ தொழில்மயமாக்க உலகின் இலக்குடனான கருத்துருவ அறிவு முறைமையே இங்கு வழங்கப்பட்டது. சுதேச அறிவிற்கோ அல்லது சுதேச கல்வி முறைமைக்கோ மிகச் சிறிய இடமே இருந்தது. பல சந்தர்ப்பங்களில் சுதேச அறிவானது பொருத்தமற்றது, அறிவுபூர்வமற்றது, காலாவதியானது என்ற கருத்தாக்கமும் ஆதிக்கம் பெற்றிருந்தது.

இன்று ஏற்பட்டுள்ள சுதேச அறிவு தொடர்பான விழிப்புணர்வானது பாடசாலைக் கலைத்திட்டத்திலும் கற்பித்தல், கற்றல் செயன்முறையிலும் சுதேச அறிவு - அறிமுறைகளுக்கான இடத்தினை அழுத்தி நிற்கின்றது. நிலவும் கலைத்திட்டத்தினை செழுமைப்படுத்துதற்கான வழிமுறைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலைபேறான எதிர்காலத்திற்கான விழுமியங்களையும், உளச் சார்பினையும் கற்றுக்கொள்ளுதல்**

சுதேச சமுதாயங்கள் தம்சூழமைவுடன் இசைவாக்கம் கொண்டு சூழல் வளங்களை அளவோடு பயன்படுத்துவன; மீள் உற்பத்திக்கான எல்லைகளை அறிந்து செயற்படுவன. நிலை பேறான சுதேச அறிவானது இம்மக்களின் சுற்றுச்சூழல் தொடர்பான விழுமியங்கள் உளச்சார்புகளையும் வெளிப்படுத் துவன. இந்த விழுமியங்களும், உளச்சார்புகளுமே அவர்களின் செயற்பாடுகளை வழிப்படுத்தி நிலைபேறான ஒரு வாழ்வின் சொந்தக்காரர்களாக அவர்களை ஆக்கியது. எனவே சுதேச அறிவு தரும் இந்த விழுமியங்கள் உளச்சார்புகள் பற்றிய கற்றலானது நிலைபேறான எதிர்காலத்திற்கான எங்கள் தூர நோக்கிற்கு வல்லமை சேர்க்கும் எனலாம்.

**பண்பாட்டின் ஊடாகக் கற்றல்**

சுதேச அறிவானது ஏற்கனவே நாம் குறித்தவாறு பண்பாட்டின் பொக்கிஷமாக உள்ளது. மரபுகள், வழக்காறுகள், நாட்டார் கதைகள், நாட்டார் பாடல்கள், நாட்டுக் கூத்துகள், புராணங் கள், பழமொழிகள், தொன்மங்கள் எனும் பல்வேறு வடிவங் களில் இவை காக்கப்பட்டுள்ளன. இப் பண்பாட்டுக் கூறுகளை பாடசாலைக் கலைத்திட்டத்தின் மூலங்களாக ஆக்குவதன் மூலம் சுதேச அறிவினை இன்றைய தலைமுறை மாணவர்களின் வாழும் அறிவுத் திரளாக்கமுடியும். இதன் வழியாக மாணவர் களின் எண்ணக்கருவாக்க எல்லைகள் விரியும். சுதேச புலங்களையும் கடந்து புதிய அனுபவங்களில் பண்பாட்டு அறிவினை பயன்படுத்தும் வாய்ப்புகளும் ஏற்படும். எங்கள் கல்வி அமைப்பில் இவ்வாறான பண்பாட்டு அம்சங்கள் ஆங்காங்கே தலைகாட்டிய போதும் அவை வெறுமனே ரசனை சார்ந்த அல்லது மனனப்பாடங்களாக முடிந்து போகின்றமை யும் இங்கு கவனம் பெற வேண்டும். இந்த பண்பாட்டு செல்வங்களுக்குள் இருக்கின்ற அறிவின் கூறுகளை இனங் கண்டு, இனங்காட்டும் வல்லமை கொண்டவர்களாக எங்கள் ஆசிரிய வல்லமைகள் வளர்க்கப்படுவதும் அவர்களின் ஈடுபாடும் பங்கேற்பும் இன்றியமையாதன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமுறைகளுக் கூடான கற்றல்

சுதேச அறிவினைக் காப்பது என்பது எதிர்கால தலைமுறையினரின் நலன் சார்ந்தது. பாடசாலை கலைத்திட்டத்தில் சுதேச அறிவினை இணைப்பது முதல்படியாகும். இதன்வழி மாணவர்கள் தங்கள் அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பப்பா, தாத்தா, பாட்டி இன்னும் சமுதாயத்து விளங்கும் மூத்தோர் அனைவரிடமும் உறவாடுதலுக்கான களங்களை ஊக்குவிக்கலாம். தம் மூத்தோரை, அவர் அறிவை மதிக்கும் உளச்சார்பையும் இது வளர்த்திடும். இளைய-முதிய தலைமுறையினருக்கிடையிலான தலைமுறை இடைவெளியினை மேவவும் அவர்களுக்கிடையிலான ஒத்திசைவினை மேம்படுத்தவும் இது வழிசமைக்கும். ஒருவிதத்தில் பண்பாட்டு பரிமாற்றத்தினை உறுதிசெய்யும் முகவராகவும் இக்கலைத் திட்ட இணைப்பு பயன்தரும். நவீன வாழ்வின் உலகமயமாக்க அலைகளிடை அடையாளம் தொலைக்கின்ற அவலங்களிலிருந்தும் சுதேச பண்பாடுகள் காக்கப்படவும் இச்சுதேச அறிவுக்கல்வி பெருந்துணையாகும்.

## அறிந்ததிலிருந்து அறியதானவற்றிற்கான கற்றல்

வினைத்திறனான கல்விக்கான தத்துவமாக அறிந்தவற்றிலிருந்து அறியாதனவற்றிற்கு நகர்தல் முன்வைக்கப்படும். இந்த அறிதல் முறையை சுதேச அறிவுக் கல்வியிலும் பயன்படுத்துதல். மாணவர்கள் தத்தம் வாழ்வு புலங்களான கிராமங்களில் தொடங்கி பின்னர் பிராந்திய, தேசிய, உலகளாவிய சூழல் அறிவு என பயணிக்கலாம். பெரும்பாலான சமூகங்களில் எண்ணற்ற சுதேச அறிவு பொக்கிஷங்கள் உள்ளன. பல நூற்றாண்டு கால சூழலுடன் இசைந்த வாழ்வின் சாரங்களாக இவை விளங்குகின்றன. நிலம், காலநிலை, நீர், வனம், வனவிலங்குகள், கனிமங்கள் என பல்வேறு விடயங்கள் தொடர்பாக இவ்வறிவுத் திரள் விளங்குகின்றது. அனுபவ ஞானமாகவுள்ள இந்த அறிவுத்திரளினை பொருத்தமான முறையில் கல்வியில் பயன்படுத்தும் பொழுது அந்த அறிவின் பயன் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்திடும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வகுப்பறைக்கு வெளியிலான கற்றல்**

தம் சூழமைவில் களப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் அதிகளவு அறிவினைப் பெற்றுக் கொள்ளமுடியும். எடுத்துக் காட்டாக விவசாய புலமொன்றில் மண் வகைகள், பயிர் வகைகள் தொடர்பாக உள்ளூர் விவசாயிகளுடனும் அவர்கள் கைக்கொள்ளும் மரபார்ந்த பயிர்ச் செய்கை முறைகள் பற்றியது மான கலந்துரையாடல்கள் இந்தவகையில் பெரும் பயன் விளைக்கும்.

எங்கள் புலங்களில் இன்று பெருமளவிற்கு நவீனத்துவம், அதிகலாபம் என்ற இலக்கில் ஆக்கிரமித்துள்ள பயிர்ச்செய்கை முறைகள் நிலத்தின் வளத்திற்கு கேடான இரசாயன உள்ளிடுகைகள் பற்றிய அனுபவங்களை மாணவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தாலும் உள்ளூர் சுதேச நடைமுறைகள் தொடர்பான மாணவர்களின் கேள்விகள் இன்றைய நடைமுறைகள் பற்றிய மீள் சிந்தனைக்கு வழிசமைக்கும்.

இவ்வாறாக சுதேச அறிவுக் கல்வியில் ஏற்படும் மேம்பாடானது குறித்ததொரு பண்பாட்டுப் புலத்திற்கு மட்டுமன்றி உலகளாவிய மனித சமுதாயத்திற்கும் பயன் தருவதாக அமையும். அதேவேளையில் சுதேச அறிவை இன்றைய காலத்து சமூக ஆட்சி, நியமங்களுடன் பொருத்தமான முறையில் இணைத்துக் கொள்ளாத போது சுதேச அறிவின் உரிமங்களை பிறர் எடுத்துக்கொள்ளும் ஆபத்தும் உள்ளது. எங்கள் பண்பாட்டுப் புலத்தின் வேம்பின் மகத்துவமும் அதன் மருத்துவ பயன் உரிமங்களும் அமெரிக்கமயமான நிலைமை இதற்கான எடுத்துக்காட்டாகலாம். இது சுதேச அறிவை அதன் பண்பாட்டு நியமங்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் இன்றைய அறிவியல் நியமங்களோடு வளர்த்தெடுத்தலின் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது.

அறிவியலின் வளர்ச்சி இத்தகு நிலைகள் வல்லமையான மேம்பாட்டின் விசைகளாக தொழிற்படும். ஆபிரிக்கப் பண் பாட்டுப் புலங்கள் பலவற்றில் இன்று நிகழும் போரிற்குப் பின்னரான மீள்வாழ்வுக்கான நிகழ்ச்சித் திட்டங்களில் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேச அறிவின் வல்லமைகள் பதிவு பெறுவதினை இங்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். குறிப்பாக இரண்டு வருடங்களுக்குள்ளாகவே மீள் குடியேற்றப்பட்ட ஐந்து மில்லியன்களுக்கும் அதிகமான மொசாம்பிக் மக்களின் வாழ்வனுபவங்கள் பற்றிய சமுதாய தலைவர்களின் நம்பிக்கைக் குரல்கள் ஏனைய பண்பாட்டுப் புலங்களுக்கும் வழிகாட்டியாக அமைவன. நிலைபேறான மேம்பாட்டிற்கான பயணத்தில் இத்தகைய மீள் சிந்தனையும், அறிவுத் திரள்களை பொருத்தமாக ஒன்றிணைக்கும் நடைமுறைகளும் நிறைந்த நன்மைகளை தரும் எனலாம்.

## உசாத்துணைகள்


*சட்டோபாத்தியாயா, தேவிபிரசாத்* (n.d) *(தமிழில்: கரிச்சான் குஞ்சு)* **இந்திய தத்துவ இயலில் நிலைத்திருப்பனவும், அழிந்தனவும்**, சென்னை புக்ஸ்

Bernal, J.D (1969) **Science in History,** Pelican

Flavier, J.M (1994) The Regional Program for the promotion of Indigenous knowledge in Asia, in DM. Warren, L.J. Slikkerveer and D. Brokensha (eds) **The Cultural dimension a development: Indigenous Knowledge Systems.** London: Intermediate Technology publications. (pp 479-487)

Levi - Strauss (1970 - 1981) **Introduction to A Science of mythology** I II III & IV Vols: London.

Portes, Alejandro (1976) The Sociology of National Development - Theories and Issues, **American Journal of Sociology,** Vol. 82, No 2. PP 55-85





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# அறிதலின் முறையியல்

சமூகம் தொடர்பான அறிவார்ந்த ,முறையியல் வழிப்பட்ட அறிவாக சமூவியல் வாய்த்துள்ளது. சமூகவியலின் தந்தை எனப் போற்றப்படும் அகஸ்ற் கொம்றின் நேர்க்காட்சி வாதம் இத்தகைய அறிவியல் முறையினை சமூக அறிவியலான சமூகவியலுக்கு வழங்கியது. நேரடியாக நிறுவப்பட்ட உண்மைகளி னடியான இந் நேர்க்காட்சி வாதம் இன்றுவரையான சமூகவியலின் அறிவார்ந்த வளர்ச்சிக்கு அரணாக வுள்ளது. அதேவேளை அந் நேர்க்காட்சி வாதத்தின் மட்டுப்பாடுகளை கையாளும் நோக்கில் மக்ஸ்வெபர் முன்வைத்த மனித செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்யும் அகவய நோக்கும் முக்கியமானது. இவ்வாறே அமைப்பியல், பின்னை-அமைப்பியல் அணுகுமுறைக் கும் இன்றைய அறிவுசார் முறையியல் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்துவன. இன்றைய சமூகவியலின் போக்கினை- அதன் அறிகை முறையினை வளம்படுத்தி நிற்கும் இந் நோக்குகள் தொடர்பான ஒரு தரிசனமாகவே இக்கட்டுரை அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்றின் நேர்க்காட்சி வாதம்

சமூகம் தொடர்பான இயற்கை வழி விஞ்ஞானம் ஒன்றினைக் காண்பதே கொம்ற் அவர்களின் பிரதான இலக்காகும். இது மனித குலத்தின் கடந்தகால வளர்ச்சியை விளக்குவதுடன் வருங்காலம் பற்றிய எதிர்வு கூறலாகவும் அமைந்தது. ஒழுங்கின்றி விபத்து போலவும், விதிகளற்றும் கிடந்ததாக கருதப்பட்ட இயற்கைப் பொருண்மைகளிடை ஓர் ஒழுங்கினைக் காண்பதில் இயற்கை விஞ்ஞானம் வெற்றி கண்டதாகக் கொம்ற் வாதிட்டார். இவ்வாறே சமூகத்தையும் விஞ்ஞான முறையிற் கற்கவேண்டும் என்றார். இதற்கான ஒரு முறையியலாகவே Positivism என்பதனை இயற்கை விஞ்ஞான நுட்பங்களின் மாதிரிகளிலிருந்து உருவாக்கினார். தமிழில் நேர்க்காட்சி வாதம், புறமெய்மை வாதம், புலனறிவாதம், நிச்சயவாதம், எனும் பெயர்களால் சமூகவியல் புலங்களில் இது வழங்கப்படுகின்றது. நேராகக் கண்ட உண்மைகளையன்றி பிற கொள்கைகள் எதனையும் அடிப்படை யாக கொள்ளாத தரிசனமாக இது அமைகின்றது. அறியப்படாத பிரபஞ்ச இரகசியங்களைத் தேடி இந்தத் தரிசனம் கவலை கொள்வதில்லை. மனித வாழ்விற்குப் பயனான அறிவே இதன் எல்லையாகும். சமூக நலனும் சீர்திருத்தமுமே இதன் நோக்கமாகும்.

* அவதானம்
* பரிசோதனை
* ஒப்பியலாய்வு

என்பவற்றின் வழியாகவே சமூக முன்னேற்றம், சமூக ஒழுங்கு என்பற்றிற்கான விதிகளை விளங்க முடியும் என்றார் கொம்ற். அனைத்து விஞ்ஞான கோட்பாடுகளும் அவதானிக் கப்பட்ட உண்மைகளிடியாகவே அமையவேண்டும். அதே வேளை யாதேனும் ஒரு கோட்பாட்டின் வழிகாட்டலின்றி உண்மைகளை அவதானித்தலும் இயலாது. சமூக உண்மைகள் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதேனுமொரு கோட்பாட்டுடன் இணைத்து நோக்கும் போது விஞ்ஞான ரீதியான அர்த்தத்தைக் காணமுடியும். அவதானங்களைத் தனித்து மேற்கொண்ட போதும் அவை புள்ளிவிபரங்கள், மற்றும் குறித்த விடயத்தின் இயங்கு விதிகள் என்பற்றுடன் இணைத்தே நோக்கப்பட வேண்டும் என்று கொம்ற் தனது முறையியலில் விளக்குவார்.

சோதனை முறை கடினமானது. சமூக நிகழ்வுகளைப் பொறுத்தவரையிற் பகுதி நிலையிலேயே பயன்படுத்தக் கூடியது. எல்லா வேளைகளிலும் சமூக நிகழ்வுகள் தொடர்பான நேரடி அவதானம் சாத்தியப்படாத போது இம்முறை பெரிதும் துணையாகும். குறிப்பாகச் சமூக செயற்பாட்டில் பாதிப்பான நோய்நிலை ஏற்படுகின்றபோது சில வகையான பரிசோதனை முறைகள் சாத்தியமாகலாம். நோய் நிலைக்கு முன்னைய நிலைமைகளை ஒப்பிடுவதன் மூலம் சமூக அறிவு இங்கே பெறப்படும். 17ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கால பிரான்சிய சமூகத்தில், தான் கண்ட அனுபவங்களின் அடிப்படையாகவே கொம்ற் இதனை முன்வைத்தார்.

சமூகவியலாளர்களின் விஞ்ஞான முறைமையியலின் மையமாக கொம்ற் குறிப்பிடும் ஒப்பியல் ஆய்வும் முக்கியமானது. மனித சமூகங்களை விலங்கினங்களோடு ஒப்பிடும் போது, சமூக உறவுகள் தொடர்பான அடிப்படைக் கீற்றுக்களை அறியமுடியும். அவ்வாறே மனித உயிர்களுக்கும், விலங்குகளுக்கிடையிலான வேறுபாடு களையும் காணமுடியும். மனித சமூகங்களுக்கிடையிலான இத்தகைய ஒப்பிடுகளின் வழியான அறிவு, சமூகவியலுக்குப் பெரிதும் துணையாகவுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் முற்றிலும் தனித்தனியாக இயங்குகின்ற மனித சமூகங்களுக் இடையிலான ஒப்பீடாக இது அமைந்தது. இம்முறையானது சமூகப் படிமலர்ச்சியின் வேறுபடும் நிலைமைகளை தேடிக் காண்பதில் துணையானது. மனித குலம் முழுமையும் தனித்த, சீரான, ஒரே பாதையில் முன்னேற்றம் கண்ட போதிலும் வெவ்வேறு சமூகங்களும் பெரிமளவிற் சமனற்ற வளர்ச்சி நிலைகளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டினை கொண்டிருப்பது, இங்கு கவனத்திற்குரியது. இந்த நிலைமைகளுக்கான காரணங்கள் இன்னமும் சிறியளவிலேயே அறியப்பட்டுள்ளன. மேம்பாட்டின் சில படிநிலைகள் தொடர்பாக நாகரிகங்களின் வரலாறு, எந்த விதத் தடையங்களையும் விட்டுச் செல்லாத போது ஒப்பியல் முறையில் இதனைக் காண்பது சிரமமானது என்பது இங்கு கவனத்திற்குரியதானது.

மரபுவழியியலான இம்மூன்று விஞ்ஞான முறைகளையும் சமூகவியல் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு மேலாக இவற்றில் வரலாற்று முறையின் (Historical method) இன்றியமையாமையும் கொம்ற் பெரிதும் அழுத்தினார். மனிதத்துவத்தின் தொடர் நிலைகளை வரலாற்று ரீதியில் ஒப்பிடும் விஞ்ஞான முறையியலின் வழியாகவே அரசியல் தத்துவம் உருவானதுடன் விஞ்ஞானத்தின் துணை அடுக்காகவுள்ளது என்றார் கொம்ற். மனுக்குலத்தில் படிமலர்ச்சி நிலைகளை வரலாற்று ரீதியின் வழி ஒப்பிடுவதன் வழிதான் சமூகவியல் விசாரணையின் மைய நிலை நிறைவு காணும். வரலாற்று ரீதியான படிமலர்ச்சியினை அறியாத சமூகவியல் அர்த்தமற்றது என்பதும் கொம்றின் அழுத்தமான கருத்து நிலையாகும்.

தொடக்க காலத்தில் அனைத்துப்பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் விஞ்ஞானத்தில் இருப்பதாகக் கொம்ற் நம்பினார். பின்னாளில், சமூகவியலின் வளர்ச்சியுடன் விஞ்ஞானம் தான் தோற்றுவித்த நோய்களை மட்டுமே தீர்க்கவல்லது எனக்குறிப் பிட்டார்.

### அரசியல் படிமலர்ச்சியில் மூன்று கட்டங்கள்

ஆரம்ப காலத்து செயின் சைமனுடன் இணைந்து செயற் பட்ட வேளையிலேயே மனித குலத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த தொடர் மாற்றங்களைக் கொம்ற் ஆராய்ந்தார். விஞ்ஞான ரீதியான ஒப்பியல் ஆய்வின் வழி கொம்ற் முன்வைத்த முக்கியமான அறிவுக்கனியாக மனித முன்னேற்றத்திற்காக விதி அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் படிமலர்ச்சியின் மூன்று படிநிலைகள் பற்றி The Law of Three Stages of intellectual evolution எனும் தலைப்பிலான கொம்றின் ஆக்கம் அமைந்தது. (Comte, 1830) மனிதப்பண்பின் வளர்ச்சி யுடனும், தனிமனிதர்களின் வாழ்க்கை வட்டத்துடனும் வாழ்க்கை பற்றிய மனித விளக்கம் எவ்வாறு அமைந்தது என்பதைக் கொம்ற் இந்நூலிலே தெளிவாக விளக்கினார். ஒரு தனியனின் மன வளர்ச்சிக்குச் சமாந்தரமாகவே மனித இனப் படிமலர்ச்சியும் அமைந்தது என்றார். மனித இனமானது குழந்தைப்பருவத்து அர்பணிப்பான நம்பிக்கையாளராகவும், குமரப்பருவத்து விமர்சன மனபாங்குடனான நுண்பொருட் கோட்பாட்டுவாதியாகவும், முதிர்பருவத்து இயற்கையான தத்துவவியலாராகவும் விளங்கு வதாக கொம்ற் கூறினார்.

எங்கள் அறிவின் ஒவ்வொரு கூறும் பின்வரும் மூன்று படிநிலைகளைக் கடந்து வந்தது என்பது கொம்றின் படிமலர்ச்சி விதியாகும். முதல் நிலையான இறையியல் நிலைமையில் மனிதமன மானது உலக நிகழ்வுகளுக்கெல்லாம் இயல்நிலை கடந்த சக்திகள் தான் காரணம் என நம்புகிறது. இறை சக்திகள் தாம் உலக உயிர்களை இயக்குவன; செயல்களை நிர்ணயிப்பன; அனைத் திற்கும் அவையே மூலகாரணம் என்பது இக்காலத்திற்குரிய நம்பிக் கையாகும். இது சமயம் உண்டான பருவகாலம். அம்மை நோய், கொலரா போன்றவற்றினை தெய்வத்தின் கோபமாய், சாபமாய் சமூகங்கள் கொண்ட நம்பிக்கை இதன் வழியது. இவ்வாறே வெற்றி, வெள்ளம், பஞ்சம் எனத் தாம் எதிர் கொள்ளும் அனைத்திற்கும் தெய்வத்தை அல்லது ஆவியை காரணமாகக் காணும் இந்நிலையிலும் மூன்று கட்டங்களை அவதானிக்கலாம். தொடக்கத்தில் ஆவிக் கொள்கை (Fetishism), பின்னர் பல கடவுள் கொள்கை (Polytheism), இறுதியாக ஒரு கடவுள் கொள்கை (Monotheism) என இறையியல் நிலையின் துணை நிலைகளையும் இனங்காட்டினார் கொம்ற்.

இரண்டாவது நிலையானது, தத்துவ ஞானம் வளர்ச்சி கண்டதன் விளைவானது. தான் கண்டவற்றின் பின்னாதாரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமாத்திக உண்மைகளைக் கற்பனைக் கருத்துருவாக காணும் பருவமாக இது அமைகின்றது என்றார் கொம்ற்.

| | |
|---|---|
| முதிர் நிலை - | நேர்காட்சிவாத நிலை (Positive Stage) *(1800க்குப்பின்)* விஞ்ஞானத்தின் மேலான நம்பிக்கைக்காலம் |
| உருமாற்றநிலை- | நுண்பொருட்கோட் பாட்டுநிலை (Metaphysical Stage) *(1300 1800)* இறையியல் நிலை (Theological Stage) *(1300 முற்பட்டது)* |
| குழந்தைப்பருவம்- | இயல்நிலை கடந்த சக்திகள் மீதான நம்பிக்கை |

மூன்றாவது நிலையான புறமெய்மை நிலையானது, கற்பனை நீங்கிய விஞ்ஞான அறிவின் வளர்ச்சிப்பருவமாகும். அறிவுக்கு எட்டியதையே அளக்கின்ற இந்தப்பருவமே மனித மனச் செயற்பாட்டின் உச்ச நிலையான மெய்யறிவியல் நிலை என்பது கொம்றின் கருத்து. இந்நிலையில் மனித மனமானது நிகழ்வுகளின் அமைப்பு, உறவின் தன்மை, புலன் வழியாகக் கண்டறியும் தன்மை ஆகிய வழிமுறைகளிலேயே தான் அறிவைத் தேடுகின்றது. புலன் வழி அறிய முடியாதவற்றை விட்டு, புற மெய்மையான நிகழ்வுகள், இயக்கங்களின் விதிகளையே அறிய விளைகின்றது. மனித சிந்தையில் விளைகின்ற இந்த மாற்றமானது சமூகத்தின் பல்வேறு அமைப்புகளிலும் மேம்பாட்டினை விளைவிக்கின்றது என்பார் கொம்ற்.

சமூகம் பற்றிய சிந்தனை இன்னமும் இறையியல் நிலையிலும், நுண் பொருட்கோட்பாட்டு நிலையிலும் அதிகளவு இருப்பதாகக் கொம்ற் கருதினார். இந்தவகையில் முதன்முதலாக புறமெய்மையுடன் தொடர்புகொள்ளும் அறிவாக வானியலைக் கொம்ற் இனங் காண்பார். நிறைவான உச்ச நிலை வளர்ச்சியாகப் புறமெய்மை வழி சமூகவியல் வளர்ச்சி காண்கின்றது என்பார் கொம்ற். மனித நடத்தை, பண்பாட்டுக் கோலங்களின் சிக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளிடை இத்துறையின் வரவு தாமதமானது என்று குறிப்பிடுவார்.

கொம்றரைப் பொறுத்தவரை மனித மனத்தின் ஒவ்வொரு படிநிலையும் அதன் உப படிநிலைகளும் ஒன்றிலிருந்து ஒன்று என்றவாறே தொடரக் காணலாம். பழைய அமைப்பு அழியாமல் புதியது தோன்ற முடியாது. புதியதன் தோற்றத்திற்கு பழைய உள ஒழுங்கு முற்றாக அகலுதல் இன்றியமையாதது ஆகும். இந்த நிலை எய்தும் வரை வரவிருக்கும் கால இயல்புகளைப் புரிதலும் இயலாது. மனித மனத்தின் முற்போக்கான விடுதலையின் வளர்ச்சிப்படி நிலைகளிளேயே கொம்றின் சிந்தனை குவிந்திருந்தது. கூடவே இந்த படிநிலைகளுடன் தொடர்புடையதாக, சமாந்தரமாக காணப்பட்ட சமூக நிறுவன அமைப்புக்கள், சமூக ஒழுங்கின் தன்மை, மற்றும் மனித வாழ்வின் பொருளாதார, உணர்வு நிலைமைகள் அனைத்தையும் இணைத்தும் நோக்கினார் கொம்ற். இவை அனைத்தும் மனுக்குல நன்மையின் அடிப்படையில் அமைவதாகும். நேர்காட்சிவாத நிலையில் அறிவியல் முன்னேற்றம் எய்தப்படுவதாயும் நம்பினார் கொம்ற்.

முதற்படிநிலையான இறையியல் தொடர்பாகவே ஒப்பீட்டளவில் விளக்கமான ஆய்வுகளை கொம்ற் முன்வைத்துள்ளார் எனலாம். இறையியல் நிலையை ஐந்து துணைப்பிரிவுகளாக வகுத்து இவை ஒவ்வொன்றும் முன்னேற்றத்திற்கு வழங்கியுள்ள பங்களிப்பினை இனங்காட்டுவர். துணைநிலைகள், அவற்றின் சமூக பங்களப்புக்கள் சார்ந்த கொம்றின் வகைப்பாடு பின்வருமாறு அமையும்.

* போலிப் பொருள் வணக்கம் -குடும்பம்
* பல் தெய்வ வணக்கம் - அரசு, நிலவுடைமை
* அறிவார்ந்த பல்தெய்வ விளக்கம் -அறிவார்ந்த பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமூக மட்டத்திலான ஒரு தெய்வவணக்கம் -தந்தையர் தேசம்

* தற்காப்பு நிலையான ஒரு தெய்வவணக்கம் - பெண்களினதும் தொழிலாளர்களினதும் விடுதலை

ஒவ்வோர் உளப்பருவத்திற்குமான இயல்புகளையும் அவற்றிகான சமூக அமைப்புக்களையும், அரசியல் ஆதிக்கங்களையும் கொம்ற் இணைத்து விளக்கினார். இறையியல் நிலையானது, குருமாரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது; இராணுவத்தால் ஆளப்படுவது. நுண்பொருட் கோட்பாட்டு நிலையானது; மத்திய கால மறுமலர்ச்சியுடன் இணைத்து நோக்க கூடியது. இது திருச்சபையினதும் சட்டத்தரணிகளினதும் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. இவ்வேளை உதயமாகும் புறமெய்மை நிலையில், தொழில்துறை நிர்வாகிகளினதும், விஞ்ஞான ஒழுக்க வழிகாட்டிகளினதும், ஆட்சி இருக்கும் என்றார் கொம்ற். இவ்வாறே முதல் நிலையில் குடும்பமே உலகப் பொதுவான சமூக அலகாகும். இரண்டாவது நிலையில் அரசு தான் சமூக முதன்மை பெறும். மூன்றாவதில் மனித இனமே செயற்பாட்டுக்குரிய சமூக அலகாகும். இவையனைத்துமே நிகழும் முற்போக்கான உளவிருத்தி மாற்றங்களுக்கு ஏற்பவே தோற்றம் பெறும்.

மனித முன்னேற்றத்திற்கான விதிகள் பற்றிய தமது விளக்கத்தில் அறிவியல் படிமலர்ச்சியின் அவசியத்தினை அழுத்திய போதிலும், ஏனைய செல்வாக்கு காரணிகளையும் ஏற்றுக் கொள்கிறார். சமூக முன்னேற்றத்தின் வேகத்தினைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாக குடித்தொகை வளர்ச்சியினைக் குறிப்பிடுகிறார். அதிகரிக்கும் குடித்தொகை, இருப்புக்கான பதில் வழிகளைக்காண ஊக்குதலாகும்; புதிய தேவைகளினடியாக அறிவார்ந்த ஒழுக்க விசைகளும் வளர்ச்சி காணும்; பௌதீக நிலையிலான அசமத்துவங்களும் இல்லாதொழிக்கப்படும். இவற்றினைவிடச் சமூகப் படிமலர்ச்சிக்கான மற்றொரு காரணியாக தொழிற்பிரிப்பையும் கொம்ற் இனங்காட்டுவது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியலின் படிநிலைகள்

விஞ்ஞானத்தின் படிமுறையமைப்புத் தொடர்பான கொம்ற் கருத்துநிலை அவரது படிமலர்ச்சி விதியின் வழியானது. வேறுபடும் துறைகளிடை தர்க்க ரீதியான தொடர்புண்டு, ஒவ்வொரு தொடர் நிலையும் முன்னைய காலத்துடன் கூட்டிணைவு கொண்டுள்ளது. அவற்றின் முன்னேற்றம் வேகங்களில் வேறுபடும்.

அறிவியல் படிமுறையில் கணிதத்தை அடித்தளத்தில் வைத்த கொம்ற் அதற்கான காரணத்தையும் தெளிவாக கூறுவார். கணிதம் காட்டும் விடயங்கள் எங்கும் எதிலும் கண்டறியும் தன்மை கொண்டவை; புறபுலன்களால் அறிவதற்கு அப்பால் கருத்துருவ நிலையில் தெரிந்து கொள்ளக் கூடியவை. இந்த அடிப்படையில் தான், கணிதவியலை மனிதனின் ஆதார கருவியாக வைக்கிறார் கொம்ற். கணித அடிப்படையில் மனித மனம் சிந்தனை வெளியில் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். ஏனைய அறிவியல்கள் கணிதத்தைச் சார்ந்து அதனைப் பயன்படுத்துகின்றன; கணிதமோ சுதந்திரமாய்ச் செயற்படுகின்றது.

வானியல் நிகழ்வுகள் எளிமையாய், பொதுவாக மாறாத் தன்மை கொண்டவையாய் விளங்குகின்றன. மேலும் வானியல் இயக்கங்களை அளத்தலில் கணிதத்தின் துணை இன்றியமை யாததாய் உள்ளால் கணிதத்திற்கு அடுத்ததாக வானியலை வைத்தார் கொம்ற். பௌதீகவியலானது இரசாயனவியலை விட அதிக பொதுத்தன்மையும், சுதந்திரத்தன்மையும் கொண்டதால் வானியலுக்கு அடுத்த படியில் பௌதீகவியலையும், அடுத்து இரசாயனவியலையும் வைப்பதாகக் கூறுகின்றார் கொம்ற். உயிரியலானது தனக்கு முன்னைய அனைத்து அறிவியல்களையும் சார்ந்திருப்பதனால் ஏனையவற்றின் மேலாக உயிரியலை வைக்கி றார் கொம்ற். விஞ்ஞானங்களின் படிநிலையில் சமூகவியலை உச்ச நிலையில் வைப்பார் கொம்ற். ஏனைய அனைத்து விஞ்ஞானங்களும் சமூகவிஞ்ஞானங்களுக்கான தயார் நிலைகளே என்றும் குறிப்பிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்ற்றின் நேர்க்காட்சிவாத கருத்துக்கள் பல்வேறு விமர்சனங்களை எதிர் கொண்டமையும் இங்கு நோக்கற்பாலது. அறிவியல் முன்வைத்த அவதான முறைகள் நிச்சயமற்றவை. அவதானங்களை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் முன் அனுபவங் களுடனேயே மேற்கொள்கிறார்கள். கூடவே சில இலக்குகளை மையமாகக் கொண்டும் அவற்றினைச் செய்கின்றார்கள். இலக்குச் சாராத தரவுகளை புறக்கணிக்க வேண்டும் என்றும் சொல்கின் றார்கள். இவற்றுக்கு அப்பால் பெரும்பாலான அவதானங்கள் சில கொள்கைகளை நிறுவுவதற்கான அல்லது மறுப்பதற்கான அவதானங்களாக அமைந்திருப்பதும் கவனத்திற்குரியது. மேலும் பெறப்படுகின்ற தரவுகளை பதிந்து கொள்வது என்பதும் ஒரு மனித நடத்தையாக, மொழி சார்ந்த செயற்பாடாக அமைவதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவதானத்தினை பதிபவரின் கருத்தியல் அவர் சார்ந்த மொழி வெளிப்பாட்டுத் தன்மை அவதானங்களை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளின் மட்டுப்பாடு என்பன பெறப்பட்ட தரவுகளின் தன்மையில் செல்வாக்கு செலுத்துவன. இந்தவகையில் தரவுகள் சார்ந்த அகவயத் தன்மை (subjective), கவனத்தில் கொள்ளப் பட வேண்டிய முக்கிய விடயமாகின்றது. இந்த விமர்சன இடை வெளிகளை நிரப்புவனவாகவே மக்ஸ் வெபர் என்ற சமூகவிய லாளரின் கருத்தாக்கங்கள் எமக்காயின.

## வெபரின் அகவய அர்த்தங்கள்

வெபரின் அணுமுறையினை அக்காலத்து ஜேர்மனியிற் செல்வாக்குச் செலுத்திய அறிவியற் சூழலின் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ள முடியும். சமூகவிஞ்ஞானங்கள் தொடர்பான வெபரின் விளக்கங்கள், அவரது கால நேர்காட்சி வாதத்தின் விளைவாகவும் எதிர்வினையாகவும் அமைந்தன எனலாம். புறமெய்மைவாத உளவியளார்கள், தமது நோக்கில் மனிதனைப் பற்றிய உலகளாவிய பொதுமைப்படுத்தல்களைச் செய்தார்கள். வெளித்தெரிகின்ற, மீள மீளச் செய்யப்படுகின்ற நடத்தைகளை மட்டுமே இவர்கள் கருத்திற் கொண்டார்கள். குறிப்பட்ட காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் தொடர்பாக மனிதரின் ஒத்த செயற்பாடுகளையே தம் பகுப்பாய்விற்கென இவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

இயற்கை, சமூகவிஞ்ஞானங்கள் இரண்டினதும் இலக்குகள் அடிப்படையில் ஒன்றானவை எனும் நேர்க்காட்சி வாதிகளின் கருத்தை வெபர் நிராகரித்தார். மனிதர் ஏனைய பொருட்களி னின்றும் வேறுபட்டவர்கள்; வெளிப்படையான நடத்தை களின் வழி மட்டுமன்றி, அவற்றிற்குப் பின்னால் உள்ள ஊக்கங்களின் வழியாகவும் விளங்கப்பட வேண்டியவர்கள் என்பது வெபரின் கருத்தியல். ஜேர்மானிய பண்பாட்டாளர்களினதும் வரலாற்றின தும் இராச்சியமாக விஞ்ஞானம் கருதப்படுவதினை வெபர் ஏற்றுக் கொள்ளவில்லை. இயற்கை உலகினை ஆளும் ஒழுங்குகளைப் போன்றதே, மனித செயற்பாடுகளும், எனினும் சட்ட ரீதியான புதுமைப்படுத்தல்களைச் செய்வது சாத்தியமானது அல்ல என்கிறார் வெபர். விஞ்ஞான முறையியலைப் பொறுத்தவரை அது இயற்கை விஞ்ஞானமோ சமூக விஞ்ஞானமோ பொதுமைப் படுத்தல், சாரமாகத் தொகுத்துக் கூறல் என்ற படிமுறைகளையே எப்பொழுதும் கொண்டிருக்க வேண்டுமென வரலாற்றியலாளருக்கு முரண்பட்ட கருத்தையே வெபர் கொண்டிருந்தார். பொதுமைப் படுத்தலை வெபர் ஏற்றுக் கொண்ட போதும், மனிதரில் பிரயோகிப் பதில் எச்சரிக்கையாக இருந்தார். சமூகவிஞ்ஞானங்களின் பொருள் இயற்கை விஞ்ஞானங்களின்று வேறுபடுவதால், மனிதப் பண்பாடு தொடர்பான கற்கைகளிற் பொதுமையாக்க முறையியலை மீளமைத்தலின் அவசியத்தினை வலியுறுத்தினார். இந்தத் தேவையினை நிறைவுசெய்யும் பொருட்டே, இன்று விதந்து போற்றப்படும் இலட்சிய வகை (Ideal Type) என்ற தம் கோட்பாட்டினை உருவாக்கினார். இவற்றிற்குப் புறம்பாக விழுமியச் செல்வாக்குடன் இணைந்த பிரச்சினைத் தேர்வு, சமூக ஆய்வில் நடுநிலைமையான விழுமிய முறை எனும் வெபரின் கருத்தாக்கங்களும் கவனத்திற்குரியன.

வெபரின் நோக்கில் சமூக, இயற்கை விஞ்ஞானங்களுக் கிடையிலான வேறுபாடுகள், ஆய்வாளர்களின் அறிக்கை உள்நோக்கங்களினடியாகவே வேறுபடுகின்றன. இத்தேர்வானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர்களின் விழுமியங்களினாலும், அவர் சார்ந்த குழு ஆர்வங்களினாலும் தீர்மானிக்கப்படுகின்றன. இயற்கை விஞ்ஞானங்களினைப் போலன்றி சமூகவிஞ்ஞானங்களில் இந்நிலைமையைக் காண எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைத்தார் வெபர். புவியீர்ப்பு என்ற எண்ணக்கரு புவியில் எங்கெங்கு காணிலும் ஒரே தன்மையாய் அமைந்திருக்கும். ஆனால், முரண்பாட்டுச் செயல் என்பது வேறுபட்ட நிலைகளில், வெவ்வேறு வழிகளில் விளக்கப்படலாம். ஆய்வாளர்களின் விழுமியங்கள் ஆய்வு பொருள்சார்ந்த முதன்மையைத் தீர்மானிக்கலாம்.

இயற்கை விஞ்ஞானிகள் இயற்கை நிகழ்வுகள் தொடர்பான உண்மைகளைக் காண்பதில் ஆர்வமாகவுள்ளனர்; இவை தொடர்பான கருத்துருவ விதிகளை இவர்களால் வகுக்க முடிகின்றது. இவ்வாறான விதிவடிவ பொதுமையாக்கல்களைச் செய்யச் சமூக விஞ்ஞானிகள் முற்படும் போது, குறித்த தன்மைகளுடன் செயற்படும் பாத்திரங்களையும், அந்தச் செயல்களுக்கு அவர்கள் கொள்ளும் அர்த்தங்களையும் காண்பதில் ஆர்வமாய் இருக்கின்றார்கள். சமூகவிஞ்ஞானிகள் பொதுமையாக்கல் முறைகளைப் பயன்படுத்தும் பொழுது யதார்த்த மாதிரிகள், ஒத்த கூறுகளினடியாகவே தமது முடிவுகளை பெறுகின்றனர். தனியன்களின் செயல்கள் தனத்தனியாகவே அறியப்பட்டு அவற்றிலிருந்தே கோட்பாட்டு புதுமையாக்கம் பெறப்படும். தனிநபர் அணுகுமுறையானது, குழுநிலைக் கூறுகளைப் புறக்கணித்து, பொருண்மையின் குறிப்பான கூறுகளிலேயே கவனம் செலுத்தும் நிலையாகும். இந்த இரண்டு அணுகுமுறைகளுமே ஏற்றுக்கொள்ளக் கூடியன தான். இவற்றுள் ஒன்றைவிட ஒன்று முதன்மையானதென்றோ சிறந்ததென்றோ கூறமுடியாது.

**அறிவியலின் அறமாக நடுவுநிலைமை.**

சமூக அறிவியல்களின் மெய்யியல் தொடர்பான வெபரின் மற்றொரு கருத்தாக விழுமிய நடுநிலைமையைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையியலின் வழி ஆய்வாளரின் விருப்பார்வச் சிந்தனைக்குள் கட்டுப்படாத நிலையில் உண்மையைக் காண்பதே அவர் நோக்காகும். ஒரு பிரச்சினையைச் தேர்கையில் ஆய்வாளர் நடுநிலைமையாளராக இருக்க வேண்டும் என்பார் வெபர். உண்மையைத் திரிவுபடுத்தும் தம் உணர்வுகளை மறுப்பதுடன், புறத்திருந்து வரக்கூடிய அழுத்தங்களைத் தடுப்பவராகவும் ஆய்வாளர் அமைய வேண்டும் என்பார். விஞ்ஞானம் நடுநிலை விழுமியத்துடன் விளங்க வேண்டும். அரசு, நண்பர் என்ற செல்வாக்குகளுக்கு அப்பால் தம் புறவயத்தன்மையில் வழுவாத விஞ்ஞானிகள் வேண்டும். தாம் பெற்ற தரவுகளில் தமது விழுமியங்களை நுழைக்கக் கூடாது. தம் விருப்பார்வங்களுக்குப் பணியாது ஆய்வு தரும் முடிவுகளை அவ்வாறே வெளியிட வேண்டும். இதன்வழி விழுமிய நடுநிலை என்பது, விஞ்ஞானி களுக்கான நியமக்கட்டளைகள் ஆகும். விஞ்ஞானி என்ற தம் பாத்திரத்தை விஞ்ஞானத்தின் அறங்களின் வழி நின்றே நாம் நிறைவு செய்ய வேண்டுமென வெபர் உறுதியாகக் கூறுவார். அத்துடன் இதுதான் சரியான விழுமியம் என்று தீர்ப்புச் சொல்லவல்ல பாத்திரமாகத் தம்மை விஞ்ஞானிகள் கருதுவது சரியல்ல; உண்மைகள் மதிப்பீடுகளின் மேல் செல்வாக்குச் செலுத்துதல் கூடாது. உண்மைகளும் விழுமியங்களும் தர்க்க ரீதியாக ஒன்றிலிருந்து ஒன்று சுதந்திரமானவை தொடர்பான உண்மைகளின் துணையுடன் விழுமியங்களை மதிப்பிட முடிந்தாலும் அவை ஒன்றில் ஒன்று தங்கியவை அல்ல என்பது வெபரின் உறுதியான கருத்தாகும்.

## சமூகவியல் சார்ந்த அறிவியல்

சமூகவியல், சமூகச் செயல் தொடர்பான முழுமையான தொரு விஞ்ஞானமென மக்ஸ் வெபர் கருதினார். சமூகவியலைச் சமூக அமைப்பின் வழிகண்ட தம் முன்னோரிடமிருந்து மக்ஸ் வெபர் வேறுபடுகின்றார். தனிமனிதப் பாத்திரங்களிலேயே வெபரின் குவிமையமிருந்தது. வெபரின் பார்வையிற் சமூகவியலானது, சமூகச்செயலை விளங்கி, அதன் வழி செயலுக் கான காரண விளைவுகளைக் காணும் ஒரு விஞ்ஞானமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகிறது. குறித்த ஒரு வரலாற்று நிலைமையில், ஒருவர் தமது செயலுக்கு அகவயமாய் கொடுக்கின்ற அர்த்தத்திலேயே வெபரின் குவிமையம் இருந்தது. அர்த்தம் தவிர்ந்த நடத்தை என்பது சமூகவியலுக்கு அப்பாற்பட்டதென வெபர் வாதிடுகின்றார்.

தொடக்கத்திலேயே நடத்தை, செயல், சமூகச்செயல் என்பவற்றினை வேறுபடுத்தினார் வெபர். நடத்தை என்பது செயலாகாது. யாதேனுமொரு நடிகரும் ஒரு தொகுதி பாத்திரங் களும் வேண்டும், அல்லது ஒரு பண்பாடும், அதற்கான சில அர்த்தங்களைத் தருவோரும் வேண்டும். மனித உயிர்கள் இயந்திரப்பாங்காக இயங்குவதில்லை. பரஸ்பர உள்நோக்கங்களின் எதிர்பார்ப்புக்களைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே அர்த்தமுடன் ஒருவரோடு ஒருவர் இடைவினை கொள்கின்றார்கள். எனவே ஒரு செயல் சமூகத்தன்மையானதாக, அது ஏனையோரை மையமாகக் கொண்டமைதல் இன்றியமையாதது. சமூகச் செயலின் நிகழ்வுகளும், மனித நிகழ்வுகளின் ஒழுங்கும் அகவய அர்த்தங்களின் வழியேதான் விளங்கிக் கொள்ளப்படலாம். எனவே வெபரின் மனிதச் செயல் என்ற சட்டகமானது, செயலைச் செய்பவரது அகவயக்காரணிகளை, அவற்றிற்குப் பொறுப்பான ஊக்கங்களை, செயலின் பரந்த உள்ளடக்கத்தைக் கருத்திற் கொள்வதனடியாகவே புரிந்துகொள்ள முடியும் என்பதனையே வலியுறுத்துகிறது எனலாம்.

வெபரின் பார்வையில் புரிதல் இரண்டு வகைகளில் சாரப்படுத்தலாம்.

* நேரடி அவதானத்தின் வழியான புரிதல்
* அகவய அர்த்தங்களை விளங்கும் புரிதல்

நேரடி அவதானத்தின் வழியான புரிதல் என்பது, மேலும் வகைப்படுத்தப்படலாம். கருத்துக்களின் நேரடித் தர்க்கரீதியான புரிதல், தர்க்க ரீதியற்ற மனவெழுச்சி எதிர்விளைவுகளின் அவதான ரீதியான புரிதல், செயலின் தர்க்கரீதியான புரிதல், செயலின் தர்க்கரீதியான அவதான வழிப்புரிதல் என அவை அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒரு செயலின் அகவயமான அர்த்தத்தை நேரடி அவதானத்தின் மூலம் விளங்கிக்கொள்ளும் போது, அது கருத்துக் களின் தர்க்கரீதியான புரிதலாகின்றது. தனியங்களின் மன வெழுச்சியை முகபாவ அங்க அசைவுகள் போன்றவற்றின் வழி புரிதல் மனவெழுச்சி, எதிர்ச்செயல் பற்றிய தர்க்கரீதியற்ற புரிதலாகின்றது. வெளிப்படையாகத் தெரியும் நடத்தை அல்லது செயல்களின் வழியான புரிதலே தர்க்கரீதியான அவதானவழி புரிதல் ஆகின்றது. ஒருவரின் செயல்கள், மனவெழுச்சிகள் அவர்களின் வார்தைகளின் அகவய அர்த்தங்கள் போன்றவற்றினை அவர் ஊக்கல்களின் வழி நாம் புரிதலே, விளக்கரீதியான புரிதல் எனப்படும். இத் தர்க்கரீதியான புரிதலின் போது ஒரு தனியன் என்ன செய்கிறான் என்பது மட்டுமன்றி, ஏன்அவ்வாறு செய்கிறான் என்பதினையும் அறிவது அவசியம். எடுத்துக்காட்டாக ஒருவர் ஒரு பூந்தோட்டத்தில் பூக்கொய்கிறார் என்று எடுத்துக் கொண்டால், அதனை விற்பதற்காக அல்லது தன் அன்புக்குரிய ஒருவருக்குக் கொடுப்பதற்காகவா அன்றேல் கோபத்தினால் மரத்திலிருந்து கொய்கிறாரா எனக் காண வேண்டியது அவசியம்.

வெபரைப் பொறுத்தவரை சமூகப் பொருண்மையின் உச்சப் புரிதலானது போதுமானளவு அர்த்தமட்டத்தை விளக்குதலில் தங்கியுள்ளது. போதுமானளவு அர்த்தமட்டம் என்பது எங்களின் மரபுவழிச் சிந்தனை, உணர்வுவழித் தெரியும் அர்த்தத்தினைவிட அதிகமானது.

செயலுக்கான காரணம் சிந்தனை நியமங்களினாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றது, நிகழ்வுகளின் விளக்கம் என்பது தற்காலிக போதுமான புரிதல் என்றே சொல்லவேண்டும். இந்த தற்காலிகப் புரிதலின்போது புதுமையாக்கலை புள்ளிவிபரவியல் ரீதியாக அடையமுடியும். அவ்வாறு விளங்கமுடியாதவற்றைப் பொறுத்தவரை அவற்றினை அதிகளவிலான வரலாற்று அல்லது நிகழ்காலப் படிமுறைகளுடன் ஒப்பிட்டு அறியமுடியும். பின் நாட்களில் சமூக வரலாற்று நிலையில் இவ்வாறான ஒப்பிட்டு முறையினைப் பயன்படுத்துவது சாத்தியமற்றது என்பதனை உணர்ந்து கொண்ட வெபர் நிகழ்வுகளைக் கற்பனாரீதியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளமைத்துத் தர்க்கரீதியான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளும் கற்பனாரீதியான பரிசோதனை என்ற முறையை அறிமுகம் செய்தார்.

## காரண காரியத் தன்மையும் நிகழ்தகவும்

சமூக உறவு, ஒழுங்கமைக்கப்பட்ட குழு, வெளிப்படையான கட்டுப்பாடு, மரபுவழி மற்றும் சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான வரைவிலக்கணத்தில் ஏற்படக்கூடிய மாற்றம் தொடர்பான நிகழ்தகவினை, வெபர் அடிக்கடி அழுத்துவதினைக் காணலாம். வெபரைப் பொறுத்தவரை புறவயமான உறுதிப் பாட்னைக் காண்பதென்பது மிகக் கடினமான ஒரு விடயமே. எனவே தான் மாறும் தற்காலிகமான ஒரு நிகழ்வுச் சட்டகத்திற் குள்ளேதான் செயற்பட வேண்டும் என்பார் வெபர். அவரது வரைவிலக்கணங்கள் செயற்பாட்டின் பாற்பட்டவை, நேரடியான பரிசோதனை ஆய்வுகளிற் பயன்படுத்தக் கூடியவை.

## லேவி ஸ்ரோசின் அமைப்பியல்

மெய்ப்பிக்கப்பட்ட உண்மைகள், தர்க்கரீதியான விதிகளின் வழியான அறிவு என்ற நேர்க்காட்சி வாத சிந்தனையைக் கேள்விக்குள்ளாக்கியவர்கள் அதனை அறிவு முதன்மை வாதம் என்றனர். விமர்சித்தவர்களோ உணர்ச்சி முதன்மைவாதிகள் எனப்பட்டனர். அகவய நோக்கு என்றபெயரில் தனிமனித உணர்ச்சிகளில் மையம் கொண்டு இவர்களின் சிந்தனையானது இக்காலத்து மேலெழுந்த சிக்மண்ட் புரொயிடின் உளபகுப்பாய்வு முறையியலின் வசப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மனிதனை அறிதல் என்பது அவன் ஆழ் மனம் பற்றிய விசாரணைகளின் வழிதான் முழுமைபெறும் என்ற இம்முறை யியலின் வழிதான் அமைப்பியல் (structuralism) என்ற அறிமுறை வசமானது எனலாம்.

நேர்க்கட்சிவாதம் முன்வைத்த விதிகள், அறிவு-உணர்ச்சி எனும் இரண்டு தளங்களிற்கும் பொதுவானவை; இவை இரண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதன; முரண்படாதன எனும் அறிமுறையை அமைப்பியல் முன்வைத்தது.

அமைப்பியலின் தோற்றம், வளர்ச்சிக்குப் பின்னால் மானுட வியலாளரான லேவி ஸ்ராஸின் ஆய்வுகளும், கருத்தாக்கங்களும் விளங்கின. புராதன மனித நடத்தைகள், அறிவு அடிப்படைகள் இல்லாதவை; உணர்ச்சி வழிப்பட்டவை என நிலவிய கருத்தாக் கங்களை நிராகரித்தார் லெவி ஸ்ராஸ். புராதன மனிதனின் பிளவுபடாத சிந்தனை முறைகளை தொன்மங்கள் பற்றியதும், மொழி பற்றியதுமான தன் ஆய்வுகளின் வழி தெளிவுபடுத்தினார். எண்ணூறுக்கும் அதிகமான தொன்மைக்கதைகளை தென்னா பிரிக்க புலங்களில் தேடிப்பகுப்பாய்ந்து அவை உணர்த்தும் குறியீட்டு அர்த்தங்களை முன்வைத்தார் லெவி ஸ்ராஸ்.

சமூகசெயல்கள், மனித உறவுகள், மொழி ஆகியவற்றுள் புதைந்துள்ள அமைப்புக்களின் நடத்தை முறையானது நனவிலி நிலையில் உள்ளது. எடுத்துக்காட்டாக மொழியை நோக்கினால் புறநிலையில் வேறுபடும் இலக்கணங்கள். சமுதாய வேறுபாடுகளை உணர்த்திய போதும் இவ்வேறுபாடுகளுக்கு அப்பால் ஆழ்நிலையில் பொதுவான அமைப்புகளைக் கொண்டுள்ளன. மனித சிந்தனை முறையில் காணப்படும் எதிரெதிர் பண்புகளின் இணைத்து காணும் பண்பினை பல்வேறு எடுத்துக்காட்டுகளின் வழி ஸ்ராஸ் முன்வைத்துள்ளார். அகம்-புறம் என்றும், வலம்-இடம் என்றும் அமையும் இந்த இரட்டை எதிர்வின் தர்க்க பின் புலத்திலேயே இன்றைய கணனி தொழிலுனுட்பத்தின் இரட்டை எண்முறை போன்றவை அமைக்கப்படுதலை இங்கு மனதிற் கொள்ளலாம்.

இவ்வாறாக மனித அறிகைமுறைமை இரண்டு கட்டங் களாக உள்ளமையைப் புரிந்து கொள்ளலாம். ஆதி நிலையில் புராணங்களின் வழி வெளிப்பட்ட சிந்தனைமரபு; அது வகுத்துத்தந்த எல்லைகளையும் அமைப்புக்களையும் கொண்டு மலர்ந்த பின்னை - அறிவியல் மரபு என இவற்றினை வரை யறுப்பார். முன்னை அறிவுத்தளம் இன்றி பின்னை வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமற்றது எனும் அமைப்பியல் கருத்தானது மனித அறிதல் முறையியல் பன்மைத்தன்மை, படிமலர்ச்சி எனும் கருத்தாக் கங்களுக்கு வலுவூட்டுவன.

லெவி-ஸ்ராஸ் இனங்காட்டும் உள்ளுறை மனமானது உணர்வற்றது என அவர் கூறும் கருத்தும் எம் கவனத்திற்குரியது. இந்த உள்மனம் புரொய்ட் இனங்காட்டும் ஆழ்மனத்தினின்றும் வித்தியாசமானது. இந்த உணர்வற்ற மனமானது. தனியன்களினது அல்ல; சமூகத்தன்மையது. அவ்வாறே உணர்வற்றது என்றவகையில் அது புறவயமானது என்ற அவர் கருத்தாக்கமும் முக்கியமானது.

## பின்னை-அமைப்பியல்

அமைப்பியல் கருத்துநிலையுடன் தொடர்பானதாகவும் அதனின்றும் வேறுபடுவதாகவும் பின்னை அமைப்பியல் புதிய அறிவு முறைமைகளை முன்வைத்தது. மனித சிந்தனை முறைமையில் மொழியியல் சார்ந்து ஏற்பட்ட மாற்றமாக அமைப்பியல் அமைந்தமை போன்று சமூகவியல் சார்ந்து ஏற்பட்ட மாற்றமாக பின்னை -அமைப்பியல் அமைந்ததெனலாம்.

பின்னை அமைப்பியல் சிந்தனையாளர்களில் ரோலண்ட் பேர்த், ஃபூக்கோ போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அறிவின் வரலாற்றினை ஆழ ஆராய்ந்த ஃபூக்கோ, அறிவை சமூகக் கட்டமைப்புடனும் பண்பாட்டு நியமங்களுடனும் இணைத்து நோக்கிய முறையியல் தனித்துவமானது. வரலாற்றின் கால கட்டங்கள் தோறும் வேறுபடும் அறிவமைப்புக்களை இனங் காட்டுவார் ஃபூக்கோ. பண்பாடு அதிகாரத்தினை கட்ட மைத்தலுக்கான வழிமுறையாக அறிவு அமைதலை, தன் மையம் - விளிம்பு எனும் கருத்தாக்கங்களின் வழி விளக்குவார். இந்த வகையில் அறிவு என்பது புறவயமானதல்ல; நடுநிலை யானதல்ல; அதிகாரத்தினைக் கட்டமைக்கும், அதனை நிலைநாட்டும் கருவியே அறிவு என்பது இவரது வாதமாகும். அதிகாரத்தின் நுண் வடிவங்கள் பற்றிய ஃபூக்கோவின் கருத்தியலானது, மாக்ஸின் அதிகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கங்களின் அறிவு ஜீவிகள் பற்றிய நிலைப்பாட்டுடன் இணைந்து செல்வது. கிரொம்ஸி, அல்தூசார் போன்றோரால் பின்னர் வளர்க்கப்பட்ட அறிவமைப்புகளின் ஆதிக்கம் பற்றிய கருத்தியல்களின் மூலமாக அமைவது. அறிவமைப்புகளின் அடுக்கமைவு தன்மை, பிரதேச-பிராந்திய தன்மை பற்றிய ஃபூக்கோவின் கருத்தாக்கம் சுதேச அறிவு முறைமைகள் பற்றிய இன்றைய எடுத்துரைப்புகளுக்கு பெரிதும் வலுவூட்டுவன. அவ்வாறே அறிவின் சமூகவியல் சார்ந்த சிந்தனை மலர்ச்சிக்கும் துணையானது.

## மன் ஹைமின் அறிவின் சமூகவியல்

அறிவின் சமூகவியல் என்ற எண்ணக்கருவாக்கமானது 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்கூறிலும் சமூகவியலாளர்களான எமில் டுர்கைம், மாசேல் மவுஸ் (Marcel Mauss). ஆகியோரால் முன்வைக்கப்பட்டது. இவ்வாறே மானுடவியலாளர்களான ஹோட்டன் (Horton), பினிகன் (Finnegan) போன்றோரின் ஆய்வுகளும் இத்திசையில் கருத்தாக்கங்களை முன்வைத்திருந்தனர். இந்தவகையில் சமயவாழ்வின் ஆரம்ப வடிவங்கள் (The Elementary Forms of Religions Life) பற்றிய இவர்களின் ஆய்வு குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வானது சமயத்தின் தொடக்க மூலத்தையும் சமயத்தின் தொழிற்பாட்டினையும் மட்டும் ஆராயவில்லை; சமூகத்தின் மொழியினதும் தர்க்கரீதியான சிந்தனையினதும் மூலங்களை கண்டறிவதாகவும் அமைந்தது. அவுஸ்திரேலிய பழங்குடிகள் சமயமான குலக் குறியத்தின் வழி (Totemism), எவ்வாறு சமூகத்தின் கூட்டு மன உணர்வு கட்டமைக்கப்பட்டது என்பதனை அறியும் ஆய்வாகவும் இது அமைந்தது. குறியீடுகளும், பிரதிமைகளும் கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் கட்டமைக்கும் படிமங்களாக உள்ளன. கூட்டுவாழ்வு, சமூகஉறவுகள் ஆகிய விழுமியங் களையும் அவை நோக்காக கொண்டுள்ளன. இவை தனியன்களால் ஆனவை அல்ல; கூட்டு சமூக அறிவின் ஏற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன சமூகங்களின் தொன்மங்கள், வழிபாட்டுமுறைகள் பற்றிய இவ்வாய்வுகள் புலப்படுத்திய சமூக முறைமைகளுக்கும் அவற்றின் அறிமுறைக்குமான உறவுப் பாங்கினை 'அறிவின் சமூகவியல்' என்ற மகுடத்துடன் வளர்த்தெடுத்தவர்களில் கால் மன் ஹைம் மூலவராகப் போற்றப்படுகின்றார்.

கால் மன்ஹைம்மின் சிந்தனையானது தனித்து சமூகவியல் வயப்படுத்தப்பட்டதாகவோ, மானிடவியல் வழிப்பட்டதாகவோ அமையாமல் வரலாறு, மெய்யியல், சமூக உளவியல் போன்ற துறைகளையும், அத்துறைகள் சார்ந்த அணுகுமுறைகளையும் உள்ளடக்கியதாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. மத்திய ஐரோப்பியாவின் 18ம் நூற்றாண்டின் தொடக்ககால சூழமைவின் எதிர்வினையாகவே கால் மன்ஹைம் இவ் வெண்ணக்கருத்தினை முன்வைத்தார் எனலாம். அந்நாளின் அரசியல் முரண் நிலைகளுக்கு பின்னணியான குழுக்களின் ஆர்வ வேறுபாடுகளை அவதானித்த மன்ஹைம், கால் மாக்ஸ் முன்வைத்த கருத்துநிலை வேறுபாடுகளின் சமூக சூழமைவு பற்றிய கருத்தாக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டார். எனினும் தனியே வகுப்பு அடிப்படையிலான குழுக்களின் கருத்தாக்கம் என்பதனை கடந்து அனைத்து குழுக்களுக்குமான கருத்தாக்கமாக அதனை வார்த் தெடுத்தார்.

கால் மன்ஹைமின் அறிவின் சமூகவியல் கருத்தாக்கத்தினைப் பின்வருமாறு சாரப்படுத்தலாம்:

* அறிவினை சமூகவியல் ரீதியாக விளங்கிகொள்ள வேண்டும்; ஏனெனில் அது உருவாகும் சமூக விசைகளினாலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது.

* அறிவின் உள்ளடக்கத்தினை சமூகசூழமை சார்ந்தே பகுப்பாய்வு செய்து கொள்ளவேண்டும்.

அறிவின் வகைப்படுத்தல் பற்றிய கால் மன்ஹைமின் கருத்தாக்கமும் முக்கியமானது. மனித சிந்தனையை தனியன்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள தொழிற்பாட்டு குறைப்பு வாதமாக காணாமல் அதனை சிந்தனைபாங்காக அறிவுறுத்துவார் கால் மன்ஹைம். அறிவு என்பது தனிமனித சமூகமயமாக்கலின் வழி கிடைக்கின்றது. ஒரு சமூகம் தன் அங்கத்தினரிடை பகிர்ந்தளிக்கும் வளமாகவும் உள்ளது.

அறிவின் சமூகவியல் பற்றிய தன் ஆய்வுகளுக்கு முன் பண்பாட்டின் சமூகவியல் பற்றிய ஆய்வுகளில் ஆர்வம் கொண்டிருந்தார். பண்பாட்டு பொருண்மைகளை விளங்குதல், அர்த்தம் காணுதல் ஆகியவற்றில் அவர் கண்ட அனுபவங்களும் அவரது கருத்தாக்கங்களை வடிவமைப்பதில் செல்வாக்கு செலுத்தின எனலாம்.

அறிவின் சமூகவியல் தந்தை எனப்படும் கால் மன் ஹைமின் புலமைப்பின் புலத்தினையும், அவரது கருத்தாக்கங்களின் வளர்ச்சி நிலைகளையும் மிகச் சுருக்கமாய் நோக்குவோம்.

புடாபெஸ்ரில் மத்தியதர யூத குடும்பம் ஒன்றில் ***1893***இல் மார்ச்மாதம் ***27***ம் திகதி பிறந்த மன் ஹைம் அக்காலத்து எழிச்சிபெற்றிருந்த புலமையாளர் குழாத்தின் செல்வாக்கிற்குப் பெரிதும் உட்பட்டிருந்தார். உலகம் பற்றிய விமர்சன பூர்வமான அறிவார்ந்த சிந்தனை விழிப்பின் மூலவராக உருவாகினார். ***1912-1913*** ஆண்டு காலப்பகுதியில் புகழ்பெற்ற சமூகவியலாளரான ஜோர்ஜ் சிம்மலுடன் பயின்ற மன் ஹைம், அந்நாளின் ஐரோப்பிய, அமெரிக்க சிந்தனைக் கூடமாக விளங்கிய சமூகவிஞ்ஞானச் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்தார். பின்நாளில் இலக்கிய விமர்சகராகவும் அழகியல் கலைக் கோட்பாடுகளில் ஆழ்ந்த ஆர்வமும் பங்களிப்பும் செய்த ஜோர்ஜ் லூக்காசின் பால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். இக்காலத்து மனிதப் பண்பியல் சுதந்திரகுலாம் எனப்பட்ட புலமையாளர் அமைப்பில் இணைந்துகொண்டார். இடது சாரி அரசியல் செயற்பாட்டாளராக இல்லாதபோதும் முதலாளித்துவப் பண்பாடு பற்றிய விமர்சகராக விளங்கினார். (Mannheim, 1936, 1952)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1918 ஒக்ரோபர் புரட்சியைத் தொடர்ந்து புடாபெஸ்ற் பல்கலைக்கழகத்தில் தன் வழிகாட்டியான லூக்காஸ் அவர்களின் கீழ் பணியாற்றினார். ஹங்கேரிய பொதுவுடமை ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஜேர்மனிக்கு புலம்பெயர நிர்ப்பந்திக் கப்பட்டார். அங்கு மீண்டும் புதியதொரு புலமையாளர்களின் சூழமைவைப் பெற்றார் . மெய்யியலாளர்களான அல்பிரட் வெபருடன் பயின்ற மாட்டின் ஹெய்டிகர் மற்றும் நவ காண்டிய சிந்தனையாளரும் தோற்றப்பாட்டியலின் (Phenomenology) மூலவருமான எட்மன் ஹூசெல் இன் செல்வாக்கிற்கு உட்பட்டார்.

1927இல் பிராங்போட் பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் சமூகவியல் பேராசிரியரானார் மன் ஹைம். 1933இல் நாஸிகளினால் இங்கிலாந்துக்கு துரத்தப்படும் வரை இங்கு பணியாற்றினார். பிராங்போட் பல்கலைக்கழகத்து பணிபுரிந்த 6 ஆண்டு காலப்பகுதியில் தான் பெரிதும் அறியப்பட்ட அவரது படைப்புகள் வெளியாயின. இங்கிலாந்துக்கு போனபின் அவரது ஆய்வு ஆர்வமும் புதிய திசையில் அமைந்தது. ஆரம்பத்தில் அறிவின் சமூகவியலில் என்பதில் குவிந்த அவர் கவனம் பின்னர் புலமையாளர்கள் பற்றிய கவனிப்பானது; குறிப்பாக எதிர்கால ஜனநாயகத்தைக் கட்டமைப்பதில் புலமையாளர்கள் வகிக்கக்கூடிய இடம்பற்றியதாக அமைந்தது.

அறிவின் அரசியல்பற்றிய மன் ஹைமின் ஆரம்ப அறிவுப் பணிகளுக்கான ஆதர்சமாக மாக்ஸியச் சிந்தனை அமைந்தமை பற்றி ஏற்கனவே நோக்கினோம். வரலாற்றுச் சூழமைவுடன் கருத்திய லுக்குள்ள உறவு தொடர்பான மாக்ஸின் கருத்தாக்கத்தினை மையமாகக் கொண்டே தன் அறிவின் சமூகவியல் சிந்தனையைக் கட்டமைத்தார். எனினும் மாக்சிய அறிவின் சமூகவியலுடன் வெபரின் விழுமிய நிலைசார் கருத்தாக்கதினையும் இணைத்துக் கொண்டார்.

மன் ஹைமின் சிந்தனையானது புலமையாளருக்கென சிறப்பான ஒரு பாத்திரத்தினை கோடிகாட்டியது. எந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்கோ, அரசியல் குழுமத்துக்கோ ஆதரவுக்குரல் தருபவராக இல்லாமல் அனைத்துக் குழுமங்கள், அணுகுமுறைகள் பற்றிய விமர்சன ரீதியான பார்வை கொண்டவர்களாக புலமையாளர்கள் விளங்கவேண்டும். சுதந்திரமான இத்தகைய ஒரு நிலைப்பாட்டின் வழிதான் புலமையாளர்களால் முழுதளாவிய ஒரு விமர்சனப் பகுப்பாய்வினை மேற்கொள்ள முடியுமென்பது கால் மன்ஹைமின் கருத்தாகும். ஜனநாயக விழுமியங்களுக்கும் சமூகநீதி, சமத்துவம், ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குமான அர்ப்பணிப்புக் கொண்ட வர்களே கால் மன் ஹைமின் இலட்சியப் புலமையாளார்கள். அரசியல் உயர் குழாம் மீதும் மக்களிடத்தும் ஜனநாயகம் தொடர்பான உரிய விழிப்பினைத் தருதல் புலமையாளரின் கடனாகும்; குழப்பமும் வன்முறைகளும் அவை தரும் நெருக்கடிகளும் அகன்ற ஒரு சமூகமாற்றத்தின் உயிர்விசைகளாக புலமையாளர்களின் ஈடுபாடு இன்றியமையாதது என்பார் கால் மன் ஹைம்.

கால் மன்ஹைமின் எந்தஒரு குழுமத்தினையும் சாராத பற்றற்ற புலமைமரபு என்பது எந்த அளவிற்கு செயற்படும் புலமை அறிவாகும் என எழுப்பப்படும் விமர்சனங்கள் புறக்கணிக்கக் கூடியவை அல்ல புலமையாளர்கள் எந்தஒரு நிலைப்பாட்டினையும் எடுக்காமல் ஒதுங்கியிருக்கும் நிலையினை நியாயப்படுத்த கால் மன்ஹைமின் அறிவின் சமூகவியலை பயன்படுத்துதல் பற்றிய விழிப்பும் அவசியமானது. தங்களை தந்தக்கோபுர சிந்தனை யாளர்களாக நினைந்து குந்தியிருத்தலும் ஆகாது மன் ஹைம் வேண்டியவாறு அனைத்துத் தளங்களிலும் ஆக்கக பூர்வமான மாற்றங்களை விளைவிக்கும் பங்கேற்பு அறிவாக புலமையாளர் களின் பணி அமைந்திடவேண்டும் அதுவே அறிவின் சமூகவியலின் பயனாகும்.

சமூகப் பொருண்மைகளை கற்பதற்கான முறையியல் என்பது வெறுமனே இயற்கை விஞ்ஞான விதிகளை அப்படியே பிரதியீடு செய்வதாக அல்லாமல் பொருத்தமான முறையியல்களின் வழி அமைந்திடுதல் வேண்டும். மாறுபட்ட அறிதல்முறைகள், அவற்றினடியான வளர்ச்சி கண்டுள்ள சமூகவியலின் பரிமாணங் களை உணர்ந்திடவும், அறிவின் சமூகவியல் சிந்தனையின் படி மலர்ச்சி - அறிவின் பன்மைத்தன்மைகளை புரிந்திடவும் மேற்கண்ட அறிமுறை சார்ந்த கருத்தாடல்கள் வழிகாட்டும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்


| | |
|---|---|
| Comte, Auguste (1830) | **Positive Philosophy,** New York: AMS Press. |
| Foucault, M (1980) | **Power / Knowledge,** C.Cordon (ed.) New York: Pantheon. |
| Livi - Strauss (1963) | **Structural Anthropology** New York: Basic Books. |
| (1966) | **The Savage Mind,** Chicago: |
| Mannheim, Karl (1936) | **Ideology and Utopia,** London: Routledge and Kegan Paul |
| (1952) | **Essays in the Sociology of Knowledge,** London: Routledge and Kegan |
| Weber, Max (1949) | **The Methodology of the Social Science,** Edward shill and Hentry Finch (eds) New York: Free press. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# அறிவொளியின் வரம்புகள்

மனித சமூக மேம்பாட்டில் அறிவு பெறும் இடம் முக்கியமானது. இன்றைய அறிவு தொடர்பான சொல்லாடல்கள் யாவும் அறிவொளிப் பண்பாட்டினை மையமாகக் கொண்டே அமைந்திடக் காணலாம். இச் சொல்லாடல்களிடை அறிவொளியின் பயனாக மானுடம் கண்ட நன்மைகளும் அதே அறிவின் விளைவாக எதிர்கொண்ட அவலங்களும் குவிமையங் களாகிடக் காணலாம். இவ்விவாதங்களினடியாக வேறுபட்ட சிந்தனைக் குழாங்களும் கருத்தாக்கங்களும் தோற்றம் பெற்றுள்ளன. இந்தவகையில் அறிவொளிச் சிந்தனை மரபின் எல்லைகளையும், வரம்புகளையும் அவை இன்று எதிர்கொள்ளும் விமர்சனங் களையும், அவ் விமர்சனங்களைத் தாண்டி அது காண வேண்டிய செல்நெறிகளையும் இக்கட்டுரையானது முன்வைக் கின்து.

மனித அறிவியல் வரலாற்றில் ஆற்றல் மிகுந்த சிந்தனைகள் பிறந்த காலமாக அறிவொளிக்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டின் மையப் பகுதி முதல் 18ஆம் நூற்றாண்டு முழுமையும் ஆதிக்கம் செலுத்திய இச் சிந்தனை வீச்சின் வழியாக சமுதாயப் புரட்சிகளும் சமூக மாற்றங்களும் விளைந்தன. மதம் சார்ந்த கோட்பாடுகளுக்கும் முடியாட்சி சார்ந்த தளைகளுக்கும் பதிலீடாக நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்தும் ஆகிய சிந்தனைகள் வலுப்பெற்றன. அறிவொளிக்கால சிந்தனையாளர்கள் நிறைந்த மனவளம் கொண்டவர்களாகவும் சமூகத்தினை ஆழ ஆய்வு செய்யும் ஆர்வம் கொண்டவர்களாகவும் விளங்கினார்கள். இந்த அறிவொளிக் குழுமத்தில் பல்வேறு அறிவுத்துறையினரும் சங்கமாகியிருந்தனர். கணிதம், இயற்பியல், உயிரியல், சமுதாய மெய்யியல் என விரியும் பல்துறை அறிவுகளும் அறிவொளிக்காலச் சிந்தனை மலர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கின. தத்தம் அறிவுப் புலங்களின் வழி மனித சமுதாயத்தின் இயல்பையும் அது எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகளையும் இவர்கள் கவனத்தில் கொண்டனர். இக்கால சிந்தனையாளர்களில் பெரும்பாலனவர்கள் சமூக உணர்திறன் கொண்ட எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் மெய்யிய லார்களாகவும் உள்ளமையும் நம் கவனத்திற்குரியது.

மனிதனின் இயற்கை சமுதாயத்தின் சூழமைவு முன்னேற்றம் பற்றிய இச் சிந்தனையாளர்களின் கருத்துக்களிடை ஒத்த தன்மைகளையும் வேறுபாடுகளையும் காண முடியும். எடுத்துக் காட்டாக தோமஸ் கொப்ஸ் மனிதர்களை சுயநல நாட்டமுள்ள கொடுமையாளர்களாக குறிப்பிடுவர். இந்த மனித இயல்பினைக் கட்டுப்படுத்துவதற்கு வலிமையான அடக்குமுறைத் திறன் கொண்ட அரசின் தேவையையும் வலியுறுத்துவார். எனினும் ரூசோ முற்றிலும் மாறுபட்ட விதமாக மனித இயல்பினை விளக்கி நிற்பார். இயல் நிலையில் தனித்தனியாக வாழ்ந்த காலத்து மனிதர்கள் யாருக்கும் தீங்கில்லாத வாழ்வினைக் கொண்டிருந்தனர். சமுதாய நிலை வளர்ச்சியின் பொழுதுதே செயற்கையான அமைப்பின் சிக்கல்களை எதிர்கொள்ள நேர்ந்தது என்பது ரூசோவின் வாதமாக இருந்தது. இவ்விருவரின் கருத்தாக்கங்களையும் ஒன்றிணைப்பதாக ஜோன் லொக் இன் கருத்துக்கள் வெளிப்பட்டன. மனித நடத்தை என்பது பிறப்பின் வழியானது அல்ல; ஒருவர் நல்லவராவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவராவதும் அவர் அனுபவப் பயில்வே என்பது இவரது வாத மாகும். இவ்வாறாக முரண்பட்ட கருத்தாக்கங்களைக் கொண்டி ருந்தபோதும் இக்கோட்பாடுகள் அனைத்தினதும் குவிமையாக மனிதநேயமும், மனித முன்னேற்றமும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் புதிய மரபுகள் தந்த நம்பிக்கையின் அடிச்சுவட்டிலே எதிர்காலத்தைக் கட்டமைப்பதற்கான புதிய விதிகளைக் காணும் தேவை ஏற்பட்டது. இந்தப் புதிய சூழமைவின் பிறப்பிடமான பிரான்ஸ் நாட்டின் சிந்தனையாளரான அகஸ்ற் கொம்ற் சமூகவியல் என்ற பெயரோடு இந்தப் அறிவுப் பயணத்தைத் தொடக்கி வைத்தார். அறிவொளிச் சிந்தனையின் வடிவமாக நேர்க்காட்சி வாதமும் அதன் வழியான சமூக எதிர்வு கூறல்களும் முன்வைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து ஹேபேர்ட்ஸ் பென்ஸர், கார்ல் மாக்ஸ், எமில் துர்க்கைம், மக்ஸ்வெபர், ஜோர்ஜ் சிம்மல் என நீளும் சிந்தனை யாளர்களின் அறிவுத் திறத்தாலே சமூகவியல் எண்ணக்கருக்களும், கோட்பாடு களும் வடிவம் பெற்றன.

சமூகஅமைப்பு பற்றிய, அதன் அசைவியக்கம் பற்றிய பார்வையினடியாக கோட்பாட்டுக் குழுமங்களின் தன்மைகள் அமைந்தன. உயிரி ஒன்றின் உடலமைப் போன்றது சமூக அமைப்பு; அதன் உறுப்புகளின் இசைவாக்கத்தினால் அதன் வடிவம் தீர்மானம் ஆகின்றது. அமைப்பின் உள்ளும் புறமும் உள்ள விசைகளால் சமநிலை பாதிப்புக்குள்ளாகின்ற போது அந்த சமூக அமைப்பிற்குள் நிகழும் இயக்கப்பாடுகளின் வழி மாறுபடும் சூழலுக்கு ஏற்ப மீண்டும் அமைப்பாக்கம் பெறுகின்றது என்ற கருத்தியலை விளக்குவதாக செயற்பாட்டியல் என்ற கோட்பாட்டுக் குழுமம் அமைந்தது. சமூகவியலின் மூலவரான அகஸ்ற்கொம்ற் மற்றும் ஹேபேர்ட்ஸ் பென்ஸர், எமில் துர்கைம் ஆகியோர் முன்வைத்த நேர்க்காட்சி வாத முறையியலினடியாகவே இவர்கள் விளக்கங்கள் அமைந்தன.

சமூக அமைப்பு பற்றிய மற்றொரு கோட்பாடான மாக்சியக் கோட்பாடானது ஏனைய கோட்பாடுகளினின்றும் தனித்துவமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக அமைந்தது. பொருளாதார உற்பத்தி உறவுகளின் அடியாகவே சமூக அமைப்பின் வடிவமும், தன்மையும் நிர்ணயமாகின்றது என்பது மாக்சியக் கருத்தியல் ஆகும். நிலவும் சமத்துவமற்ற அநீதியான சமூகக் கட்டமைப்பில் சமூக வகுப்புகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடும், அந்த முரண்பாட்டின் விளைவான போராட்டமும் புதிய சமூக அமைப்பை தோற்றுவிக்கும் என்பது இக்கருத்தியிலின் குவிமையமாகும். ஹெகல் என்ற மெய்யிய லாளரின் கருத்து முதல்வாத இயங்கியலை தலைகீழாக்கி கருத்துக்குப் பதில் பொருளை தீர்மானக் காரணியாக்கியது மாக்சிய இயங்கியல். இக்கோட்பாடானது சமூக வரலாற்றை விளக்குகின்ற அறிவியல் முறையாக மட்டும் அமைந்துவிடாமல் சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களை கட்டமைக்கும் புரட்சிகர செயல்திட்டமாகவும் முன்வைக்கப்பட்டது.

"அனைத்து சமூக மாற்றங்களும், அரசியல் புரட்சிகளும் மனித முளைகளினாலோ அன்றி உண்மை நீதி பற்றிய ஞானத் தினாலோ ஏற்படுபவை அல்ல; உற்பத்தி முறைகளிலும் பரிமாற்றங்களிலும் ஏற்படும் மாற்றங்களின் வழியானதே" என்ற வரையறை வெளிப்படுத்துவதாகவே இக்கோட்பாடும் இது சார்ந்த நடைமுறைகளும் அமைந்தன. பொருளாதார அமைப்பிற்கும் சமூக அமைப்பிற்கும் இடையிலான உறவையும் அது சார்ந்த மாற்றங் களையும் வரலாற்று நிலையில் உரிய எடுத்துக்காட்டுக் களுடன் விளக்கினார் மாக்ஸ். மனித வரலாற்றின் பொருளாதார அமைப்பானது இதுவரையில் நான்கு முக்கியமான படிநிலைகளை தாண்டியுள்ளது. ஆசிய நிலை, தொன்மை நிலை, நிலமானிய நிலை, முதலாளித்து நிலை என்றவாறு இந்நிலைகள் ஒவ்வொன்றும் முன்னைய நிலைகளுடன் முரண்பட்டு தோற்றம் பெறுகின்றன என்பது இவரது கருத்தியலாகும்.

ஆசிய உற்பத்தி நிலை என்பது நுகர்வுக்காக மட்டுமே என அமைந்த உற்பத்தி முறையாகும். இங்கு நிலம் தனி உரிமையாக அன்றி சமூக உடைமையாகக் காணப்பட்டது. லாப நோக்கிலான வணிக உற்பத்திகள் ஆரம்பித்த போது முன்னர் நிலவிய ஆதிப் பொதுவுடமை வாழ்வு மறைந்தது. அடிமைகளைக் கொண்ட ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் தோற்றம் பெற்றது. இக்கால கட்டத்து நிலம் என்பது வசதி படைத்த பிரபுக்களின் உடைமையானது. காலவெளியில் இந் நிலங்கள் பெரும் பண்ணைகளாக உருமாற்றம் கண்ட பொழுது பண்ணை அடிமைகளும் தோற்றம் பெற்றனர். இந்நிலையில் தான் நிலமானிய அமைப்பு தோற்றம் பெற்றது. அடிமைகள் மீதான சுரண்டலும் ஒடுக்குமுறையும் அதிகளவில் ஏற்பட்ட பொழுது அவர்களுக்கிடையிலான முரண்பாடுகளும் கூர்மையடைந்தன. இக்காலத்து புறச் சூழலில் ஏற்பட்ட புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட தொழில்மயமாக்கம் பணப் பொருளாதாரத்தின் தோற்றத்திற்கும் முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சிக்கும் வித்திட்டன. இத்தகைய ஒரு சூழலில் தங்கள் உழைப்பை விற்பதைத் தவிர தொழிலாளர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை.

செல்வம் சிலர் கைகளில் குவிந்தது; தொழிலாளர்களின் வறுமையும் துயரமும் பெருகியது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான போராட்டம் என்பது இயங்கியலின் தவிர்க்க முடியாத விளைவாகும். இந்த முரண் நிலையின் விளைவாக தொழிலாளர்கள் வெற்றி காண்பார்கள்; முதலாளித்துவம் அதன் சொந்த முரண்பாடுகளாலேயே மடிந்து போகும். மலரும் சோசலிஸ சமூகத்தில் உற்பத்திச் சாதனங்கள் கூட்டுடமைகளாக அனைத்து மக்களுக்கும் பொதுவாய் அமையும். இதனால் சுரண்டப்படுபவர் களும் இல்லை சுரண்டுபவர்களும் இல்லை எனப்பட்டது. அறிவொளி காலச் சிந்தனையின் பயனாக எதிர்பார்க்கப்பட்ட மேற்கண்ட மாற்றங் களும் உருமாற்றங்களும் பொருள் இழந்த நிலையில் புதிய சிந்தனை முறைமைகளுக்கான தேவை உணரப்பட்டது. புறவயமான அறிவு, நடைமுறைக்கான அறிவு என்ற நிலைமைகளுக்கு அப்பால் விமசன ரீதியான அறிவு என்ற கருத்தாக்கம் வலுப்பெற்றது.

விமர்சன ரீதியான சமூகவிஞ்ஞான முறையியல், விமர்சனக் கோட்பாடு என்றவாறு புதியதொரு சிந்தனைக் குழுமத்தின் தோற்றத்திற்கு இந்நிலை காலாகியது. அறிவொளிக்கால விஞ்ஞான வளர்ச்சியானது, மனித அறிவின் எல்லைகளை விரிவாக்கி மனிதரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை உலகினை ஆதிக்கம் செலுத்தும் வல்லமையாளர்களாக மாற்றிய போதும், எதிர்பார்க்கப்பட்ட மனிதவிடுதலை என்பது கேள்விக்குள்ளானது. முதலாளித்துவத்தின் பெருவளர்ச்சி என்பது கால் மாக்ஸ் எதிர்பார்த்தவாறு சோசலிசத்துக்கான சாத்தியப்பாடு களை ஏற்படுத்தித் தந்தபோதும் அச் சக்திகளை ஒடுக்குதலிலும் வெற்றி கண்டது. பொருளாதிக்கமே எங்கும் நிறை பொருளாக விளங்கியது. அந்நியமாதலும் அடிமைப்படுதலும் பொதுமனிதன் விதியாகத் தொடர்ந்தது. இத்தகைய சூழமைவினை தாண்டி மனித சமூகத்திற்கான விடுதலையைக் காணும் வேட்கையுடன் பிராங் போட் சிந்தனைக் குழுமம் உருப்பெற்றது. இவர்களது எழுத்து களும் செயல்பாடும் இன்றுவரை அறிவின் செல்நெறி பற்றிய கருத்தாடல்களில் முக்கிய இடம்பெறுகின்றன. இந்தவகையில் அறிவொளியின் இயங்கியல் பற்றிய ஹோர்க் ஹைமரின் நூல் குறிப்பிடத்தக்கது. அறிவொளி சிந்தனை மரபு படைத்தாக பெருமையாகப் பேசப்பட்ட நாகரிகங்கள் பற்றிய ஆழமானதொரு விமர்சனமாக இவரது எழுத்துக்கள் அமைந்தன.

அறிவொளியின் முரண் வளர்ச்சி நிலைகளைப் பற்றி ஏற்கனவே முன்வைக்கப்பட்ட நீட்சே போன்றவர்களின் அடிச்சுவட்டில் அறிவொளி மரபுபற்றிய இவர்கள் விமர்சனம் அமைந்தது. நாகரிக வளர்ச்சியின் கட்டங்கள் தோறும் அது அநாகரிகத்தையும் வளர்த்து நின்றமையை இந்நூல் தெளிவு படுத்தியது. விடுதலை, சமத்துவம் ஆகியவற்றை முன்வைத்த தாராளவாதச் சிந்தனை நாஸிஸம் போன்ற அழிவு நிலையில் முடிந்து போனமை பற்றி விளக்கப்பட்டது. அறிவொளி மரபின் முரண் வளர்ச்சி நிலைகளை, எதிர்மறையான, பக்கச்சார்பான அறிவுக்கு ஒவ்வாத நடைமுறைகளை விமர்சித்த அதேவேளையில் வரலாற்றினையும் பண்பாட்டினையும் மீட்டுக் கொள்வது தமது காலக்கடமை என விமர்சன கோட்பாடாளர்கள் கருதினர். அறிவொளி கால வல்லமை என முன்வைக்கப்பட்ட பண்பாட்டு வளர்ச்சி நிலைகளை இவர்கள் கேள்விக்கு உள்ளாகினர்.

வரலாற்றில் இதுவரை காணாத மேம்பாட்டினை கண்டுகொண்டோம், பண்பாட்டு வளர்ச்சியும் பரவுதலும் அபரித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக உள்ளது என்ற வாதங்களின் யதார்த்த நிலைகளை விமர்சனக் கோட்பாட்டாளர்களின் ஆய்வுகள் தெளிவாகவே முன்வைத்தன. அறிவின் பயன் என்பது 'இயற்கையை கட்டுப்படுத்தல், அதன் உயிர்ப்பினை அடைக்கிவிடுதல், அதனைப் பொருட்களாக மாற்றியமைத்தல் என்ற பொருள் குவிக்கும் நடைமுறையில் இந்தப் பொருட்களுக்கு அடிமையாதலே மனித இயற்கை' என்றான நிலமைகளை விமர்சனக் கோட்பாடு பற்றிய எழுத்துக்கள் வெளிப்படுத்தின.

முற்றிலும் பொருள்மயமான வாழ்வில் அறிவின் பொருள் உற்பத்திச் செயற்பாடானது மனிதனின் அகத்தையும் அவனது உணர் நிலையையும் அழித்ததோடு அறிவின் முடிவு என்ற கருத்தாக்கத்திற்கும் இட்டுச் சென்றது என்பார் ஹோர்க் ஹைமர்.

அறிவின் அசைவியக்கத்தில் பண்பாட்டு வளர்ச்சி எதிர்நோக்கிய சவால்களும் பின்னடைவுகளும் முக்கியமானவை. மக்களினுடைய சமூக உணர்வினை சமூக மாற்றத்திற்கான செயலூக்கத்தினைத் தருவனவாகக் கருதப்பட்ட கலை, இலக்கியம் போன்றவை நுகர்வுப் பண்டங்களாக்கப்பட்ட துயரத்தினை இவர்கள் விளங்கப்படுத்தினர். இந்தவகையில் 'பண்பாட்டுச் சந்தை ஒரு அறிவொளிக்கால மாயை' எனும் ஹோர்க் ஹைமரின் எழுத்து முக்கியமானது.

முதலாளித்துவ உற்பத்தி முறையில் பெருகிய தொழில் நுட்ப கருவிகளின் வழி பண்பாட்டுப் பொருட்களும் தொழிற் சாலைப் பண்டங்களாகின. கலை, இலக்கியம் பற்றிய இரசனையும் கருத்தாக்கமும் கூட புதிய தொழில்நுட்ப, இலத்திரனியல் சாதனங் களினாலேயே கட்டமைக்கப்பட்டன. இந்த இலத்திரனியல் ஊடகங்களின் செயற்பாடுகள் பற்றிய தேவிபிரசாத் சட்டோ பார்த்தியாய அவர்களின் எழுத்துக்கள் எம் கவனத்திற்குரியன

விஞ்ஞான முறையே குறிப்பாக வானொலி தொலைக் காட்சி போன்றவையும் கல்வித்திட்டமும் கூட சரித்திரப் போக்கைத் தடுத்து தாமதப்படுத்தவும் திசைதிருப்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படுகின்றன. மக்களை அபின்கொடுத்து மயக்குவது போல வெட்கக்கேடான யுத்திமுறைகள் பயன் படுத்தப்படுகின்றன. விஞ்ஞானத்தையே முடமாக்கிப் போடுவதற்கு விஞ்ஞானத்தையே பயன்படுத்தும் சதித் திட்டமாக இது அமைகிறது.' (தேவிபிசாத் சட்டோ பாத்தியாயா, n.d)

இவ்வாறாக மக்கள் திரளின் பண்பாட்டு தேவைகளையே நாம் பூர்த்தி செய்கின்றோம் என்றவாறு ஒரே வார்ப்பிலான படைப்புகள் சந்தைக்கு வருகின்றன. இத்தகைய பண்ட உற்பத்திக்கு எங்கள் தமிழக சினிமா, தொலைக்காட்சிக்கான தொடர் நாடகத் தயாரிப்புக்கள் என்பவை சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகலாம். மக்களை சிந்திக்காத நிலையில் வைத்திருப்பதனையே நோக்காக் கொண்டு இந்தப் பண்பாட்டுப் பொருட்களின் உற்பத்தி மேலும்மேலும் அதிகளவில் சந்தைக்கு வருகின்றன. இந்தப் பண்டங்களின் ஆதிக்கத்தில் மனிதர்களின் சுயம் இழக்கப்படுவதும் சுய அந்நியமாதலுக்கு அவர்கள் உள்ளாவதும் விதியாகின்றது.

இதே தொடர்பு சாதனங்களுக் கூடாகவே இன்றைய மனிதர் களுக்கான நுகர்வுப் பொருட்களின் வியாபார விளம்பரங்களும் செய்யப்படுகின்றன. மக்களின் சுய சிந்தனைக்கோ அறிவார்ந்த விழிப்புக்கோ இடம் தராத படைப்புக்கள் விளம்பரங்களுக்குள் மனித வாழ்வின் பொழுதுகளும் எல்லைகளும் சுருங்கிப் போகின் றன. கற்பனாத்தமான ஒரு உலகுக்குள் மக்களை அடிமைப்படுத்தும் இந்நிலைமைகள் இம் மனிதனுக்கான விடுதலைக்கான வழி எதனையும் காட்டுவதில்லை.

இந்தவகையில் சுயம்-சுய அந்நியமாதலை உணர்ந்த அறிவு மட்டுமே மனிதக் குலத்தினை விடுதலை செய்யும் என்பது விமர்சன கோட்பாட்டின் அறிவுத்தளமாகும். விடுதலையை ஊக்குவிக்கின்ற அதேவேளை அவ்வுணர்வுகளை சிதைக்கவும் துணையாகும் அறிவொளியின் இரட்டை நிலையினை அப்பொழுதுதான் வெற்றி கொள்ளமுடியும். மானிடமயமாக்கப்பட்ட இயற்கை, மனிதத் தன்மையே இல்லாத மனிதர் என்ற முரண் நிலைகளைத் தெளிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமுடியும். ஆதிக்க உணர்வுகள் சார்ந்த இயக்கத்திற்குள் பயன்படு பொருளாகிப் போன அறிவின் வழியான ஆபத்துக்களை உணர்ந்து கொள்ளமுடியும். அறிவொளியை மானுட வரலாற்றின் வளர்ச்சிப் பாங்குடன் இணைத்து நோக்குதல் ஒன்றே இந்நிலைக் கான மருந்தாகும். இதனை ஒரு சமுதாயக் கோட்பாடாக உருவாக் குவதே ஹோர்க் ஹைமர் போன்ற விமர்சனக் கோட்பாட்டாளர் களின் பேரிலக்காக அமைந்தது. மனித வரலாற்றில் மாற்றங்களைப் படைக்க கூடிய சமூகக் குழுக்கள், வகுப்புக்கள், அமைப்புக்கள் போன்றவற்றின் சுயத்தினை விழிக்கச் செய்வதே இக்கோட் பாட்டின் பயன் என முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோட்பாட்டு அணுகுமுறையானது அறிவினை துண்டங்களாக கூறுபடுத்தியும் சிறப்புநிலை அறிவுகளாக பாகுபடுத்தியும் தத்தம் நலன்களுக்கு ஏற்ப பயன்படுத்தும் இன்றைய போக்கினை முற்றாகவே மறுதலிக்கின்றது. இவ்வாறான பயன்நிலை அதிகாரங்கள் வெறுமனே அறிவுலகத்தினால் மட்டும் ஏற்படுத்தப்படுபவை அல்ல; அறிவின் துணையுடன், தொழில்நுட்ப மேலாண்மை தந்த வல்லமையுடன் விளங்கும் அரச அதிகார மையங்கள், தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்ட குழுமங்கள் போன்வற்றினாலும் கூட விளைவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஆதிக்க சக்திகள் தத்தமக்கு வசதியான முறையில் மனித இருப்பிற்கான, மனித மேம்பாட்டுக் கான விளக்கங்களை முன்வைப்பதும் உண்டு. மனித வாழ்வின் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை வெறும் தொழில்நுட்ப பிரச்சினைகளாக ஆக்குவதும், வெறும் தொழில்நுட்ப பிரச்சினை களை மனித பிரச்சினைகளுக்கான காரணங்களாக்கி பலியிடுத லும் இந்நிலைமைகளின் விளைபொருளாகும்.

இத்தகைய முரண்நிலைமைகளை கேள்விக்குள்ளாக்கும் மக்கள் அரங்கங்களின் அவசியத்தினையும் விமர்சன அறிவியல் வலியுறுத்திநிற்க காணலாம். இன்று பெரிதும் பேசப்படும் பேச்சு சுதந்திரம், மக்கள் ஒன்றுகூடுதலுக்கான சுதந்திரம், பொதுமக்கள் அபிப்பிராயங்களை நீதியான முறையில் கட்டமைக்கும் பத்திரிகைச் சுதந்திரம் போன்றவற்றின் இன்றியமையாமை பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் நிறையவே முன்வைத்துள்ளார்கள். எனினும் முதலாளித்துவத்தின் உச்ச வளர்ச்சியில் இச் சுதந்திரத்திற்கான வெளிகள் யாவும் ஒழுங் கமைத்தல் என்றபெயரில் கட்டுப்படுத் தப்பட்டு ஒடுக்கப்பட்டமை பெரும்பாலான புலங்களின் வரலா றாகும்.

விமர்சன கோட்பாட்டியலாளர்களின் நோக்கானது அறி வொளியின் இம் முரண்நிலைகளை வெளிப்படுத்தி அதனை பயன் அறிவாக்கும் நோக்கம் கொண்டது. எந்தவகையிலும் 'அறிவையே மறுகின்ற அறிவல்ல' என்ற தெளிவும் எங்களுக்கானது. இந்த வகையில் அறிவை அதிகாரத்தின் கையாளாகக் காட்டி அதனைப் புறந்தள்ளும் பின்னை-நவீனத்துவச் சிந்தனைகள் பற்றிய விழிப் புணர்வும் இன்றியமையாதது. நவீன அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றினை விழுமிய அறிவாக, விழுமிய நோக்குடனான தொழில்நுட்பமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பது விமர்சனக் கோட்பாட்டியலாளர்களின் நேர்ச்சிந்தனை யாகும். அறிவு ஆதிக்கம் கொண்டது, அறிவு மனித வாழ்வை பாதித்தது, அறிவு மனிதர்களிடையே பேதங்களை வகுத்தது எனவே அறிவே வேண்டத்தகாதது என புறந்தள்ளும் மனோபாவம் ஆபத்தானது.

அறிவின் வர்க்க நிலைப்பாட்டினை, உயர்ந்தது - தாழ்ந்தது என்ற அடுக்கமைவு வகைப்படுத்தல்களை மாக்சியமும், மாக்சியச் சிந்தனையினடியாக வடிவம் பெற்ற அறிவின் அரசியல் சிந்தனைகளும் தெளிவாகவே விளக்கியுள்ளன. இவை தவிர தேசிய, சர்வதேசிய நிலைகளில் அறிவுசார் அமைப்புக்களை அடுக்கமைவு செய்யும் நிலைமைகளும், அறிவின் வழியாக சமூக அந்தஸ்து நிலைகளை கட்டமைக்கும் நிலைப்பாடுகளும் கூட இன்றைய அறிவின் அரசியல் விவாதங்களிடை முக்கிய இடத்தைப் பெறுவன. அறிவு பற்றிய இந்த விவாதங்கள் யாவும் அறிவினை அனைத்து மக்களுக்கமான அறிவாக மாற்றுதல் என்பனையே இலக்காகக் கொண்டவை. அறிவின் வழியாக சமூக வேறுபாடுகள் கட்டமைக்கப்பட்ட பொழுதும் அதே அறிவை ஜனநாயகப்படுத் தும் கல்விசார் மாற்றங்களும் இந்தவகையில் குறிப்பிடத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் ரீதியான விவாதங்களை மறுத்து அனைத்தினையும் கேள்விக்குள்ளாக்குவது அல்லது நிராகரித்தல் என்பதே ஒரு அறிவுக் கோட்பாடாகிவிட முடியாது. அறிவை மறுப்பது என்பது மனித இருப்பை, எதிர்காலத்தை அவநம்பிக்கை என்ற சகதிக்குள்ளேயே அமிழ்த்திவிடும் எனும் விமர்சனங்கள் நம் கவனத்திற்குரியன.

அறிவின் சமூகவியல் பற்றிய இன்றைய விவாதங்களின் மையமாக அமையும் அறிவொளியின் வரம்புகளைத் தாண்டி அதனை அறிவார்ந்த சுதந்திரமான அறிவாக்கும் பணி எங்கள் அனைவருக்குமானது. இது அறிவு பற்றிய கோட்பாடுகளின் போர்க்களம் அல்ல; அறிவு பற்றிய கோட்பாடுகளின் இயங்கியல் உறவின் வழியாக புரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த அறிவு மலர்ச்சியையும் படைக்கவேண்டிய பொறுப்பு இன்னமும் தம் சுயத்தினை முற்றாக இழந்துவிடாத மனிதர்களுக்கானது என்ற விமர்சனக் கோட்பாட்டாளர்களின் கருத்தாக்கம் எம் கவனத்திற்குரியது. வசதியான, அதேவேளையில் அறிவார்ந்த ஜனநாயக சுதந்திரமின்மையை (Democratic unfreedom) பெருவழக்காக கொண்டுள்ள இன்றைய காலத்து நிலைமையினைக் கேள்விக்குள்ளாக்கும் மனிதர்களை, வரலாற்று நாயகர்களாக விமர்சனக் கோட்பாட்டாளர்கள் இனங்காட்டுவார்கள். சமூகத்தின் விளிம்பு நிலை மக்கள், மாணவர்கள், உதிரிப் பாட்டாளிகள், சிறுபான்மையினர், கவிஞர்கள் என இவர்கள் முன்வைக்கும் குழுமத்தினருக்குள் மட்டும் இந்த அறிவுப் போராட்டம் அடக்கப்படக் கூடியதா? என எழும் விமர்சனங்களும் எம் கவனத்திற்குரியன. மாக்சிய அறிவியல் உணர்த்திய வகுப்பு போராட்டம் என்பதே இனி இல்லை எனும் தீர்ப்புகளுக்குப் பின்னால் உள்ள அறிவின் அரசியல் உள்நோக்கங்களும் கூட ஆழ நோக்கப்பட வேண்டியன.

உண்மையில் விமர்சனக் கோட்பாட்டாளர்கள் குறிப்பிடும் விளிம்புநிலை மக்கள், உதிரிப்பாட்டாளிகள் போன்ற வகுப்பினர், மாக்ஸ் குறிப்பிடும் வகுப்பு போராட்ட வரையறைக்குள் அடக்கப்படக் கூடியவர்களே. நிலவும் சமூக கட்டமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதக்குழுமங்களை கூறுபோட்டு தனித்தனியாக அந்நியப் படுத்தும் அறிவுமுறைக்குப் பதிலாக அனைத்து குழுமங்கள் ஊடும் வெளிப்படும் நீதிக்கான விழிப்புநிலையை அக்கினிக் குஞ்சுகளாக்கி அறிவொளியின் ஒற்றைப் பரிமாண தன்மைகளைத் தகர்த்து, அறிவை விடுதலை செய்வதன் மூலம் மனித விடுதலைக்கும் வழிசமைக்க வேண்டும்.

விமர்சனக் கோட்பாட்டார்களின் அறிவொளி மரபு பற்றிய விமர்சனங்களை, அவர்களின் மாக்சிய நடைமுறைகள் பற்றியை விமர்சனங்களை எதிர் மாக்சிய சிந்தனைக் குழாங்களும் மானுட அவநம்பிக்கை வாதிகளும் பயன்படுத்திக் கொள்ளும் நிலைமைகள் பற்றிய விழிப்புணர்வும் இந்த அறிவியல் பயணத்தில் மிக மிக இன்றியமையாதது. இந்நிலையில் அறிவொளிக்காலச் சிந்தனை பற்றிய கருத்தாடல்கள் யாவும் அறிவின் சமூகவியல், அறிவின் அரசியல் கருத்தாக்கங்களின் அடிப்படையில் பகுப்பாய்விற்கு உள்ளாக்கப்படுவதும், அப் பகுப்பாய்வின் வழியான பாடங்கள் அறிவுலகின் அனைத்து தளங்களிலும் பரவலாக்கப்படுவதும் புலமைசார் கடமை எனலாம்.

## உசாத்துணைகள்


Adorna, Theoder and max Horkheimer (1979) **Cultural Industry : Enlightment as mass Deception in the Dialectic of Enlightenment,** London: Verso.

Held, David (1980) **Introduction to Critical Theory: Horkheimer to Habermas,** London: Hutchinson

Marcuse, Herbert (1964) **One Diamentional Man: Studies in the Ideology of Advanced Industrial Societies,** Boston: Beacon Press.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# அறிவின் அரசியல்

அரசியலின் ஆதிக்கம் படராத இடமில்லை. அதன் அதிகார விளையாட்டில் அறிவும் அரசியலாகும். கடந்த காலத்து அரசியல் தலையீடுகளை அறிவியலில் அதிகாரம் என்ற தலைப்பில் இன்றைய ஆய்வு முறையியல் வெளிப்படுத்தும் (Babble 1975). தலையீடு என்பதற்கும் அப்பால் அரசியல் இலக்குகளுக்கு இசைவாக, சூழ்ச்சித் திறத்துடன் அறிவைக் கையாளுதல் இன்று அதிகரிக்கும். இதன் விளைவாக அறிவின் அரசியல் (Politics of Knowledge) என்பதே இன்று தனித்ததோர் அறிவுப்புலமாகும். அறிவு தொடர்பான சமூகவியல் ஆர்வம் அறிவுக்கும் அதன் இருப்புக்கு மிடையிலான உறவு தொடர்பானது. (Stark, 1958) சமூக விசைகளுக்கும், கருத்தியல் உருவாக்கத்திற்கும் இடையிலான உறவினை விளங்குதலே அறிவின் சமூகவியல் (Sociology of Knowledge) இலக்காகும் இந்த வகையில் அறிவின் அரசியல் தொடர்பான ஒரு சமூகவியல் பகுப்பாய்வாக இந்தக் கட்டுரை அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் அரசியல் தொடர்பான இப்பகுப் பாய்வின் மூலங்களாக கடந்தகால சமூக, மானுடவியல் சார் ஆய்வு அனுபவங்களே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

அறிவின் அரசியல் என்ற எண்ணக்கருவின் தோற்றத்துக்கும் விழிப்புணர்வுக்கும் தொடக்ககால மானுடவியல் ஆய்வுகள் பலவும் காரணமாகியமை இங்கு கவனத்திற்குரியதாகும். காலனித்துவ அரசுகளை அமைத்த ஐரோப்பியர்களும் பிற வணிக நிறுவனத்தினரும் அந்தந்த பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினரை (native people) கட்டியாள்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கினர். அதனால் அந்தந்த நிலப்பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினரை அறிய வேண்டியவர்களாய் இருந்தனர். கட்டாயத்தின் பேரில் திணைக் குடியினர் பற்றிய இனக்குழுவியல் செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊக்கமளித்தனர். அவ்வகைச் செய்திகள் மூலம் அம்மக்களின் அரசியல் பொருளாதார முறையை நன்கு அறிய முடிந்தது. அதனால் அப்பகுதிகளில் உறுதியுடன் நிலை பெற முடிந்தது. (பக்தவத்சல பாரதி, 1990) இத்தகு உள்நோக்கங்களையும் தாண்டி மானுடவியல் தனித்ததோர் அறிவுத்துறையாய் வளர்ச்சி கண்டமை இன்று வரலாறாகும். மானுடவியல் போன்றே அதன் சகோதரத்துறையான சமூகவியலின் வளர்ச்சியும் அமையும். கால ஓட்டத்தில் அதன் கிளை விரிவுகளாய் புதிய புதிய அறிவுத்துறைகளும் எங்களைச் சேரும். எனினும் புதிய விரிவாக்கங்களிடை மறைகரமாய் அரசியலின் ஊடுருவலும் நிலை பெறுகின்றமை இன்றைய அறிவுலக அனுபவமாகும்.

குடியேற்ற நாட்டாதிக்கம் முடிந்த பின்னரும் அதிகார பரம்பரைகளுக்கு அரசியல் செய்யும் ஆசை விட்டதில்லை. ஆயினும் நேரடியாக ஆதிக்கம் செலுத்துவதற்கு பதிலாக அறிவின் வழியாக அலுவல்கள் திட்டமிடப்படுகின்றன. புதிய பல அறிவுத்துறைகளின் பரம்பல் தொடர்பான நுண் ஆய்வுகளிடையில் அறிவின் அரசியல் கரங்களை தெளிவாகவே காணமுடியும் (Garan, 1987).

ஒரு சமூகப்புலத்தை பரந்த நோக்கில் அறியும் தேடலை பெரும்பாக சமூகவியல் (Macro Sociology) என்போம். அவ்வாறே குறிப்பாக ஆழ ஒரு பகுதியை நோக்கும் ஆய்வை நுண்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் (Micro Sociology) என்போம். இந்த இரண்டுமே அறிவியல் முழுமைக்கு இன்றியமையாதன. இயல்பாய் அறிவியல் தேவையின் வழி வளர்க்கப்படுபவன. ஆனால் இந்த தேவை யென்பது திட்டமிட்ட முறையில் அதிகாரத்துக்கும் அரசுக்கும் சேவகம் செய்யும் விதமாய் கையாளப்படுமிடத்து அது அறிவியல் என்ற வரையறை கடந்து அறிவின் அரசியலாகிவிடக் காணலாம்.

உலகமயமாக்கம் (Globalization) என்பது இன்றைய தாரக மந்திரங்களில் ஒன்றாக்கப்பட்டிருக்கிறது. இது வெறுமனே ஒரு வணிகக் கொள்கையாகவன்றி உலக அரசியல் ஒருமை தொடர்பில் வழியான உலக ஒருமை, உலகமயமாக்கப்படும் அறிஞர்களின் ஒருமை எனும் பன்முகங்களைக் கொண்டது. திட்டமிட்ட முறையில் உலகின் போக்கையே மாற்ற முனைவது. இயல்பில் அறிவின் உருவாக்கம் என்பது சுதந்திரமான அறிவியல் தொழிற் பாடாக அமையவேண்டும். ஆனால் அறிவின் அரசியல் செல்வாக் கிடை அறிவின் உருவாக்கமும் முன் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்குகளை நோக்கிய கருத்தேற்றங்களாகும் ஆபத்து நிலமை களை இன்று பெருமளவில் சந்திக்க முடிகிறது.

ஆய்வு நிலையங்களுக்கு நிதி வழங்குதல், ஆய்வுக் கதிரைகளுக்கு அறக்கட்டளைகள் தரல், ஆய்வுத் திட்டங்களுக்கு ஆலோசனைகளும் மாதிரியங்களும் அன்பளிப்புச் செய்தல் என பல வழிகளிலும் இந்த அரசியற்கரம் நீளலாம். ஆய்வாளர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கியும் தமக்கு இதமான ஆய்வு ஏடுகளை பிரசுரம் செய்தும் அங்கீகாரம் வழங்கலாம். இந் நடவடிக்கைகள் எல்லாம் வெகு லாவகமாகவே நிகழும். வாங்கப்படும் அறிஞர் உணராமலே இழக்கப்படுதலும் சாதாரணமாகும்.

உலக அரங்கில் •மிக மலிவாக வாங்கப்படக்கூடிய வர்களாக அறிவு ஜீவிகள் உள்ளனர் என்ற பேராசிரியர் ஒருவரின் அண்மைய கூற்று இங்கு எம் கவனத்திற்குரியதாகும். (சிவசேகரம், *1999*). இன்று அறிவென்பது ஒரு சந்தைப் பொருளாகி நுகர்வுக் கலாசாரத்தின் முக்கிய பகுதியாகும். அறிவு அரசியல் மயப்படுத் தப்படுவதுடன் பண்டமாக்கப்படும் உண்மைபோல செய்திகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களும் தொடர்புவழி சேரவேண்டிய இடங்களைச் சென்றடையும்.

தனியே அரசியல் ஆதிக்கம் மட்டுமன்றி, அதனோடிணைந்து பொருளாதார பண்பாட்டு ஆதிக்கங்களும் அறிவுப் போர்வையில் ஊடுருவக் காணலாம். மேம்பாடு (development), நவீனமயமாக்கம் (modernization) என்கின்ற பதங்கள் சமூகமாற்றம் தொடர்பான இன்றைய எழுத்துக்களில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவன. தேசிய அரசுகளினதும் சர்வதேச முகவர்களினதும் திட்டமிடல்களில் புறவயமாக அமையவேண்டிய இந்த பதங்கள் அரசியல்சார் வலைப்பின்னலுக்குள் அமிழ்ந்து போவதை காணமுடியும். குறைவிருத்தி நாடுகள், பின்தங்கிய நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள், புதிதாய் மேலெழும் நாடுகள், புதிய சனநாயகங்கள் என்றெல்லாம் சுட்டப்படும் அபிவிருத்தி, மேம்பாடு தொடர்பான விவரணங்கள் தர்க்கரீதியான உண்மை நிலைமைகளை பிரதிபலிப்பனவா என்ற கேள்வியும் எழுப்பப்படும். அபிவிருத்தி என்ற பத பிரயோகமே மார்க்ஸிய அரசியல் நோக்கில் பாரிய விமர்சனங்களுக்குள்ளாகக் காணலாம். லத்தீன் அமெரிக்க புலத்து அபிவிருத்தி / மேம்பாடு என்பது குடியேற்ற நாட்டாதிக்கம், சுரண்டல், தங்கி நிற்றல் என்கின்ற பொருள்களிலேயே விளக்கப்பட காணலாம். (Frank, 1972).

நவீனமயமாக்கம் என்ற பதமும் இதே நிலையில் தான் இன்று பல விமர்சனங்களை சந்திக்க வேண்டியுள்ளது. குடியேற்ற நாட்டாதிக்க காலத்து ஐரோப்பிய மயமாக்கம், ஆங்கில மயமாக்கம், அல்லது அமெரிக்க மயமாக்கம் என்ற பொருள்களிலேயே நவீனமயமாக்கம் என்ற எண்ணங்களின் அரசியல் வெளிப்பட காணலாம். பண்பாட்டு நிலையிலும் நவீன விழுமியங்கள் என்பன மத்தியதர வகுப்பு அமெரிக்க விழுமியங் களாகவே விளங்கப்படுகின்றமை பற்றிய மக்கிலிலாண்ட் (Mc Clelland, 1966) கருத்து இங்கு கவனத்திற்குரியதாகும். மரபு- நவீனத்துவம் என்ற பிரிப்புக்கள் வெறுமனே சந்தையை மையமாகக் கொண்ட சங்கதியாக கருதப்படுவதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். இதன்வழி மேம்பட்ட மனிதனை நவீன மனிதனைத் தேடும் ஆராய்ச்சி வெறும் சந்தை ஆராய்ச்சியாக சந்தையை மையமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட நுகர்வோரைத் தேடும் முயற்சியாகவே முடிந்து போனது (சண்முகலிங்கன், 1997). இவ்வாறே அபிவிருத்தி என்பது தொழினுட்பவிருத்தியென்ற பொருளுடன் மட்டுப்படுத்தப் பட்டது. விளைவாக சமூகப் பிரச்சினைகளை தொழில்நுட்ப பிரச்சினைகளாக குறுக நோக்கும் நிலைமையே மிஞ்சியது. கூடவே ஆராய்ச்சிகளுக்கும் தொழில் நுட்பத்துக்குமிடையிலான பரஸ்பர சார்பு நிலை அதிகரித்தள்ளமையும் விமர்சன கோட்பாட்டாளரின் எழுத்துக்களிடை துல்லியமாகவே வெளிப்படும் (David Held, 1980). இதன்வழி அறிவாராய்ச்சியும் ஒரு முதன்மை உற்பத்திச் சக்தியாகும். அறிவானது குறுகிய பண்பாட்டு நோக்கிலான உற்பத்தியாதலுக்கு உலக இராணுவ மயமாக்கம் தொடர்பான ஆய்வு அனுபவங்கள் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

சமூக ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்துவதுடன் அநியாயமான வழிகளில் அவற்றினை தீர்ப்பதற்கான மார்க்கங் களும் அறிவின் பெயரால் முன்வைக்கப்படுவதுண்டு. நிலமானிய அமைப்பில் அரசர்களின் வல்லமை ஆண்டவன் தந்தது என தரப்பட்ட நியாயங்கள் பின்னாளில் போட்டியும் பேராசையும் மனித இயல்பில் உள்ளவை என்று அடம் சிமித் (Adam Smith) போன்றோரால் நியாயப்படுத்தப்பட்டமை இங்கு கவனத்திற்கு உரியதாகும். முழுதளாவிய பார்வையும், பல்துறை நெறிகளின் ஒன்றிணைந்த ஆய்வு முறையுமே இத்தகு நிலைமைகளில் எமக்குக் கைகொடுப்பனவல்லது. போலி ஆய்வுகளிலிருந்து உண்மை ஆய்வுகளைப் பிரித்து நோக்கிட சமூகவியலின் பெயர்சுட்டு அணுகுமுறையும் (Labeling perspective) பெரிதும் துணையாகும் எனலாம். ஆய்வின் நோக்கம், ஆய்வாளனை, ஆய்வுச் சூழலை, ஆய்வுப் பதங்களின் பொருண்மையை கேள்விக்குள்ளாக்குதலின் வழி அறிவின் பின்னணியைத் தெளிந்திட முடியும்.

தென்னாசிய ஆய்வுகள், போர்க்கால ஆய்வுகள், சமாதான ஆய்வுகள் எனப் பற்பல பெயர்களில் நிகழ்த்தப்படும் ஆய்வுகள் தொடர்பாக ஏற்கனவே கேள்விகள் எழுப்பப்படும். இலங்கை பற்றிய இன்றைய ஆய்வுகளுமே இதற்கு விதிவிலக்கில்லை. திரிவுபடுத் தப்பட்ட வரலாற்று ஆய்வுகளிலிருந்து 'உனக்கல்ல; ஊருக்கடி' என்றவிதமான சர்வதேச உள்ளூர் மனித உரிமைகள் ஆய்வுகள் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் அரசியல் விழிப்புடன் கேள்விக் குள்ளாக்கப்பட வேண்டும். நிதி உபயகாரர்களுக்கு ஏற்ற விதமான அறிக்கை எழுதுதல் போன்ற மரியாதைகளுக்கு அப்பால் அறிவுலக நேர்மை காக்கப்பட வேண்டும். மெய்ப்பொருள் காணும் அறிவுக் கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும்.

## உசாத்துணைகள்


Babble Earl. R., (1975) **Practice of Social Research,** Words Worths, California.

Chauble,S.K., (1993) **Understanding South Asia: A Super structural Analysis in South Asia - Some Reflections** (ed.), Ramakant, Aalkch Pub. Jaipur.

Frank, A.G., (1972) **Sociology of Development and Underdevelopment in Depend ence And Under development** (ed.), James Cockroft, Andrew Gunder Frank and Dale Johnson, New York: Double Leday.

Garan. D. G., (1987) **Our Sciences Ruled by Human Prejudice,** Philosophical; Library, New York.

Held, David, (1980) **An Introduction to Critical Theory: Horkheimer to Herbermas,** Hutchinson & Co. (Pub) Ltd. London.

Mc Clelland (1966) The Impulse to Mordernization, in **Modernization:The Dynamics of growth** (ed)Weiner ,New York Basic Books

Stark, W (1958) **Sociology of Knowledge**, London: Routledge and KeganPaul

*சிவசேகரம், சி. (1999)* **தினக்குரல்** *நாளிதழ் 25.05.1999,* கொழும்பு

*பக்தவக்சல பாரதி, சீ.* **பண்பாட்டு மானுடவியல்,** சென்னை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# அறிவின் வழியான சமூக மேம்பாடு:
## சாதனைகளும் சவால்களும்

'இன்றைய உலகம் அறிவு சார்ந்தது; இன்றைய வாழ்வியல் அறிவுசார் பொருளாதார வல்லமையின் வழியது' எனப்படுகின்றது. வளர்ந்த நாடுகளிலிருந்து வளர்ந்துவரும் நாடுகள் வரை அறிவின் கையாளுகை என்ற செயல்வழியாகவே மனித - சமூக மேம்பாடு என்பது விதியாகியுள்ளது. ஒரு காலத்து உடல் உழைப்பின் வழிதான் வாழ்வு என்ற வாழ்வியல் தத்துவத்தை இந்த அறிவுப் பொருளாதார ஒழுங்கு மாற்றியுள்ளது.

அறிவின் வழியான மாற்றம் என்பது தவிர்க்க முடியாத இயங்கியலாக பயன் கனிகளை உலகுக்காக் கியமை இன்றைய மனித வரலாறாகப் பதிவு பெறுகின்றது. புகழ்பூத்த சமூகவியலாளரான மாட்டின் றோவ் (Martin Trow) அண்மைய தன் எழுத்தாக்கத்தில் குறிப்பிடுவது போல "அறிவு என்பது வெறுமனே நல்ல வருமானத்தைத் தருகின்ற தொழில்தரும் சாதனமாக மட்டும் அமைந்திடவில்லை. பொருள் நலன்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பால் மனவளம், சமூகவளம் என்பனவற்றினை வாரி வழங்குவதாகவும் அமைகின்றது."

அறிவின் இந்தச் சமூகப் பயனான, மேம்பாடான அம்சங்களின் யதார்த்தம் எவ்வாறுள்ளது? அழகான மேம்பாடான உலகைப் படைப்பதில் அறிவுக்குள்ள இடத்தினை ஆராதிக்கும் அதேவேளையில் அறிவாய் இடராய் அறிவே புதிய புதிய பிரச்சினைகளின் ஊற்றுக் கண்ணாகவும் ஆகியுள்ளதா? அறிவுக்கும், சமூக மேம்பாட்டுக்கும் உள்ள உறவின் பயணத்தில் சாதனைகள் பல கண்ட மனித சமூகங்கள் சவால்களையும் கூடவே எதிர்கொள்கின்றன.

உலக அரங்கில் இன்று பெரிதும் விவாதிக்கப்படுகின்ற இவ்விடயம் எங்கள் கவனத்திற்கும் உரியது. நாளைக்கான திசையை நிர்ணயிப்பதிலும், செயல் திட்டங்களை வகுப்பதிலும் இந்த விடயம் தொடர்பான சிந்தனை இன்றியமையாதது.

எங்கள் சிந்தனைக்கான பொருளில் இரண்டு முக்கியமான பதங்கள் உள்ளன. ஒன்று அறிவு, மற்றையது சமூக மேம்பாடு. இந்த இரண்டு பதங்கள் பற்றிய தெளிதலுடன் இவை ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவுத் தன்மையையும், விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

அறிவு பற்றிய பல்வேறு பரிணாமங்கள், விளங்கங்களை நம் மனித சிந்தனை வரலாறு முழுமையும் காண முடியும். அறிவொளிக்காலம் என இன்று நாம் இனங்காட்டும் காலத்திலிருந்தே விஞ்ஞான பூர்வமான அறிவின் எல்லைகள் பலவும் மனுக்குலத்தால் எட்டப்படும். மனிதனுக்கு அப்பாற் பட்டவை எனக் கருதப்பட்ட பல விடயங்கள் மனித வல்லமைக்கு உட்பட்டமை உணரப்படும்.

மனித மனமேம்பாடு, சூழல் பற்றிய தர்க்க சிந்தனை, அறிவியல் ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பன மனிதவல்லமை மீதான நம்பிக்கைக்கும் செயலுக்கும் கருவிகளாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கும் சமூகத்தின் மேம்பாட்டுக்குமிடையிலான உறவின் விசாரணையினடியாகத்தான் நான் சார்ந்த சமூகவியல் துறையின் பிறப்பும் அமைந்தமையைஇங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. சமூகம் பற்றிய விஞ்ஞான விசாரணையாகச் சமூகவியல் என்ற அறிவுத்துறையின் வரவு, சமூக ஒழுங்கு வகுப்புக் களுக்கிடையிலான அசமத்துவம், முடியாட்சியின் மேலாதிக்கம், மாற்ற முடியாத உண்மைகள் எனும் நம்பிக்கைகள் புதிய சிந்தனைச் சூழலில் வலுவிழந்தன. மனித உரிமைகள், சமூக உரிமைகளினடி யான சனநாயக ஒழுங்கு எனும் சமூகவியல் சிந்தனை, பகுத்தறிவின் அடியான சட்டவாக்கம், அதன் வழியான புதிய சமூக ஒழுங்கு, மக்களின் சமூக அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு வாழ்வில் புதியஉருமாற்றங்கள் எனும் பின்புலத்தில்தான் கல்விக்கும் கல்விச் சமூகத்திற்குமான உறவுபற்றிய கவனிப்பும், முக்கியத்துவம் பெறுகின்றது.

கல்வி மேம்பாட்டுக்கான தேசங்களின் முதலீடு, கல்வி வளர்ச்சி சார்ந்த கலைத்திட்டச் சீர்திருத்தங்கள், கல்வி விரிவாக்கம், கல்வி நிலையங்களுக்கும் அது சார்ந்த சமுதாயங்களுக்குமிடையி லான உறவுப் பிணைப்பின் அவசியம் எனப் பல்வேறு குவிமையங் களில் கல்விக்கும் சமூக மேம்பாட்டுக்குமிடையிலான உறவு பற்றிய ஆய்வுகளும், மதிப்பீடுகளும் உலக அறிவுப்புலமெல்லாம் இன்று முக்கியத்துவம் பெறுகின்றன. பல வாதவிவாதங்கள் இந்த விடயத்தில் நீளவே நிகழ்கின்றன.

சமூக வாழ்வில் கல்விக்கான இடம் முதன்மையானது. ஆனால் கல்விச் சமூக மாற்றத்தின் சமூக மேம்பாட்டின் முகவராக உள்ளதா? தனியன்களினதும், மேட்டுக் குடியினரதும் உயர்வுக்குக் கல்வி கைகொடுத்தது என்பது உண்மைதான். ஆனால் ஒட்டு மொத்தச் சமுதாயங்களினதும் மேம்பாட்டுக்கு வழிசமைத்ததா?

இந்த வினாக்கள் சமூக மேம்பாடு தொடர்பான தெளிந்த சமூகவியல் தரிசனத்திற்கு எங்களை இட்டுச் செல்வன. “மேம்பாடு" (Development) என்ற பதம் இன்று பலராலும் பலவித அர்த்தங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சரிக்கப்படுகின்றது. அரசியல்வாதிகளிலிருந்து ஆய்வாளர்கள் வரை, வலதுசாரிகளிலிருந்து இடதுசாரிகள் வரை அவரவர் அவர்வழி என்றவாறு விளக்கங்கள் தரப்படுகின்றன.

நிலவும் மேம்பாடு தொடர்பான அத்தனை கருத்தியல் களையும் இரண்டு முக்கிய சிந்தனைக் குழுமங்களுக்குள் அடக்கி விட முடியும்.

* மாக்சியர் அல்லாதோர் (non - marxist) அல்லது மாக்சி எதிர்ப்பாளர் (anti - marxist).
* மாக்சிய வாதிகள் (marxist).

சில அறிஞர்கள் முதல் வகையினரை முதலாளித்துவ அல்லது சமூக நலனோக்கினராகவும், இரண்டாம் வகையினரைச் சமூக சமத்துவ நோக்கினராகவும் குறிப்பிட விரும்புவர்.

அறிவின் சமூக பயன்பாடு பற்றிய எந்தவொரு ஆராய்ச்சி, மதிப்பீடும் மேற்கண்ட கருத்துநிலை பற்றிய தெளிந்த ஞானத்தின் வழிதான் சாத்தியமாகும். எங்களது இன்றைய விசாரணைக்கும் அதுவே வழிகாட்டியாகும்.

சமூக மேம்பாடு என்பதனை வாழ்க்கைத்தர மேம்பாடாக, சமூகத்தின் மக்கள் வாழ்வுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதாக முதல் வகையினரின் நோக்கும், போக்கும் அமைந்துள்ளன. புகழ்பூத்த சமூகவியலாளர் மக்ஸ் வெபரிலிருந்து இன்றைய ஐ. நா. சபை வரைவிலக்கணங்கள் வரை "கல்வி என்பது சமூக நலம் சார்ந்த வாய்ப்புக்களினை மேம்படுத்தல்" என்ற பொருளிலேயே விளக்கப்படும்.

சமூக ஒழுங்கு பேணப்படுதல் என்பதே மேம்பாட்டின் உயரிய குவிமையமாக இவர்கள் கருத்தியலில் வெளிப்படும்.

மாக்ஸிய வாதிகளின் கருத்தியலோ, சமத்துவ விழுமியங் களின் அடியானது. இந்த வகையில் மேம்பாடு தொடர்பான (Kim,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973 ) என்ற அறிஞரின் வரைவிலக்கணம் எம் கவனத்திற்குரியது.

வாழ்வின் அனைத்துத் தளங்களிலும், குறிப்பாகச் சமூகப் பொருளாதார நீதி, பொருளாதாரச் செழிப்பு, அரசியல், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினைப் பெறமுடியாதபடி மறுக்கப்பட்ட மக்கள் எந்தளவுக்கு அவற்றினைக் கேட்கவும், பெறவும் முடிகின்றது. என்பதனைப் பொறுத்தே சமூக மேம்பாடு" என்பது கிம் முன்வைக்கும் கருத்தியலாகும்.

இந்தக் கருத்தியல் குழுமங்களின் முரண்பாடுகளை ஆக்கபூர்வமாகச் சிந்தித்துப் பொருத்தமான முறையில் புதிய சிந்தனைத் தடத்தில் அறிவின் பயனைச் சமூகத்திற்காக்குதலே இன்றையகால அறிஞர் கடனாகிறது.

அறிவால் சமூக மேம்பாடு சாத்தியமான அனுபவங்களை, அறிவால் மனித நாகரிகம் கண்ட சாதனைகளை, நலன்களைப் பேணுகின்ற அதே வேளையில் இன்றுவரை சவாலாக உள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்துக்கான எங்கள் செயல்களை வடிவமைப்பது காலத்தின் கட்டாயமாகின்றது.

அறிவும் அதன் கையாளுகையும் இன்று யாருடைய தனி உடைமையாகவும் இல்லை என்பதிலுள்ள மகிழ்ச்சி எல்லையற்றது. சமூக அசைவுக்கான மிகப்பெரிய காரணியாகக் குறிப்பாக யாழ்ப் பாண சமூகத்தை எடுத்து நோக்கினால் இங்கு ஒரே ஒரு தொழிற்றுறையாக கல்வியே அமைந்திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. ஒரு காலத்தில் நிலம் உள்ளவனுக்குத்தான் பொருள்வளம் என்பது போல பின்னாளில் கல்வி வழிதான் வாழ்வென்றானதும், அதன்வழி வாழ்வியலில் பல மாற்றங்களை கண்டதும் அறிவு தந்த சாதனைகள் தான். இன்றைய சமூக விழுமியங்களை நிர்ணயிக்கும் பெரும்விசையான மத்தியதர வகுப்பின் உருவாக்கத்தின் பின்னாலும் கூட கல்வியின் பங்கும் பணியும் பெருமளவில் இருந்திருக்கின்றது. ஆனாலும் இந்த அறிவின் கனிகளை அனைவருக்கும் ஆக்கும் கனவு மட்டும் இன்னமும் நிறைவேறாத கானல்நீராய்த் தொடர்கின்ற உண்மையே இங்கு எம் கவனத்திற்குரியதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் கல்வி என்ற உலகளாவிய பிரகடனங்கள், அது தொடர்பான முயற்சிகள் பலவற்றின் பின்னரும் நிலவும் கல்வி அசமத்துவம் பற்றிய புள்ளிவிபரங்கள் அதிர்ச்சி தருவன; ஆழ்ந்த கவலைக்குரியன.

மில்லியன் கணக்கான பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயதில் குழந்தைத் தொழிலாளர்களாகவும், பல்வேறு விதமான புறக்கணிப்புகளுக்குள்ளாக்கப்பட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கிட்டத்தட்ட 50 மில்லியன் பிள்ளைகளின் பிறப்பே பதியப்படவில்லையென்பதும், அவர்கள் பள்ளிக்கூடத்தி னைக் கண்டதே இல்லையென்பதும் எவ்வளவு கொடுமையானது.

வறுமையான பொருளாதார நிலை, ஆயுதப்போர் சூழ்ந்த அரசியல் நிலை, வளங்களின் பகிர்வில் அசமத்துவமும் அநீதியும் கொண்ட சமூகநிலை என்பது இந்தப் பிள்ளைகளின் விதியாகி யுள்ளது. (UNESCO, 1974; கௌரி, 2009)எழுத்தறிவு பற்றிய அரசுகளின் கவனிப்பில் கூட முன்னைய அந்தரம் இன்று குறைந்துள்ளமை கவலையுடன் நோக்கப்படு கின்றது. அரசுகளின் முன்னுரிமையில் கல்வி பெறுகின்ற இடம் துயரமானது.

உலகளாவிய நிலையில் 129 நாடுகளில் 51 நாடுகள் மட்டும் எதிர்பார்க்கப்படுகின்ற அளவுக்கு ஆரம்ப பாடசாலை வாய்ப்பு களைக் கொண்டுள்ளன. இன்றைய உலக குடித்தொகையில் 774 மில்லியன் மக்களுக்கு ஒழுங்கான எழுத்தறிவு இல்லை என்பது அதிர்ச்சியான விடயமில்லையா. 77 மில்லியன் பிள்ளைகள் வரையில் பாடசாலை செல்லவேண்டிய வயதில் பாடசாலையில் இல்லை. இவர்கள் இடைவிலகல் பிள்ளைகள் பற்றிய ஆய்வுகளின் மூலப் பொருட்களாகியுள்ளனர்.

உலகளாவிய இந்த புள்ளிவிபரங்களின் மத்தியில் இலங்கை யின் நிலவரமும் மகிழ்ச்சி தருவதில்லை. இலவசக்கல்வி, 94.2% எழுத்தறிவு வீதம் என்ற பெருமிதங்களின் மத்தியிலும் கல்விய மைப்பு வெளிப்படுத்தும் பின்னடைவுகள் பாரதூர மானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 மில்லியனுக்கும் அதிகமான, பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயதினரில் மூன்று லட்சம் வரையான பிள்ளைகள் வீதியில் உள்ளார்கள். பள்ளிசெல்லும் பிள்ளைகள் நிலையும் நிரந்தரமானது அல்ல. 80% மான பிள்ளைகளின் படிப்பு, கல்விப் பொதுத் தராதரப் பத்திர (GCE) சாதாரணதர பரீட்சையுடன் முடிந்து போகின்றது. இந்தப் பிள்ளைகளிலும் 50 வீதமானவர்கள் வரையிலேயே சித்தி பெறுகின்றார்கள் என்பதும் எம் கவனத்திற் குரியது.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரவகுப்புக்குச் செல்லும் பிள்ளைகளிலும் கூட 67-70% பிள்ளைகள் தோற்றுப் போன பிள்ளைகளாகிவிடுகின்றனர்.

பாடசாலை இடைவிலகல், குழந்தைத்தொழிலாளர் என்றதும் கல்வியில் நாட்டமின்மை, பெற்றோரின் பொறுப் பின்மை என தீர்ப்பு வழங்கிவிடும் சந்தர்ப்பங்களே வெளிப்படக் காணலாம். ஆயினும் அண்மைய எங்கள் களஆய்வுகளின் தரவுகள் பேசும் கதைகள் வாழ்வாதாரத்தை காணும் நோக்கிலேயே இடைவிலகல் என்பதனை பெருவழக்காக வெளிப்படுத்துகின்றன.

தந்தையின் இழப்பு, அல்லது அவர்களின் பொறுப்பற்ற நடத்தைக்கோலங்கள் என்பன பிள்ளைகளின் கல்வியை குழிதோண்டிப்புதைத்திடும் அவலம் இக்கதைகளின் சாரமாகின்றது.

'அப்பா இல்லை; அம்மாவுக்கும் ஏலாது, நான் வேலைக்குப் போனால்தான் வீட்டில அடுப்பு எரியும்'

'அப்பாவின்ர உழைப்பு அவர்குடிக்கே போதாது; எப்படி நாங்கள் சீவிக்கின்றது. அதுதான் நான் தொழிலுக்கு வெளிக்கிட்டனான்'

'எனக்கு படிக்க நல்ல ஆசை; என்னுடைய நண்பர்கள் பள்ளிக்கூடம் போறதைப் பார்க்க எனக்கு சரியான அழுகை அழுகையாக வரும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் உழைச்சு எப்படியும் என்ரை தம்பிதங்கச்சியைப் படிப்பிப்பன்'

இந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவனிப்பு எங்கள் காலக்கடமையாக உள்ளது. கல்வியமைப்பின் கட்டமைப்புத் தொடர்கின்றது. வேகமாக மாறிவரும் உலகில் பங்கேற்பதற்கு இன்றியமையாத கல்வியை இழந்த இந்தப் பிள்ளைகள் வாழ்வினை மீட்டுத்தருவது இன்றியமையாதது. ஆனால் இன்று சந்தையால் வடிவமைக்கப்படும் பொருளாதாரத்தில் கல்வியும் பண்டமாக்கப்பட்டுள்ளது. மாணவர்களை உற்பத்திப் பண்டங்கள் (Products) என அழைப்பது, சந்தையில் விலை போகக்கூடிய பட்டதாரிகள் (Marketable Graduates) என அழைப்பது, அறிவு வேலையாட்கள் (Knowledge Workers) என வரையறுப்பது போன்ற அவலங்கள் எம் கவனத்திற்குரியன. அறிவும் திறனும் பொருளாதார பண்டங்களாகிய நிலையில் அதனைத் தரும் கடமை யாருக்கானது என்ற விடயமும் இன்று கேள்விக்குறியாகியுள்ளது. அனைவரது கல்வியையும் உறுதிசெய்யும் உறுதியான நல்லாட்சியே எம் தேவையாகியுள்ளது.

சமூக வகுப்புக்கும் கல்வி அடைவுக்குமான இணைவை எங்கள் புலத்துச் சமூகவியல் ஆய்வுகள் உறுதி செய்வனவாகவே உள்ளன. எங்கள் கல்விக் கொள்கைகள், பாடசாலையமைப்பு, அது சார்ந்த வகைப்பாடுகள், நடைமுறைகள் யாவும் மனிதர்களுக்கிடையிலான, சமூகங்களுக்கிடையிலான இடைவெளிகளை மென்மேலும் அதிகரிப்பதாகவே உள்ளன. கல்வித்தத்துவம் வேறு நடைமுறை வேறு என்பதாகவே செயன்முறைகள் தொடர்கின்றன. எத்தனை சீர்திருத்தங்கள் வந்த போதும் அடிப்படை மாற்றங்களை எட்டமுடியாமைக்கு என்ன காரணம்?

சுயமாய், எங்கள் சூழமைவுக்கு ஏற்ற கல்வித் திட்டங்களை நாம் வகுத்திருக்கவில்லை. காலனித்துவத்தின் நீட்சியாகவே எல்லாம் தொடர்ந்து இன்னமும் நவ காலனித்துவமாய் எல்லாம் தொடர்கிறது. அதிகரிக்கும் பாடசாலை இடைவிலகல், இளைய தலைமுறையினரின் அமைதியின்மை என நீளும் சமூகப் பிரச்சினைகளுக்குப் பின்னால் பொருத்தப்பாடில்லாத கல்வி நடைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதும் அநீதியான மேலாண்மைகளினதும் கரங்களைக் காண முடிகிறது. இவற்றுக்கு மேலாகத் தனியார் மயமாக்கம், உலக மயமாக்கம் என்ற புதிய தத்துவ வினகக்ங்களிடை அறிவை வியாபாரப் பண்டமாக்கி அதற்குள் இளைய தலைமுறையினரின் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றோம். தேசங்களின் வாழ்வும் வளமும் இதன்வழி வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன.

மீளவும் விஷவட்டமாய்ப் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை நிறுவுதலாகவே பல கல்வி விரிவாக்கங்கள் முடிந்து போகின்றமை பற்றிய அச்சம் இன்று பெரிதும் உணரப்படும்.

கூடவே இன்றைய அறிவின் முகாமைத்துவம் அதன் முகாமைத்துவத்துடன் இணைந்த அறிவின் அரசியல் பற்றிய விடயங்களும் எங்களின் குறிப்பான கவளனத்திற்குரியன வாகின்றன.

அறிவின் பெயரால் எங்கள் அறிவுக்கூடங்களில் கற்பிக்கப்படும் கலைத்திட்டங்கள் எந்தளவுக்குச் சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டுக்கு வழிசமைப்பனவாக உள்ளன? எங்களது வகுப்பறைச் செயற்பாடுகள் பிள்ளைகளின் ஆக்கத்திறனான, சமூகப்பயனான செயல்வீரத்துக்கும் வழிசமைப்பனவாக உள்ளனவா?

இவற்றுக்கான விடைகளைத் தேடும்போது எங்களுக்கு ஏற்படுகின்ற விரக்தி நிலைகளின் புரிதலில் நாங்கள் கண்ட வெற்றிகளினதும் தோல்விகளினதும் பாடங்களிலிருந்து தான் எமது எதிர்காலத்துக்கான பயணத்தின் செல்நெறி அமைய வேண்டும்.

வேகமான அறிவியல் புரட்சி, தொழில்நுட்ப மறுமலாச் சிகளிடையே உலகம் சுருங்கியதான தத்துவங்களுக்குள் மகிழ்ச்சி கொள்கின்றோம். அதேவேளை சமுதாயங்களைத் தொலைத்த குறுகிய தனிமனித வாதங்களுக்குள் மனிதம் யந்திரமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளை விளங்கிக் கொள்ள விருப்பம் இல்லாமல் இருக்கின்றோம். விரும்பினாலும் விளங்க நேரமில்லாமல் அலைந்து திரிகின்றோம். அறிவாராய்ச்சியின் உன்னதக் கண்டுபிடிப்புக்களில் ஒன்றான அணுகுண்டின் பிறப்புக்குக் காரணமான ஐன்ஸ்ரீன் அதன் இன்றைய பாவனை தொடர்பாக நொந்து வருந்தியதான நிகழ்வுகள் இன்னமும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் வரவான தொலைக்காட்சி மற்றும் தகவல் வலைப்பின்னல்களிடையே யதார்த்தங்களை மறுத்துக் கனவுலகை யதார்த்தமென ஆராதிக்கின்றோம். அறிதல் இல்லாத செயல் இன்றைய தகவல் யுகத்தின் உள்கட்டமைப்பாகியுள்ளது. இதன் விளைவாகவே இன்று எழுத்தறிவுக்கான எங்கள் ஏக்கம், ஊடக அறிவுக்கான ஏக்கமாகவும் விரிவாக்கம் பெற நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

அறிவின் வழியான சமூக மேம்பாடு தொடர்பாக நாங்கள் சிந்தித்த ஒவ்வொரு அம்சங்களைப் பற்றியும் நாம் ஆழ உரையாட வேண்டும். எங்கள் கவனத்திற்குட்பட்ட விடயங்கள், வினாக்களில் சில கல்வியியலாளர்களாகிய எங்கள் எல்லைக்குள் உள்ளன. பல எங்களைக் கடந்த சமூக அரசியல் புலங்களுக்குள் உள்ளன. இந்நிலையில் தனித்தும், கூட்டாகவும் இந்த விடயம் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து காத்திரமான முடிவுகளை நாம் ஊட்டுவது இன்றியமையாதது.

கல்வியாளர்களுக்கு அப்பாலான விடயங்களில் எங்கள் அறிவு வல்லமை என்ற தகுதிப்பாட்டுடன்,நேரான திசைநோக்கிய அறிவின் சமூகப் பயன்பாட்டினை உறுதி செய்வதற்கான எடுத்துரைப்புக்களை செய்யவேண்டியதும் அவசிய மானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்

Kim, Kynog Dong (1973) Toward A Sociological Theory of Development, **Rural Sociology**, Vol. , No 4

Trow, Martin (1972) **Expansion and Transformation of Higher Education**, New Jersey: General Learning Press.

UNESCO, (1974) **Racism and Apartheid in South Africa and Namibia**, UNESCO Publication

**கௌரி சண்முகலிங்கன் (2009) இலங்கையில் கல்வியும் இனஉறவும்,** கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக் கல்வி

ஊடக அறிவு என்ற பதம் தமிழுக்குப் புதியது. ஆனாலும் அதன் அவசியம் எங்களுக்காகி வெகு நாட்களாகிவிட்டது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவான வெகுஜன ஊடகங்களின் நீட்சியில் எங்களின் அனைத்துவகை அனுபவங்களும் நிர்ணய மாகின்றன. ஏற்கனவே இருந்த அனுபவங்கள் உருமாற்றப்படு கின்றன. நுண்நிலையில் தனிமனிதரிடத்தும் பருநிலையில் பண்பாட்டுத் தளத்திலும் துரிதமாகவே இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன.

நவீன சமூக உலகை விளங்கிக்கொண்டு அதிலே அர்த்த முள்ள வினைத்திறனான மேம்பட்ட வாழ்வினைக் காண்பதிலிருந்து இந்த நவீன வாழ்வு எங்களுக்குத் தந்துள்ள துயரங்களிலிருந்து கற்பனை சுகமென தப்பிக்கொள்வதுவரை ஊடகங்கள் எங்களுக் குள் விதைக்கின்ற வாழ்வின் பரிமாணங்கள்.

எங்களது அறிவு, மனவெழுச்சி, அழகியல், ஒழுக்கவியல் என அனைத்து முகங்களிலும் ஊடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைக்கின்ற பண்பாட்டின் தாக்கங்கள் இன்றைய மனிதனின் நீட்சியாய் அவன் பார்வை, கேள்வி, தொடுகை, காலம், வெளி என எல்லாமே ஊடக ஆட்சியின் கீழ் உள்ளன.

மூன்றாம் உலக நாடுகள் என்றும் வளர்முக நாடுகளின் பிரஜைகள் என்றும் பல்வேறு தர நிர்ணயங்களில் தாழ்நிலையைப் பெற்ற போதும், ஊடகப் பாவனை என்ற அளவுகோலில் வளர்ச்சியடைந்த நிலையில் எங்கள் இருப்பு.

எங்களது இந்த இருப்புக்கான மிக எளிதான ஒரு குறிகாட்டியாக ஒரு நாளில் எங்கள் வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் எத்தனை மணி நேரம் குந்தியிருக் கின்றோம் என்ற அளவீட்டினைக் குறிப்பிடலாம். அவ்வாறே இந்த வெகுஜன ஊடகங்களின் வழி எதனைப் பெற்றுக் கொள்கின்றோம். நாம் பெறுகின்றவற்றின் சமூகப் பெறுமதி எத்தகையது? அவை எமக்குள் விதைக்கின்ற, நம்மூடாக நாம் வாழும் சமூகத்துக்குத் தருகினற் விழுமியங்கள் எத்தகையன என்ற வினாக்களுக்கான விடைகளைக் காண்கின்ற வழிமுறையாகவே ஊடக அறிவு என்ற புதிய அறிவுப்பரப்பின் தரிசனம்.

ஒரு காலத்தில் ஒரு சமூகத்தின் மேம்பாட்டினை அளப்பதற் கான இன்றியமையாத குறிகாட்டியாக எழுத்தறிவு பயன்பட்டது. இன்றும் கூட அதன் முக்கியத்துவம் உள்ளது. வாய்மொழியான அறிவின் கையளிப்பு எழுத்தறிவுப் பண்பாட்டுடன் பாரிய மாற்றங் களைக் கண்டது. ஊடகங்களின் வழியான அறிவும் பண்பாடும் வியாபாரமாகியுள்ளது. தங்கள் இருப்புக்கும் நிறைவான வாழ்விற் கும் அரணாகும் ஊடகங்களை மக்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதன் உச்சப் பயண்பாட்டை எப்படி உறுதி செய்யலாம் என்ற எல்லைக்குள் ஊடக அறிவின் தேடல் இன்று உலக சமூகங்கள் பலவற்றிலும் ஆரம்பமாகி உள்ளது. (Potter, *1988*).

கிட்டத்தட்ட 40 நாடுகளின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இன்று ஊடக அறிவு இடம்பிடித்துள்ளது. ஆரம்ப, இடைநிலைப் பாடசாலை மட்டங்களில் ஊடக அறிவின் பயன்களைப் பெற்றுள்ள இந்த நாடுகளின் அனுபவங்கள் எங்களுக்காவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது? தாமதிக்கும் கணங்கள் எல்லாம் பாதகமானவையே எனும் சமூக சிந்தனையாளர்களின், சமூகவியலாளர்களின் ஆதங்கத்தின் அடியாகவே இக்கட்டுரை வடிவம் பெறுகின்றது.

## II

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் அதிக தாக்கம் கொண்டதாக விளங்கும் தொலைக்காட்சியும், தொலைக்காட்சி யின் விரிவாக்கமாகவே எங்கள் புலங்களில் உணரப்படும் வீடியோவுமே இந்த உரையின் குவிமையங்களாகின்றன. தனியனி லிருந்து சமூகம் வரை ஆழ்ந்த செல்வாக்கினைக் கொண்டுள்ள இந்த ஊடகங்களின் பாவனை யாழ்ப்பாணத்தில் எவ்வாறுள்ளது?

தேர்ந்தெடுத்த சமூகப்புலங்கள், பாடசாலைகள், இந்த ஊடக உள்ளடக்க விநியோகஸ்தர்களுடனான நேர்காணல்கள் அவதானங்களினடியாக எங்களது ஆய்வுகள் வெளிப்படுத்திய உண்மைகள் கவலை தருவன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கெனத் தரப்படும் நேரம் அதிகளவு நுகரப்படும் நிகழ்ச்சிகளின் தன்மை, வீடியோவைப் பயன்படுத்தும்விதம், வீடியோ நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கும் விதம் என்பன பற்றிய அடிப்படையான கேள்விகளுக்கு நாங்கள் கண்ட பதில்கள் எமது சமூகத்து ஊடக அறிவின் மோசமான நிலையைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன.

தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கான காரணங்களில் பொழுதுபோக்கு என்பதே அதிகளவு வீதத்தில் அமைந்திருந்தது. யாழப்பாண நகரத்தை அண்டிய பகுதிகளிற் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 73 சதவீதமானவர்கள் பொழுது போக்கிற்காகாவே தொலைக்காட்சி நுகர்வு என்ற அதேவேளையிற் 15 விதத்திற்குக் குறைவானவர்களே ஏனைய அறிவியல் தகவல் பெறும் நோக்கிற்காக எனும் பதிலைத் தந்திருந்தனர் (ஜெயந்தினி 2003). இன்னும் சில புலங்களில் காரணம் இல்லாமலே தொலைக் காட்சிக்கு அடிமையாகிப் போயுள்ளவர்கள் பற்றிய பதிவுகளையும், இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். அமெரிக்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் ஆய்வுக்கு உட்பட்டவர்களிற் கிட்டத்தட்ட 40 சதவீதமான மாணவர்கள் தாம் தொலைக் காட்சிக்கு அடிமையாகி விட்டோம் எனக் குறிப்பிட்டனர் (Smith, 1986). எங்களது சூழலில் 10-15 சதவீதத்தினர் தான், இவ்வாறான வகைப்பாட்டிற்குள் அடக்கக்கூடியவர்களாக உள்ளனர். எனினும் இந்த அளவு அதிகரித்துச் செல்வதாகவே உணர முடிகிறது.

இவ்வாறாக சதா தொலைக்காட்சிக்குள் அமிழ்ந்து போகும் குழந்தைகளின் குடும்பச்சூழல் பற்றிய தரவுகளும் இங்கு நம் கவனத்திற்குரியன. பிள்ளைகளோடு தங்கள் நேரத்தினைப் பகிர முடியாத பெற்றோர்கள் அல்லது அன்பாதரவாக நடந்து கொள்ளாத பெற்றோர்களைக் கொண்ட இல்லங்களிலேயே இவ்வாறான எல்லை கடந்த நுகர்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தகு தொலைக்காட்சி, விடியோக்காட்சி, சூழமைவு பற்றிய அவதானிப்புக்களும் கவனத்திற்குரியன. நடுவீட்டுக்குள் தொலைக்காட்சித் தரிசனம், படிக்கின்ற பிள்ளைகள், படியாத பெரிய பிள்ளைகள் அனைவரினதும் சங்கமம். சமூக மேம்பாட்டிற் கான குறிகாட்டியாகக் கருதப்படும் எழுத்தறிவு, கல்வி அடைவு களுக்கும் தொலைக்காட்சி, வீடியோத் தரிசனங்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இணைப்பு இருப்பதாகத் தெரிய வரவில்லை.

எனினும் பிள்ளைகளின் கல்விப் பரீட்சை பற்றி விழிப்புணர்வு அதிகரிக்கும் வேளைகளிற் பிள்ளைகளைப் படிக்கும் அறைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கும் நிலைமைகளை அவதானிக்க முடிகிறது.

எங்களது ஆய்வுக்களங்களில், கிட்டத்தட்ட 20 சதவீதமான இல்லங்களில் மட்டும் பெற்றோர்களின் ஊடக விழிப்புணர்வு, தொலைக்காட்சிப் பாவனையை முற்றாக தவிர்ப்பதன் வழி வெளிப் பட்டது. மிகச் சிறிய அளவில் 5 வீதமான இல்லங்களில் மட்டும் ஓரளவுக்கு நிகழ்ச்சிகளைத் தேர்ந்து பார்க்கும் நிலைமையைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தெரிவு என நியமங்கள் பெரிதாக ஏதுமில்லை. தரப்படும் தொலைக்காட்சித் தொடர்களின் அஞ்சல் ஓட்டமாகவே அது அமைந்து விடுகிறது. இந்த அஞ்சல் ஓட்டத்தின் தரிசன அளவுக்கேனும் வீடுகளிற் பெண் விடுதலை உள்ளது. "கிரிக்கெட் மச்" தொடர் ஒளிபரப்பு வேளைகளில் மட்டும் ஆணாதிக்கம் வெற்றி பெறுகிறது. (இந்நாள்களில் தொலைக் காட்சிச் சீரியல்கள் நிறுத்தப்பட்டு விடுவதும் உண்டு).

பொதிகை போன்ற தேசிய தொலைக்காட்சி நிலைய ஒளிபரப்புக்கள் மற்றும் அறிவு சார்ந்த ஒளிபரப்புக்கான நேர ஒதுக்குகை மிக மட்டுப்பாடானதாகவே உள்ளது. இவ்வளவு நெருக்கடிகளிடையேயும் டிஸ் அன்ரனா "கேபிள் ரீவி" தொழில் நுட்ப வசதிகள் இங்கு பரவலாகி வருகின்றமையும் கவனத்திற் குரியது. வீட்டிலே கேபிள் ரீவி பொருத்துவதற்கான விவாதங்களில் அறிவுபூர்வமான காரணங்களாக National Geographic Channel, B.B.C உலக செய்திகள் போன்றவை முன்வைக்கப்பட்டாலும், தொடர்பு கிடைத்த பின், சன் ரீவிக்கே நேரம் போதாமற் போய்விடுகின்றது. "சலனத்திலிருந்து கோலம்" வரை தொடக்க இசையே பலருக்குப் பாடமாக இருக்கின்றது.

மின்சாரம் எட்டாத அல்லது எட்டியும் கிட்டாத இல்லங்கள் இந்தத் தொடர் ஊடகச் சாதனங்களை இன்னமும் தொட முடியாத இல்லங்களைப் பொறுத்தவரையில் மேற்குறித்த நிலமைகள் பொருந்தா. எனினும் அவ்வாறான இல்லங்களின் ஏக்கப் பெருவெளி யில் இந்தத் தொலைக்காட்சிக் கனவுகள் நிறைந்திருப்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். வாடகை ஜெனரேட்டர். ரி.வி, டெக் உபயத்தில் இவர்களின் ஏக்கங்கள் தணிக்கப் படுகின்றமையும் இங்கு நம் கவனத்திற்குரியது.

எங்கள் புலங்களில் ஒட்டுமொத்தமான வீடியோப் பாவனை யும் அறிவுபூர்வமானதல்ல. எங்களது ஓய்வு நேரங்கள் வீடியோக் காரரினால் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. வேலைக்கான வேளைகளும்கூட விழுங்கப்படுகின்றன. வீடியோப் பாவனை தொடர்பான உலகில் நலமான அனுபவங்கள் எங்களிடம் இல்லை. மரபார்ந்த வெளிப்பாட்டுக்கலைகளை, பண்பாட்டியல் விவரணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை, கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளைக் காண்பதற்கான மார்க்கமாக யுனெஸ்கோ போன்ற பண்பாட்டமைப்புக்கள் வீடியோவை சித்தரிக்கும் அறிவுத்தளம், இங்கு அறியப்படாத அனுபவமாகும் (Shanmugalingan, 2001). அறிந்தவர்களுக்கும் அதனை வழங்குவதற்கு யாரும் இல்லை. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பயனான நிகழச்சிகளைப் பார்ப்பதற்கு நேர நிர்ப்பந்தம் உள்ளவர்கள் அவற்றினைப் பதிவுசெய்து தமக்கு வாய்ப்பான நேரங்களிற் காண்பதற்கான கருவியாகவே வீடியோவின் வரவு என்ற கருத்தாக் கத்திற்கும் (Levy. *1983:)* இங்கு அர்த்தமில்லை.

தொலைக்காட்சிக்குள்ள அதே தெரிவு நியாயங்களே வீடியோவுக்குமாகின்றது. தொலைக்காட்சிக்கு வராத திரைக்கு வராத புத்தம் புதிய திரைப்படங்களைப் பார்ப்பதற்கு அல்லது தமக்கு பிடித்த நாயகர், நாயகிகளைக் மீள மீளக் காண்பதற்குக் அவர்களது ஸ்ரைல்-பாவனைகளைக் கற்றுக் கொள்வதற்கான பயிலரங்குகளாகவே வீடியோத் தெரிவுகள் தரிசனங்கள்.

இவற்றுக்கு மேலாகப் பண்பாடு கண்ட வாழ்க்கை வட்டச் சடங்குகளான பூப்புச் சடங்குகள், திருமணம் போன்றவற்றினைக் கொச்சைப்படுத்தும் வீடியோப் படப்பிடிப்புக்கள், சுற்றம் சூழப் பின்னர் ரசிக்கின்ற அபத்தங்கள், இடைக்காலத்துப் பூப்புச் சடங்குகளை நடத்துவதற்கு மறுப்புச் சொன்ன பிள்ளைகள். இப்போது வீடியோப் படப்பிடிப்பிற்காகவே பெற்றோரை நிர்ப்பந்திப்பதாகவும் நியாயங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த அபத்த நாடகத்தில் இன்று மரண வீடுகளும் தப்பவில்லை.

மேற்கூறிய இந்த நிலமைகளின் விளைவுகளைப் பற்றிய சிந்தனை கிஞ்சித்துமில்லாமல் மின்சாரக் கனவாக எல்லாம் நடக்கின்றது. பல்வேறு தளங்களிலும் இந்தக் காட்சி அனுபவத் தாக்கங்கள் வெளிப்படுகின்றன.

சமூகவியலாளர்களான பீற்றர் பேஜர் (Peter Beget) தோமஸ் லக்மன் (Thomas Luckman) போன்றோர் முன்வைத்த, சமூக யதார்த்தங்களைக் கட்டமைக்கும் வெகுஜன ஊடகக் கோட்பாடும் எங்கள் சமூகச் சூழலுக்கு வெகுவாகவே பொருந்துகிறது. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தில் தங்களை இழப்பதும் மறுபுறத்தில் சூழமையின் நலங்களைத் துறப்பதுமாக இந்தக் கனவுப் பயணம் தொடர்கின்றது.

பிள்ளைகளால் படிக்க முடியவில்லை அல்லது படிப்பதற்கான நேரம் சுருங்கிப்போய் உள்ளது. இவ்வாறே விளையாடுவதற்கான நேரம், அம்மா, அப்பா சுற்றத்துடன் உறவாடுவதற்கான நேரம், ஓய்வெடுப்பதற்கான நேரம் என அனைத்துமே குறுகிப் போகிறது. சமூக ஈடுபாடு என்பதே முற்றாக அற்றுப் போகிறது. பிள்ளைகள் இயல்பாக வளர்வதற்கும் இன்றியமையாத தேடலையும் ஆக்கத் திறனான கற்பனையையும் சாகடித்து முட்டாள் பெட்டி ஒன்றுக்குள் முகம் புதைக்கும் இருப்பையே மிஞ்ச வைக்கிறது.

ஊடகங்கள் சார்ந்த எங்கள் சமூகத்தின் நிலமை பற்றி இந்த தரிசனங்களிடை ஊடகவியல் அறிஞராக மார்க்ஷல் மக்லூகன் குறிப்பிட்ட அர்த்தமுள்ள வார்த்தைகள் மேலெழுவது தவிர்க்கமுடியாதது. மீன் தன் ஈரத்தை உணருமா? என்ற வினாவை எழுப்பி இல்லை என்ற பதில் தந்து விளக்கமும் சொல்லுவார் மக்லூகன். நீரின் மேலாண்மைக்குள் இருக்கும்வரை உணரப்படாத உண்மையை உணரும் நிலமை என்பது நீருடனான அதன் தொடர்பறு நிலைமையாக, நிகழமுடியாத ஒன்றாகவே அவராற் குறிப்பிடப்படும்.

எங்களது நிலைமையை விளங்கவும்-விளக்கவும், இந்த மீன் கதை பயன்பட்டாலும் நிலைமையை மேம்படுத்தலில் அவநம்பிக்கையைத் தந்துவிடும். இந்த இடத்தில் தான் ஊடக அறிவு வரப்பிரசாதமாகின்றது.

எங்கள் பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் ஊடக அறிவிற்கான இன்றிமையாத இடத்தை உறுதி செய்வதில் இனியும் காலதாமதம் கூடாது. கல்விக் கொள்கை வகுப்பாளர்கள் கல்விச் சமூகவியலாளர்கள் ஊடாக மாணவர்கள் ஆகிய அனைவரும் பங்கேற்கும் சிந்தனைக்களங்களின் வழி, ஊடக அறிவு கல்விக்கான திட்டங்கள் செயல் வடிவம் பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஊடகங்களின் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு

* வெகுஜன தொடர்பு ஊடகங்களின் உள்ளடக்கங்களை பகுப்பாய்வு செய்து பகுத்துணரும் திறன்.

* நல்லதை ஆராதிக்கவும் அல்லாததைத் தவிர்ப்பதற்கு மான ஏற்பாடுகளைக் காணல்.

* எங்களுக்கு வேண்டிய நலமான ஊடகங்களை, ஊடகப் பண்பாட்டினைக் கட்டியமைத்தல்.

முன்சொன்ன இலக்குகளைக் குவிமையமாகக் கொண்டு எங்களின் ஊடக அறிவுக்கான கலைத்திட்ட வகுப்பும், கற்பித்தலும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ஊடக அறிவு பற்றிய இந்தச் செயற்பாடுகள் தனியன்களை நோக்கியதாக நுண்நிலையில் அமையும் அதேவேளை, பருநிலையில் ஒட்டுமொத்தமான சமூக மேம்பாட்டுக்கும், பண்பாட்டு மேம்பாட்டுக்கும் உரிய விதத்தில் எங்கள் செயற்பாட்டினைத் திட்டமிடுவதும் அவசியமாகும்.

நுண்நிலையில் தனியன்களின் எதிர்பார்ப்புக்கள், ஊக்கங்கள், சிறப்பு ஆர்வங்கள் என்பவற்றினடியாகவே ஊடக புலக்காட்சியின் ஆழமும் ஊடுருவுதலும் அமைகின்றமை கவனம் பெறவேண்டும். பிள்ளைப் பருவமுதலே வளர்க்கப்பட்ட ரசனை, விழுமியங்களினடியாகவே புலக்காட்சிக்கான மேற்சொன்ன உளவியல் காரணிகள் கட்டமைக்கப்படுகின்றன.

ரசிகர்கள் மனதில் உள்ள அவர்களது காண விரும்புகின்ற ஒரே வார்ப்பிலான மாதிரி வடிவங்களின் திரைப்பட வீடியோ பாத்திரங்கள் - கதையமைப்புக்கள் அமையப் பெறுவதும் இதன் அடிப்படையில்தான். யதார்த்த வாழ்வியல் நிலமைக்கு முரணான முற்சாய்வான (Prejudice) கற்பிதங்களை ஊடகங்கள் விதைப்பதும் பின்னர் ஒரே வார்ப்பில் மீள மீள அதே மாதிரி வடிவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படும்போது அவை நம்பகமாக உணரப்படுவதும் என ஒரு விக்ஷ வட்டமாகவே எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில் ரசிகர் மகிழ்ச்சிக்காக அல்லது பொழுது போக்குக்காக என நிகழ்ச்சிக்கான காரணங்கள் சொல்லப்பட்ட போதும், இந் நிகழ்ச்சிகளின் விநியோகஸ்தர்கள் அல்லது இவற்றுக்கு அனுசரணையாகும் அரசுகள், அரசுசார் ஊடக நிறுவனங்களுக்கு மறைகரமான நிகழ்ச்சி நிரல் உள்ள விடயமும் ஊடக அறிவாக உணரப்படவேண்டியது இன்றியமையாதது. மக்களின் சிந்தனை வெளியை மூடி நிரப்பிவிடுவதன் மூலம் தயாரிப்பாளர்களுக்குப் பணலாபமும் அரசுகளுக்குத் தாம் நினைத்தவாறு எதிர்ப்புகளின்றி "அலுவல்கள்" செய்து முடிப்பதற் கான அரசியல்இலாபமும் வாய்த்து விடுகின்றமை கவனம் பெறவேண்டும்.

இந்தவகையில் ஊடகங்களின் உடைமையாளர்கள் யார்? என்ற கவனிப்பும் கூடவே இன்றியமையாதது. அரசயில்மற்றும் சமூக விவகாரங்கள் தொடர்பான ஊடக உடைமையாளரின் கருத்தியலுக்கு ஏற்பவே நிகழ்ச்சிகளின் நிர்ணயம் என்பது அடிப்படையான உண்மையாகும். பலசந்தர்ப்பங்களில் பார பட்சமானவையாய், மேலாண்மைச் சக்திகளின் விழுமியங்களோடு முரண்படாமையே ஊடக நெறிமுறையாகிவிடுகின்றது. இதனாலே தான் தொலைக்காட்சிச் செய்திகள் நடுநிலைமையானவை அல்ல எனப்படுகிறது. சமூக அரசியல் ரீதியான பண்பாட்டுப் பொரு ளாகவே செய்திகளும் வடிவமைக்கப்படுகின்றன என்பதற்கு ஆழமான ஆய்வு ஏதும் வேண்டியதில்லை. எந்தக் கட்சிக்காரரின் ஊடகம் என்ற உடைமை அறிவுடனேயே வாசிக்கப்படும் செய்தியையே நாங்கள் கேட்க வேண்டியிருக்கிறது.

தணிக்கை செய்து இவற்றினைக் கட்டுப்படுத்தல் என்ற நடைமுறை இன்று ஒருபுறம் அர்த்தமிழந்துள்ளது. மறுபுறத்தே ஆபத்தான அபத்தமாகவுள்ளது. புதிய தொழில்நுட்ப வீச்சிடை கத்தரிகளைத் தாண்டி இலத்திரனியல் ஊடாக ஆக்கங்கள் வீட்டுக்குள் நுழைந்துவிட, தொடக்க கால ஊடகமான அச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் மட்டும் அகப்பட்டுப் போய் விடுகின்ற அவலத்தினை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எங்கள் குவிமையமான தொலைக்காட்சிப்படைப்புக்கள், விடியோத் திரைப்படங்கள் தொடர்பாக பிரித்தானியா போன்ற நாடுகளின் நடைமுறையில் இருந்த தணிக்கை முறைகள் எங்கள் புலங்களில் அதிகமாகவே இல்லையெனலாம்.

U - சர்வதேச பார்வையாளருக்கானது
BG - பெற்றோர் வழிகாட்டலுடன் பார்க்கப்பட வேண்டியது
15 - பார்வையாளருக்கு குறைந்தத 15 வயதாவது இருக்க வேண்டும்
18 - பார்வையாளக்கு 18 வயதுக்கு மேலிருக்க வேண்டும்.

என்பதான நுண்ணிய தணிக்கை முறைகள் எங்களிடமில்லை.

அபத்தமான ஆபாசங்கள் அனைத்தையும் அனுமதித்து ஆபாசமென சிலவற்றை கத்தரிக்கும் தணிக்கை முறை தமிழ் நாட்டில் உள்ளது. எங்களது புலங்களில் இந்த மாயத்திரை மயக்கங்களுக்கு இருந்த தடை, தணிக்கைகளை இன்றைய சூழமைவு சாத்தியமற்றதாக்கியுள்ளது.

ஊடகங்கள் மக்களுக்குக் கணக்கு சொல்ல வேண்டும் என்ற நெறிமுறை முற்றாக இல்லாத நிலையில் ரசிகர்களாகிய மக்கள் தான் சுய விழிப்பு / சுய கட்டுப்பாட்டின் வழி தங்களைக் காக்க வேண்டியுள்ளது.

இன்றைய உலகமயமாக்க அலைகளிடை சுதேச பண்பாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் கொஞ்சமல்ல. அன்னிய நியமங்கள் விழுமியங்களை ஊக்குவிக்கும். உள்ளூர் பண்பாடுகளை தாழ நோக்கும் படைப்புக்கள் பல்தேசியக் கம்பனிகளின் தயாரிப்புக்களாய் உலகச் சந்தை வழிமிக மலிவாகவே உள் வந்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்பவற்றை நியாயப்படுத்தும் விதமாக 'Think Globally; Act Locally - உலகளாவிய நிலையில் சிந்தி, உள்ளூர்தனமாய் செயற்படு' என்ற பொன் மொழிச் சுலோகங்களும் முன் வைக்கப்படுகின்றன. இந்தப் புதிய சிந்தனைகள், தீர்க்க தரிசனங்கள் போல உள்ளூர் பண்பாடுகள் உலகமயமாதலுக்கான சில உதாரணங்களைக் காண முடிந்தாலும் உலகப் பண்பாடு உள்ளூர் மயமாகுமா?

தேச எல்லைகளை அர்த்தமற்றதாக்கி, தனியன்களின் பண்பாட்டு அடையாளங்களை இல்லாமல் செய்து வெறும் நுகர்வாளர்களாகத் தனியன் கனவுகளை ஆராதிக்கும் இன்றைய ஊடகப் பண்பாட்டின் மாயத்திரை விலக்கி, உலக சமுதாயத்தை, மனித பண்பாடுகளை மீட்கும், காக்கும் பணியில் புதிய ஊடகங்களை உருவாக்கவும் புதிய ஊடகங்களை உருவாக்கவும் புதிய ஊடகப் பண்பாட்டினை வளர்க்கவும் ஏற்ற செயற்பாடு களையும் இந்த ஊடக அறிவு இயக்கச் (Media Literacy Movement) செயற்பாடாகவே மேற்கொள்வதும் இன்றியமையாதது.

## உசாத்துணைகள்


*ஜெயந்தினி.இ.(2003)* **தொலைக்காட்சியில் சுய மெய்யுருவம் சமூகவியல் நுண்ணாய்வு,** *சமூகவியல் சிறப்புக் கலை ஆய்வுக்கட்டுரை (பிரசுரமா காதது), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

Levy (1983) The time shifting use of home video recorders in **Journal of Broadcasting and Electronic Media** Vol-27.

Potter,W.James (1988) **Media Literacy,** Thousand Oaks CA:sage.

Shanmugalingan.N (2001) Fantacy to Reality: Video culture in Jaffna in **Globalization, Electronic Media and Cultural Change** (ed: S.T.Hettige, Markus Mayer & Ayoma), German Cultural Institute, Colombo.

Smith.R.(1986) Television Adiction, in **Perspective on media effects** (ed:J.Brayant & D. Zillmann), USA.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

# பிள்ளை மனங்களை புரிவதற்கான அறிவு

எல்லாச் சிறுவர்களும் மகிழ்வோடு விளையாடும் வேளை. ஒருவன் மட்டும் மேசையில் தலையை வைத்துப் படுத்திருக்கின்றான். விளையாட்டிலே மனம் செல்லவில்லை. தோழர்கள் அனைவரும், ஆசிரியரும் முயன்றும் முடியவில்லை. அவன் அந்த வகுப்பின் பிரச்சினைக் குழந்தையாக அடையாளப்படுத்தப் படுகின்றான்.

இன்னொரு பள்ளியிலே செய்யக்கூடாது என்று சொல்பவற்றையே செய்கின்ற பிடிவாதம் கொண்ட சில பிள்ளைகள் அந்த வகுப்பின் பிரச்சினைகளாக இனங்காட்டப்படுகின்றார்கள்.

இவ்வாறாக பல்வேறு முரணான கோலங்கள். மேற்கண்ட அவதானங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிப்பாதையின் மிக முக்கிய கால கட்டமாக இனங்காணப்படுகின்ற முன்பள்ளிப் பருவ நடத்தைகளாகப் பதிவு பெற்றவை. பிரச்சினைக்குரிய பிள்ளைகள் என்று அடையாளப்படுத்துகின்ற அல்லது ஒதுக்கின்ற நிலையினை தவிர்த்து பிரச்சினையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்களைக் இனங்கண்டு அவர்களை வழிப்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றிய சிந்தனையாகவே இக்குறிப்பு அமைகின்றது.

இந்த விடயம் தொடர்பான விழிப்பினையும் அடிப்படை அறிவினையும் இன்றைய நடத்தை உளவியல், சமூகவியல் முதலாய அறிவியல் துறைகள் எங்களுக்காக்கியுள்ளன.

பிரச்சினைக் குழந்தைகள் தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தன்மீதும் தன்னைச் சார்ந்தவர்கள் மீதும் பிழையான தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் கணிக்கப்படுகின்ற பிள்ளைகளே பிரச்சினைக்குரிய குழந்தைகள் எனப்படுகின்றார்கள்.

துடுக்குத் தனம், கீழ்ப்படியாமை போன்றவற்றினையே மிக முக்கியமான பிரச்சினை நடத்தைகளாக பெரும்பாலன ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். பெற்றோர்களும் இதனை வழிமொழிகின்றனர். ஆனால் பிறருடன் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருக்கும் பிள்ளைகளின் பின்வாங்கும் நடத்தையையே முக்கிய பிரச்சினையாக உளநலவியளாளர்கள் நோக்குகின்றனர். தனித்து அமைதியாய் ஒதுங்கியிருக்கும் பிள்ளைகள் எதிர்காலத்தில் விரக்தியான வாழ்விலோ அன்றி விலகலான நடத்தைகளுக்குள்ளோ தொலைந்து போகின்ற அவதானங்களை இவர்கள் நினைவூட்டுகின்றனர். இத்தகைய ஒரு சூழமைவிற் தான் இக்குழந்தைகள் பற்றிய அறிவார்ந்த நோக்கும் அன்பான செயற்ப்பாடும் அவசியமாகின்றனர்.

## 2

உண்மையில் பிரச்சினைக் குழந்தைகள் என்பதிலும் பார்க்க பிரச்சினைகளையுடைய குழந்தைகள் என்று இவர்களை அழைப்பதே பொருத்தமானது. பிள்ளைகளின் அக உலகப் போராட்டங்களின் விளைவான பொருத்தப்பாடற்ற நடத்தைகளாகவே பிரச்சினை நடத்தைகள் வெளிப்படுகின்றன. இவை பற்றி பல ஆய்வாளர்கள் பல்வேறு கோணங்களிலிருந்தும் நோக்கி விளக்கங்களைத் தருகின்றார்கள். உடல்சார் குறைபாடுகள், உளம்சார் குறைபாடுகள் என தனித்தனியாக நோக்கிய காலம் மாறி இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை வாழும் சமூகத்தின் உறுப்பினர்களாக்கும் பயில்கள மான சமூகமயமாக்க நிறுவமைப்புக்களை ஆராய்வதன் வழிதான் இவர்களின் நடத்தைக் கோலங்களுக்கான மூலங்களைக் காணமுடியும் என்கின்றனர் சமூகவியலாளர்கள். இன்றைய கல்வி உளவியல் முழுதளாவிய நோக்கில் இந்த அம்சங்கள் அனைத்தையும் இணைத்து நோக்குகின்றது. இந்தவகையில் இரண்டு கோட்பாடுகள் மிகப்பயனான எண்ணக்கருவாக்கங்களை எமதாக்குகின்றன. உளத்தொழிப்பாட்டுக் கொள்கை, கற்றல் கொள்கை என்பன இந்நிலைமை பற்றிய விரிவான அறிவின் அவசியத்தினை தெளிவுபடுத்துகின்றன. உளத்தொழிற்பாட்டுக் கொள்கையானது நடத்தையின் உளம்சார் இயக்கத்தினை, அதன் இயக்கவிசையான மனவெழுச்சியின் பாங்கினைத் தெளிவுபடுத்துகின்றது.

அம்மாவின் அன்பிலே தங்கி நிற்கும் பிள்ளை மனம் எதிர்கொள்ளும் தோல்வி, அதன் நடத்தை முரண்பாட்டின் அடிப்படையாக வெளிப்படுகிறது என்பார் வினிக்கோட் என்ற உளவியளாளர். போரின் கொடு முகத்தில் தன் அன்னையைத் தொலைத்த ஒரு பிள்ளையைத் தான் இந்தக் கட்டுரையின் தொடக்கத்திலே தனித்த குழந்தையாக நாம் அவதானித்தமையை இங்கு மனதில் கொள்ளலாம். கவலையுடன் தனிமையை நாடுகின்ற குழந்தைகள் தங்கள் உறவு நிலைகளில் தோல்வி கண்டவர்கள். பெற்றோர்களின் இழப்புகள் மட்டுமன்றி இருப்பும் கூட சில வேளைகளில் பிள்ளை மன முறிவுக்கு காலகிவிடுகின்றமையை காணலாம். சதா சண்டையிடும் பெற்றோாற்கு மத்தியில் யாரைச் சார்வது என்பதே ஒரு பிள்ளை மனச் சிதைவின் மூலமாகிவிடலாம் குடும்பத்துக்கு அப்பால் சாதி, சமூக அந்தஸ்து என்பற்றினடியான புறக்கணிப்புகளுக்குள் வெதும்புகின்ற குழந்தைகளும் இதற்குள் அகப்படலாம். பிள்ளைகளின் மனவெழுச்சிக் குழப்பங்களுக்கு காலாகின்ற இந்த சூழல் நிலமைகள் அனைத்துமே பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் பாரிய தாக்கத்தினை விளைவிக்கின்றன. கற்றல் தொடர்பான ஸ்கின்னர் போன்றோரின் கருத்தாக்கங்கள் இவற்றினை தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. கட்டுப்பாடு, சுதந்திரம் ஆகியன பற்றிய ஒரு குழந்தையின் மனப்பாங்கு அப்பிள்ளையின் குடும்பச் சூழல், அதற்கு வாய்கின்ற முன்பள்ளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவச் சூழல் என்பவற்றில் தங்கியுள்ளமையினை கற்றல் தொடர்பான ஆய்வுகள் பலவும் வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் பிள்ளைகளின் பிரச்சினை நடத்தையினை விளங்கிக்கொள்ளுதல் என்பது பெற்றோர்களின் பிரச்சினைகளை, ஆசிரியர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளுதலின் அவசியத்தினை எங்களுக்கு புலப்படுத்துகின்றன. பொறுமையாக இருப்பது - விரைவிலேயே பொறுமை இழப்பது, உற்சாகமாக இருப்பது - விரைவிலேயே உற்சாகம் இழப்பது என தளம்புகின்ற மனவெழுச்சி கொண்ட பெற்றோர்களினால் பிள்ளைகளின் மனதை புரிந்து கொள்ள முடிவதில்லை. தங்கள் பிள்ளைகள் தனித்துவமான ஆளுமைகளாக வளரவேண்டும் என விரும்புகின்ற அதேவேளை யில், அதற்கும் ஒரு எல்லையுண்டு என்றும் இந்த எல்லையை மீறும் போது தமக்குப் பெருங்கோபம் ஏற்படுவதாகவும் இந்தப் பெற்றோர்கள் கூறுகின்றனர். பிள்ளைகளைப் பிள்ளைகளாக நோக்குகின்ற பெற்றோர்கள் கோபப்படுவதில்லை. பிள்ளைகளின் பொருத்தமான வளர்ச்சிக் உதவுகின்ற பெற்றோரை நாம் இலகுவில் இனங்கண்டு கொள்ள முடியும். இவர்கள் என்றும் மகிழ்ச்சியுடன் குழந்தைகளுடன் பழகுகின்றர்கள்.

ஆரம்பகால ஆய்வாளர்களில் ஒருவரான பிப்ஸ் சைமன் எதிர் நிலையான பெற்றோர்களின் இயல்புகள் சிலவற்றை இனங்காட்டுகின்றமையை இங்கு மனங் கொள்ளலாம். அடிக்கடி பிள்ளைகளின் மேல் குறை சொல்வது, வேண்டும் என்றே பயம் காட்டுவது, பிற குழந்தைகளோடு ஒப்பிட்டு ஏளனம் செய்வது, வீட்டைவிட்டு துரத்தி விடுவதாகப் பயமுறுத்துவது, அறையிலே பூட்டிவிடுவது என நீளும் கொடுமையான இயல்புகள் இல்லாத பெற்றோர்களினாலேயே பிள்ளைகளின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளமுடியும்; பிரச்சினை இல்லாத பிள்ளைகளாக அவர்களை ஆக்க முடியும். பெற்றோர்களைப் போலவே ஆசிரியர்களின் மன வெழுச்சி, சமூக வளர்ச்சி என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பெரும்பாலன சந்தர்ப்பங்களில் தண்டனை முறையிலேயே ஆசிரியர்கள் தஞ்சம் அடைவதைக் காணமுடியும். எதிர்ப்பு நடத்தைக்குத் தண்டனை கிடைக்கும் என்ற காரணத்தினால் பிள்ளைகள் தமது முரண் நடத்தைகளைக் கைவிடக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் பலசந்தர்ப்பங்களில் பிள்ளைகளை ஆக்க முறையில் மேம்படுத்த இவ்வழிமுறை பயன்படாது என்ற கருத்து நிலையையே ஆய்வுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

பிள்ளைகளின் மனவெழுச்சி சார் பிரச்சினைகள் ஒவ் வொன்றுமே அறிவார்ந்த அணுகுமுறையை வேண்டிநிற்பன. எடுத்துக்காட்டாக, கோபம் கொள்ளும் பிள்ளைகள் தொடர்பாக பெற்றோரும், ஆசிரியரும், ஏனையோரும் மேற் கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பற்றிய அறிவார்ந்த செய்திகளை இங்கு கவனத்திற்கொள்ளலாம்.

கோபத்தைக் கையாள்வதற்கான பக்குவத்தைப் பலரும் கொண்டிருப்பதில்லை என்பதே முதல்பாடமாகும். கோபம் ஒரு கூடாதவிடயம் என்ற கருத்தாக்கத்துடன் அணுகுவதனாலேயே கோபம் கொண்ட பிள்ளையின் மனவெழுச்சியை எங்களால் மாற்றமுடியாமல் போகின்றது. எங்களது இலக்கானது பிள்ளையின் கோப உணர்வை அடக்குவது அல்லது அழிப்பது என்பதாக அமையக் கூடாது. அதனை ஏற்றுக்கொண்டு, எப்படி அந்தக் கோபத்தை ஆக்கபூர்வமான இலக்குகள் நோக்கித் திருப்பலாம் என்பதாகவே இருக்க வேண்டும்.

பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளைகளின் உணர்வினை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களைத் தரவேண்டும். தம் உணர்வு களை ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமாக வெளிப்படுத்த பெரியோர் களின் திறன்கள் பயன்படலாம். கோபத்தின் மூலத்தினை நாம் புரிந்து கொள்வதற்குக் கோபம் கொள்ளும் பிள்ளையின் உணர்வினை மதிக்கும் பக்குவம் எமதாக வேண்டும்.

துன்பமான உணர்வினைத் தவிர்க்கும் கவசமாகக் கோபம் வெளிப்படலாம். தோல்வியை, தனிமையை, தாழ்ந்து போன சுய மதிப்பை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் அமையலாம். கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழமைவில் ஏற்பட்ட பதட்டத்தின் விளைவாகக் கூட பிள்ளையின் கோபம் அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைப் பருவத்து கோபமும், துயரமும் பெருமளவுக்கு ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாக உள்ளமையை இன்றைய ஆய்வுகள் வெளிப்படுத்தும். பல சந்தர்ப்பங்களில் பெரியவர்கள் துயரமென வெளிப்படுத்தும் நிலைமைகள், பிள்ளைகளால் கோபமாக வெளிப்படுதலும் இங்கு கவனத்திற்குரியது.

பிள்ளைகளின் கோபத்தைக் கையாள்வதற்கு முன்னால் நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய சில முக்கியமான விடயங்கள் உள்ளன.

* முதலாவதாக கோபத்தினை (anger) ஆக்கிரோஷத்திலிருந்து (Aggression) வேறுபடுத்திக் கொள்வது அவசியமாகும்.

  கோபம் என்பது விரக்தியின் வெளிப்பாடான ஒரு தற்காலிக மனவெழுச்சி நிலையாகும். ஆக்கி ரோஷமோ ஒருவரைப் புண்படுத்தும் அல்லது ஒரு உடைமையைப் பாதிக்குமளவுக்கு தாக்கமானது.

* கோபமோ, ஆக்கிரோஷமோ இரண்டுமே கூடாத பதங்கள் என்ற எண்ணமும் எங்களிடத்திலிருந்து அகல வேண்டும். இவை பிள்ளையின் மன வெழுச்சி பிரச்சினையின் வெளிப்பாடுகள் என்பதனை உணர்ந் திட வேண்டும்.

* பிள்ளைகளின் கோபத்தைக் கையாளும் போது அதனை அடக்குதல், தண்டித்தல் என்றவாறு இல்லாமல் அவர்கள் உணர்ச்சியை ஏற்றுக் கொண்டு அதனை வெளிப்படுத்தும் மாற்று வழிகளைக் கற்றுக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். 'இப்படியான ஒரு நிலையில் சில பிள்ளைகள் கோபப்படாமல், இப்படித்தான் நடந்துகொள்வார்கள்' என்றவாறான உரையாடல்கள், உறவாடல்களின் வழி எங்கள் முயற்சிகள் அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் முயற்சி வெற்றி பெறும்வரை மாற்று முறைகளில் அவர் உணர்ச்சியை மடைமாற்றம் செய்யும் வழிகளைத் தேட வேண்டும். இந்த முயற்சியை எங்களுக்கு ஏற்படும் தோல்வியினால் நாங்கள் கோபக்காரர்களாகிவிடும் நிலைமை ஆபத்தானது. உண்மையில் எங்களது கோபமே பிள்ளைகளுக்குப் பாடமாகி விடுகின்றமையும், கோபத்தை வெளிப்படுத்தும் வழிகள் முறைகள் வரை அவர்கள் எம்மிடமிருந்தே கற்றுக்கொள்கின்றார்கள் என்பதனையும் மறந்துவிடக்கூடாது.

இந்தவகையில் பிரிட்ஸ் ரெடில், டேவிட் லைன்மன் ஆகியோர் முன்வைக்கும் சில கருத்தாக்கங்கள் நடைமுறையில் பயன்படக்கூடியன.

* **பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாகப் பாராட்டுதல்.** இதற்கான காரணங்களைப் பெற்றோரும், ஆசிரியரும் கண்டு கொள்ளவேண்டும். நல்ல நடத்தைக் கோலங்கள் வெளிப்படும் வேளைகளில் எல்லாம் அதனை மீளவலியுறுத்தும் பாராட்டுக்கள், வெகுமதிகளைத் தர வேண்டும்.

* **பொருத்தமில்லாத நடத்தையைக் கவனிக்காது விடுதல்.** இவ்வாறு கூறும்போது பிள்ளையைப் புறக்கணித்தல் என்பதல்ல. குறித்த நடத்தையை மட்டும் பிள்ளை உணரும் விதமாகப் புறக்கணித்தல் என்பதே பொருளாகும்

* **பிள்ளைகளுக்கு விளையாடுவதற்கும் உடற் பயிற்சி செய்வதற்குமான வாய்ப்புக்களை தருதல்.** வீட்டிலும் பாடசாலையிலும் இதற்கான ஒழுங்கு அவசியம். சதா-படிப்பு; பாடசாலை-தனியார் வகுப்பு என ஓய்வின்றி பிள்ளைகளைத் துரத்தும் பெற்றோர்கள் சிறப்பாகக் கவனிக்க வேண்டிய விடயம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **சூழமைவினை மாற்றுதல்.** பிள்ளை கோபம் கொள்ளக்கூடிய சூழமையை மாற்றி பிரச்சினைக் குரிய நிலைமைக்குகப் பதிலாக, பிள்ளைக்கு விருப்பமான செயற்பாட்டுக்கு வழிகாட்டுதல்.

* **பிள்ளையுடன் நெருங்கி உறவாடுதல்.** மன பாதிப்புக்கு உள்ளான பிள்ளைகள் பெரியவர்களின் அன்பு, ஆதரவினைப் பெரிதும் நாடுகின்றனர். இந்த அன்பு வெளியுள் வசதியாக நுழைந்து கொள்வதன் மூலம் பிள்ளைகளின் கோப வன்நடத்தைகளை மன மாற்றமுடியும்.

* **நகைச்சுவை உணர்வினைத் தருதல்** இறுக்கமான ஆளுமையிலிருந்து பிள்ளை விடுபட இது உதவும். எனினும் எந்தவகையிலும் இது பிள்ளையைக் கேலிசெய்யும் நகைச்சுவையாகி விடக்கூடாது. நேரடியாக பிள்ளைகளிடம் நிலைமையைக் கூறுதல். பெற்றோரோ, ஆசிரியரோ பிள்ளையிடம் நேரடியாக ஒத்துழைப்பை கேட்கும் வழி முறையாக இது அமையும். எடுத்துக்காட்டாக "நீங்கள் சத்தம் போடுவது வழமையாக என்னைப் பாதிப்பதில்லை ஆனாலும் இன்று தலைவலியாக இருக்கிறது. கொஞ்சம் அமைதியாய் நீங்கள் விரும்பிய வேறு வேலையைச் செய்யலாம்" என்றவாறு இந்நிலை மைகள் அமையலாம்.

* **காரணங்களை விளங்கச் செய்தல்.**

தமது விரத்தி நிலை போன்றவற்றுக்கான அடிப்படைகள் விளங்கும் போது பிள்ளைகளின் நடத்தையிலும் மாற்றம் நிகழும் எனப் பெரியவர்கள் பெரிதும் நினைப்பதில்லை. உண்மை அப்படியல்ல; சின்னவயதில் உரிய புரிதல்களைக் காணும் பிள்ளைகள் வளர்ந்ததன் பின்னரும் கூட தளம்பாமல் இருக்க காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தங்கள் பலங்களையும் பலவீனங்களையும் உணருமாறு செய்தல். தங்கள் இலக்குகளை அடைய எதனைச் செய்யவேண்டும் எதனை தவிர்க்க வேண்டும் என உணர்ந்து கொள்ளும் போது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்மையை பெறுவார்கள்.

* **வெகுமதிகளைத் தருதல்.**

இதனை லஞ்சகமாகக் கொள்ள வேண்டியதில்லை. பிள்ளைகளை பாதிக்காது அவர்களுக்கு விருப்பமான அவர்களுக்கு மகிழ்ச்சியை தரும் விடயங்களாக இந்த வெகுமதிகளும், அவைபற்றிய வாக்குறுதி களும் அமையலாம். பிள்ளை வேண்டியவாறு நடந்த பின்னரும் வெகுமதியை தராது ஏமாற்றுதலும், புதிய புதிய நிபந்தனைகளை தருதலும் எதிரான நடத்தைக் கோலங்களுக்கு இட்டுச் செல்வன என்பதும் இங்கு கவனத்திற்குரியது.

* **மாதிரிகளாக விளங்குதல்**

மிக முக்கியமான விடயம் இது; பிள்ளைகளின் பெரும்பாலான நடத்தைகளின் மூலங்கள் நாங்களே என்ற எண்ணத்துடன் எங்கள் ஒவ்வோர் நடத்தை யையும், வார்த்தைப் பிரயோகங்களையும் வெளிப் படுத்துவது இன்றியமையாதது. வன் நடத்தையின் ஆசிரியர் களாகவும், பிதாமகர்களாகவும் நாங்களே அமைந்தவாறே அதனை இல்லாமற் செய்யும் பணியை நிறைவேற்ற முடியாது.

மேற்கண்ட அனைத்தும் இயல்பான சூழமைவில் ஏற்படக்கூடிய நிலைமைகளாகவும் அவற்றினை கையாளுவதற்கான வழி முறைகளாகவும் ஆகலாம்.

பிள்ளையைப் பாதிக்கும் நிலைமைகள் அடிப்படையான சமூகக் கட்டமைப்பு சார்ந்த அநீதியாக, பாரபட்சமாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மேற்கண்ட வழிமுறைகள் வல்லமையானவையாக முடியாது என்பதும் இங்கு நம் கவனத்திற்குரியது.

இங்கு அநீதியான சமூகக் கட்டமைப்பு, அதைக்காக்கும் மேலாண்மைகள் தொடர்பான கோபம், பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் ஏனைய சமூக அங்கத்தினருக்கும் ஏற்படுவதும் அவசியமாகலாம். இவர்களின் கோபம் அந்த அநீதியான நிலைமைகளை மாற்றுவதாக அமையும் போது பிள்ளைகள் கோபம் கொள்ள வேண்டிய தேவையே ஏற்படாமல் போய்விடும்.

உண்மையில் பிள்ளையின் நடத்தை முரண்பாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து நீக்கும் செயற்பாட்டின் வழியே தான் அவர்கள் எதிர்கொள்ளும் துயர நிலமைகளிலிருந்து அவர்களை மீட்க முடியும். ஒரு பிள்ளையைப் புரிந்து கொள்வது என்பது அந்தப்பிள்ளையின் வகுப்பறைக்குள் மட்டும் முடியக் கூடிய சங்கதியல்ல. அந்தப் பிள்ளையின் குடும்பச்சூழல், சமூகச் சூழமைவு பற்றிய அறிதல் இல்லாமல் சாத்தியமாகாது.

இந்தவகையில் முன்பள்ளிப் பருவ கல்வி மேம்பாடு தொடர்பான மேற்கண்ட அறிவுத்தரிசனங்கள் நாளைய மேம்பாட்டுக்கான வழித்துணைகளாகின்றன.

*3*

நல்லதொரு பெற்றோராக இருப்பது எப்படி என்பது பற்றியே இன்று பல நிகழ்ச்சித்திட்டங்கள் வகுக்கப்பட்டு உலகளாவிய நிலையில் அதன் பயன் கனிகள் அனுபவமாகின்றமையைக் காண்கின்றோம். இதற்கான அறிவு, பெற்றோர் என்ற பாத்திரத்திற்கான இயல்புகளை, அதன் முக்கியத்துவத்தினை உணர்தல் என்பது பெற்றோரின் பணியாகின்றது. இதற்கான தரவுகளை, தகவல்களை, ஆலோசனைகளை வழங்குதல் கல்வியாளர்களின் பணியாகின்றது. இத்தகைய அனுபவங்கள் எங்களுக்காவது எப்போ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்திறன் கொண்ட பெற்றோர்களாக பிள்ளைகளின் ஆக்கத்திறன்களை என்றென்றும் மதிக்கின்ற, வளர்க்கின்ற பெற்றோர்களாக அனைவரும் உருமாற்றம் பெறவேண்டியுள்ளது. நவீன வாழ்வின் அவசரங்களிடை, பொருளீட்டலுக்கான அழுத்தங் களுக்கிடை பிள்ளைகளோடு உறவுகொள்வதற்கான பொழுதுகளை பெற்றோர் இழந்து நிற்கின்ற அவலம் கொடியது. இது பற்றிய விழிப்புணர்வு அவசியமானது. கூட இருக்கிற பொழுதுகளையும் கூட தொலைக்காட்சி போன்ற மாய இருப்புக்களாக்கிவிடும் இன்றைய நிலைமைகளிருந்து ஒவ்வொரு பெற்றோர்கள் சுய உணர்வுக்கு மீளுதல் அவசரமானது. தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்களை முற்றாகத் தவிர்தல் என்பது அசாத்தியமானது. அதேவேளையில் அந்த ஊடகத்தின் வல்ல மையை சரியான முறையில் பயன்படுத்தும் ஊடக அறிவு பெற்றோர் வசமாகின்றபோது பிள்ளை மன மேம்பாட்டுக்கான நல்ல பொழுதுகளாகக்கூட அவற்றினை மாற்ற முடியும். முன்னைய காலத்து அம்மா, அப்பா போல நீண்ட பொழுதுகளை பிள்ளைகளோடு செலவு செய்ய முடியாத நிலைமைகளில் உறவாட கிடைக்கின்ற பொழுதுகளின் செறிவும் ஆழமும் நிறைவாக இருக்க வேண்டும் எனும் இன்றைய உளவியளாளர்களின் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ‘பெற்றோராக கிடைத்த வாழ்வு அற்புதமானது, ஆனால் சுகமானதல்ல’ எனும் சமூக உளவியலாளரின் கருத்தியல் இன்றைய பெற்றோருக்கான பொறுப் புக்களையும் அதனை எய்துதலுக்கான அவர்களின் பற்றுறுதி யினையும் வேண்டிநிற்பன.

இவ்வாறே ஒவ்வொரு ஆசிரியர்களும் நல்லதொரு ஆசிரியருக்கான பண்புகளை தேடும், வசமாக்கும் பெருவிருப்பங் கொண்டவர்களாக விளங்குதல் இன்றியமையாதது. ஒரு வகுப்பிலிருக்கும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனித்தனியான ஆளுமைகள் என்ற எண்ணம் ஆசிரியர் மனதிலே இருக்க வேண்டும். அதேவேளையில் இந்தப்பிள்ளைகள் அனைவரையும் பாரபட் சமின்றி பேணுகின்ற பக்குவத்தினையும் அவர் கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளைக் கேட்கின்ற ஆசிரியராக, அவர்களது மகிழ்ச்சியான பொழுதுகளில் அவர்களோடு சேர்ந்து மகிழ்கின்ற, இவ்வாறே ஏனைய மனவெழுச்சி நிலைமைகளை புரிந்து பகிர்கின்றவராக விளங்குதல் வேண்டும். பிழைகளைப் பொறுத்தல், மன்னித்தல், எல்லையில்லாத பொறுமை, பிள்ளைகளின் வலிகளை தன்வலியாக உணருகின்ற empathic mind, பிள்ளைகளின் சமூக - சட்ட - சுகநல உரிமைகளுக்கான சமுதாய எடுத்துரைப் புக்களை மேற்கொள்ளல் என நல்ல ஆசிரியருக்கான பண்புகள் நீள்கின்றன.

ஒவ்வொரு வகுப்பறை அனுபவங்களும் நன்றாக திட்ட மிட்டு வடிவமைக்கப்படுதலின் அவசியமும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பெற்றோரைப் போலவே பிள்ளை களோடு ஆசிரியர் செலவு செய்கின்ற நேரத்தின் அளவும் முக்கியமானது. பிள்ளைகளின் திறன்கள், அடைவுகள், தேவைகள் பற்றிய முழுமையான புரிதலுக்கு அதிகளவான இடைவினை அவசியமாகின்றது. ஒவ்வொரு வகுப்பிலும் 'இன்று புதிதாய்ப் பிறந்ததான' உணர்வுடன் ஆசிரியர் செயற்பாட்டில் ஈடுபடுதல் இன்றியமையாதது.

உண்மையில் பிள்ளைப் பருவத்து வளர்ச்சி, மேம்பாடு என்பது அவர்கள் தொடர்பான பெற்றோர், ஆசிரியர் மற்றும் அவர்கள் கல்வி முறைமையினைத் தீர்மானிக்கும் கல்வியார்கள் கொள்கை வகுப்போர் ஆகியோரின் அறிதல் நிலையிலேயே தங்கியுள்ளமையை உணர முடிகின்றது. பிள்ளை மனங்களை புரிந்திடும் அறிவினை அனுபவமாக்கும் போதுதான் பிரச்சினைக் குழந்தைகள் பற்றிய எங்கள் வலிதீரும்.

## உசாத்துணைகள்


| | |
|---|---|
| Glasser, Howard and Jenniter Easley (2009) | **Transforming the difficult child**, The Nutured Heart Publication |
| Roy, James (2007) | **Problem child**, Australia : UQP |
| Ryan, Blaise T (2012) | **Democratic Parenting**, Anlom: Parent Learning club, Inc.com |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# தாகூரின் மனித முழுமைக்கான கல்வி

மனித முழுமையே கல்வியின் உயரிய இலக்காகும். ஆனாலும் எம்மை மூடிய வரலாற்று இருண்மையில் மனன பாடமாகவும், தேர்வுக்கான ஏற்பாடாகவும், கல்வியின் எல்லைகள் சுருங்கிப் போயின. இதன் விளைவாக சுயம் இழந்த மனிதர்களை உருவாக்கும் துயரம் பெருகியது. இந்தத் துயரைத் தொலைக்கும் காலக்கடமை எமக்கானது.

எங்களை மீட்கும், எங்கள் கல்வியைக் கோபுரமாக்கும் உலகளாவிய எத்தனங்கள் நிறையவே வந்து போயின. நிலைமையில் மாற்றமில்லை. இத்தகையதொரு சூழமையில் தான் எங்கள் பண்பாட்டுக்கு நெருக்கமான தாகூரின் மனித முழுமைக்கான கல்வித் தரிசனத்தினக் பெறுமதி பெரிதும் உணரப்படுகின்றது. தாகூரின் 150வது பிறந்தநாள் நினைவுகளைக் கொண்டாடும் இவ்வேளை மேலான அவரின் கல்விச் சிந்தனைகளையும், செயல் அனுபவங்களையும் எங்கள் கல்வியியல் வாழ்வாக்கும் பேரவாவின் விளைவே இக்கட்டுரையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் மகிழ்வுடன் வாழும் இடங்களாக பள்ளிக் கூடங்கள் அமைய வேண்டும் எனக் கல்விச் சிந்தனையாளர் ரூஸோ குறிப்பிடுவார். குழந்தைகள் வளரும் உடலும், மலரும், உள்ளமும் கொண்ட உயிரிகள் அவர்களின் இயல்பான சுதந்திர சூழலில் கற்கவிட வேண்டும் என்பார் குழந்தைக் கல்வியியலாளரான மொண்டசோரி அம்மையார். குழந்தைகளின் இயல்பினைக் கண்டு பிடிப்பது தானே கல்வியென மற்றொரு குழந்தை கல்வியியலாளர் புரோபலும் இதனையே மீள வலியுறுத்துவார். பிள்ளைகளின் மனமும், உடலும் சில விதிகளின் அடிப்படையிலேயே விருத்திய டைகின்றன. இதனை நாம் புரிந்து கொள்ளாதபோது அவர்களின் ஆற்றல்கள் மரணித்துவிடும் என எச்சரிப்பார் கல்விச் சமூக வியலாளர் ஹேபட் ஸ்பென்சர். இந்த மரணத்திலிருந்து தப்பிக் கொண்ட, தன் சுயவாழ்வின் தரிசனத்தைத் தாகூரே பின்வருமாறு குறிப்பிடுவார்.

> 'அந்தச் சிறுவன் தனியன், வீட்டுக்குள் அடைந்து கிடப்பவன், வேறு தோழனின்றி தன்னுடனேயே விளை யாடிக் கொண்டிருப்பவன், சமூகக் கட்டுப்பாடுகளோ, பள்ளியின் ஒழுங்கு முறைகளோ, அவனை அடக்கி வைக்க வில்லை. வீட்டின் கட்டுப்பாடும் இறுக்கமாகவில்லை. தந்தை இமாலயத்தில் வசித்து வந்தார். தமையன்மார் தான் வீட்டுத் தலைவர்கள். ஜோதி அண்ணாவுக்குத் தான் நான் மிகவும் கட்டுப்பட்டு நடந்தேன். அவருடன் சமவயதுக் கூட்டாளிபோல விவாதித்திருக்கிறேன். சிறுவனுக்கும் மதிப்பளிக்க அவருக்குத் தெரியும். அவர் தம் மனதின் சுதந்திரத்தின் மூலமாகவே என் உள்ளம் வளரத் துணை செய்தார். அவர் என்மேல் தம் அதிகாரத்தை உபயோகிக்க விரும்பி என்னைக் கட்டுப்படுத்தி யிருந்தால் நான் உடைந்து வளைந்து நாகரிக சமூகத்துக்குத் திருப்தியளிக்கும் வகையில் எப்படியோ ஆகியிருப்பேன். ஆனால் 'என் போல்' ஒருபோதும் ஆகியிருக்க மாட்டேன்'. (Tagore, 1999)

தான் எதிர்கொண்ட கல்விச் சூழமைவின் விமர்சனத்தி லிருந்தே தாகூரின் கல்வி முழுமை எமக்கானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுகின்ற சூழலோடு - இயற்கையோடு இசைந்த சுயசிந்தனைக்கு வழிசமைக்கும் கல்வியே தாகூரின் தரிசனமாகும். பண்பாட்டில் வேர்விடும் ஆத்மா உள்ள அறிவியல், தாகூரின் கலைத்திட்ட அடிப்படையாகும்.

> "மேலை உலகத்தோடு எங்களுக்குத் தொடர்பு ஏற்பட்ட போது, கீழைப் பண்பாட்டின் மீது மேலை உலகாயதம் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டது. எமது பண் பாட்டின் மீது ஒரு நூற்றாண்டு காலமாக நாம் நம்பிக்கை இழந்து விட்டோம். எங்கள் பண்பாட்டை வளர்க்கும் கல்வி நிறுவனங்கள் அமைக்க எங்களுக்கு வாய்ப்புக்கள் அமையவில்லை. எமது புராதன பண்பாட்டு மேன்மை களை இன்றைய மாணவர்கள் அறியாதவர்களாக இருக்கின் றார்கள்." (Tagore, 1919).

என்ற தாகூரின் ஆதங்கத்திலிருந்து பிறந்தவைதான் சாந்தி நிகேதன், ஸ்ரீ நிகேதன் எனும் செழுங்கலை நியமங்கள். இறக்குமதி செய்யப்பட்ட கல்விமுறைகள் சுயத்தையும், பண் பாட்டின் மேன்மைகளையும் தொலைந்து நின்ற சூழமைவில்தான் "நிலத்திலிருந்து பிடுங்கப்படுவது மரத்துக்கு விடுதலையாகாது" எனத் தெளிவாய் ஒலித்தது தாகூரின் குரல்.

பிள்ளை மனங்களின் பெருமையை உணர்ந்து தாகூரின் பெருமனம். எல்லையற்ற வல்லமை, இடையறாத செயல்வண்ணம், செழுமையான கற்பனை, இயற்கை அழகின் ஒவ்வொரு வடிவத்திற்கும் புத்தம் புது அர்த்தங்கள் காணும் உயர்திறன் கொண்டவர்கள் பிள்ளைகள். இந்தச் சிறுவர்களின் ஆளுமையை வளர்ப்பதே கல்வியின் இலக்காதல் வேண்டும். கல்விக் கொள்கை களுக்கு அப்பால் கல்வி கற்கும் அனுபவம் உயிர்ப்பானதாய், மகிழ்ச்சி தருவதாய் அமைந்ததே தாகூரின் கல்வியின் மிகப் பெரிய பெறுமதியாகும் என சாந்தி நிகேதனின் சூழல் வளர்த்த மற்றொரு நோபல் பரிசு புலமையாளர் அமர்த்தியா சென் (2011) குறிப்பிடுவதை இங்கு மனதிற் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை வெளிப்படுவதற்கு இயல்பான சூழல் வேண்டும். இயற்கையின் சூழலில் தாகூரின் சாந்திநிகேதன் அமையப்பெற்றது. ஆடியும், பாடியும், விளையாடியும் சூழலுடனான நட்புடன் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சி கண்டது. நெருக்குதல்கள் ஏதுமில்லை.

பரீட்சை மையக்கல்வியின் கருக்குதல்களுக்கு இடமில்லை. ஆனந்தமான சூழலிலே சுயவிருப்பத்துடன் பிள்ளைகளின் கல்வியிடம் பெற்றது. ஏட்டுச் சுரைக்காயாக அமையாமல் அனுபவ வழியான அறிதலுடன் தாகூரின் கற்றல் வெற்றி கண்டது.

ஏட்டுச் சுரைக்காயாக மனனத் திணிப்பாகப் பிள்ளைகளை தகவல்களால் நிரப்புகின்ற கல்விமுறையின் கொடுமையை விளக்க தாகூர் எழுதிய 'கோதா காஹினி - ஒரு கிளியின் கதை' நெஞ்சைத்தொடும் விதமாக நிலவும் கல்விய மைப்பின் அவலத்தைச் சுட்டும் (Tagore, 1918) பண்டிதர் களின் ஆலோசனையுடன் தங்கக் கூட்டுக்குள் அடைக்கப்படுகின்ற கிளியொன்றுக்கு வழங்கப்பட்ட கல்வி பற்றியது அந்தக்கதை. கிளியின் பயிற்சி முடிவுற்றதாக அறிவிக்கப்படுகிறது. பயிற்சிக்கு அனுப்பிய அரசன் 'கிளி தத்தித் தத்தி நடக்கிறதா' எனக் கேட்கிறான். 'இல்லை' என்பது பதிலாகும். 'அது பறக்குமா' என்ற கேள்விக்கும் 'இல்லை' என்பதே பதிலாகிறது.

உணர்வற்றுக் கிடந்த கிளியின் உடலை உரசிப் பார்க்கும் போது உணவாக அதற்குத் தரப்பட்ட ஏடுகளின் சரசரப்புச் சத்தம் மட்டும் கேட்கின்றது. கிளி இறந்து நாளாகிய உண்மையும் அப்பொழுதான் தெரிய வருகின்றது.

இன்றும் தொடர்கின்ற கிளிகளைக் கொல்லும் கல்வி முறைமைகளைப் பற்றிய விழிப்புணர்வுக்கான நெஞ்சக்கனலை தாகூரின் வாழ்பனுபவங்களும் அவரது எழுத்துக்களும் எமக்கு உணர்த்திநிற்கின்றன. தன்னுடைய ஆச்சிரமத்துக்கான வரை விலக்கணத் தினை தாகூர் தருகின்ற அழகே அழகு எனலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைச்சுற்றிப் பழக்கம் என்னும் சுவரை எழுப்பி வாழாமல் வாழும் பெரியவர்களை விடக் குழந்தைகளே உண்மையாக வாழ்பவர்கள். எனவே வெறும் பாடங்களைப் படிக்கும் பள்ளிகளை விட்டுவிட்டு அன்பை வளர்க்கும் உலகமாகிய பள்ளிதான் அவர்களுடைய மனவளர்சிக்கும் நலத்திற்கும் மிகவும் வேண்டப்படுவது. எங்கே மனிதர்கள் இயற்கையின் அமைதிச்சூழலில் கூடுகின்றார்களோ எங்கே வெறும் தியானமே வாழ்க்கையாக இல்லாமல், செயல்நிகழ்ச்சிகளில் ஈடுபடுகிறார்களோ; எங்கே மானிட உலகமே கடவுளின் ராச்சியம்; அதன் குடிமகனாக முயலுவதே உயர்ந்த லட்சியம் என உணருமாறு அவர்கள் அறிவுறுத்தப்படு கிறார்களோ; எங்கே சூரியன் தோன்றுவதையும் மறை வதையும்; நட்சத்திரங்களின் அமைதியான அழகையும் நாள்தோறும் புறக்கணிக்கவில்லையோ; எங்கே மலர்களும் கனிகளும் இயற்கையின் களியாட்டம் என்று கருதிப் போற்றப்படுகின்றனவோ; எங்கே இளையோரும் முதி யோரும் ஆசிரியனும், மாணவனும் ஒரே மேசையில் அமர்ந்து அன்றாட தங்களுக்கான உணவையும்; அழியாத ஆன்மாவுக்கான உணவையும் பகிர்ந்து கொள்கிறார்களோ அதுதான் என்னுடைய இலட்சியப்பள்ளி. (Tagore, 1919)

பிள்ளைகளின் இதயத்துக்கு நெருக்கமான கல்வி அமைத லின் இன்றியமையாமை உணர்வு தாகூரின் கலைத் திட்டத்தில் கலைகளுக்கு அவர் தந்த முக்கியத்துவமும் உணரப்பட வேண்டும். ஆளுமையின் அடையாளமாகின்ற கலைகளின் வழி பிள்ளைகளின் மனவெழுச்சி வெளிப்பாடு பக்குவப்படுகின்றது.

சிந்தனை, மொழி வழியாக வெளிப்படுவதுபோல உணர்வு களைத் தங்களுக்கேயுரிய குறிப்பான மொழிகளின் வழி வெளிப் படுத்தும் திறனை வளர்க்க வேண்டும். கோடுகளும், வர்ணக் கோலங்களும், ஓசைகளும், அசைவுக்கும் பிள்ளைமன உணர்வு களின் மொழியாய் வளம் தருவன என்பது தாகூரின் கவிதை மனதின் தரிசனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிள்ளைகளும் ஏதோ ஒரு கலையைப் பயில வேண்டுமென வலியுறுத்திய தாகூர் தன் கல்விக்கூடத்தில் கலைகளுக்கு உயர்ந்த இடம் தந்தார். இசையும் நடனமும், நாடகமும், ஓவியமும் அனைத்து மாணவர்களினக் ஆர்வத்துக்குரிய பயில்வுகளாயின. வெறும் வகுப்பறைப் பயில்வுகளாக இவை மட்டுமல்லாமல் அரங்க நிகழ்வுகளாய் சாந்தி நிகேதனின் பண் பாட்டுத் திருவிழாக்களில் முக்கிய இடம் பிடித்தன. பிள்ளை களோடு தானும் பாத்திரங்களில் கூடி நடித்தும், பாடியும் மகிழ்வூட்டினார் தாகூர். அதிகாரப் புனைவுகள், முகமூடிகள் அல்லாத ஒழுங்கமைப்பாய் அறிவும் மனமும் தழைக்கும் கல்விப் புலமாய் அமைந்தது சாந்திநிகேதன். அதுவே பின்னர் விஸ்வபாரதி பல்கலைக்கழகமானது. பல்கலைக்கழகங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதுபற்றிய தாகூரின் சிந்தனை தனித்து வமானது.

'ஐரோப்பியமொழியில் யூனிவேசிற்றி' என்பது அந்தப்பிர தேசத்திலேயே தோன்றிய ஒரு கல்விப்பயிற்சி முறையை அடிப்படையாகக் கொண்டது. அதாவது, இன்று நம்மவர்களில் படித்தவர்கள் என்று பெருமைகொள்ளும் ஒருசாரார் பழகிய கல்விச்சூழ்நிலையைத் தான் யூனிவேசிற்றி என்கின்றோம். அனைத்து அம்சங்களிலும் சீமைக்கல்வி முறையையே இவ்வமைப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது. நம்நாட்டின் பழச்செடிகளையும் மரங்க ளையும் நாம் சீமைப்பெயரிலேயே அழைக்கின் றோம். நம்நாட்டில் என்று உள்ள சர்வகலாசாலைகள் நம் நாட்டின் சூழ்நிலைக்குப் பொருந்தாதவை. ஆதிகாலத்தில் நம் நாட்டிலே கூட சர்வகலாசாலை என்று சொல்லக்கூடிய வித்தியாபீடங்கள் இருக்கத்தான் செய்தன. எடுத்துக் காட்டாக நாலந்தா, விக்கிரமசிலா போன்றன பல்துறை அறிவை வழங்கிய உயர்கல்விச்சாலைகள் எனலாம். ஐரோப்பாவிலே சர்வகலாசாலைகள் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்னதாகவே இந்த வித்தியாபீடங்கள் புகழ்பெற்றிருந்தன. இவை தோன்றுவதற்கு முன்பே ஒழுங்கான ஒரு கல்விப்பயிற்சி முறையும் பல்வகைத் துறைகள் பற்றிய போதனையும் நம் நாட்டில் இருந்து வந்திருக்கவேண்டும் என்று நிட்சயமாகச் சொல்லலாம்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நம் பண்பாட்டின் கல்விகேள்விகளை எல்லாம் தொகுத்து வைக்கும் ஆர்வம் நாடுமுழுவதும் அறிவில் சிறந்த மக்களிடையே விளங்கியது. அவை எக்காலத்துக்கும் எவ்விடத்திலே வாழ்பவருக்கும் பயன்பட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய அவா. இதன் விளைவாகத் தான் எங்கள் கல்விநிறுவனங்கள் பழைய கல்விமுறை, அறத்துறை, அரசியல், சமூகநீதி, தத்துவஞானம் ஆகிய அனைத்தினதும் உயிர்நாடியாக விளங்கின'.

'அந்தக்காலத்தில் கல்விப்பயிற்சியை அருந்தவமாகவே கருதிவந்தார்கள். பல அறிஞர்களின் சிந்தனைகள் அந்த ஞானவேள்வித்தீயில் பெய்த ஆகுதி போல் இருந்து அறிவை வளர்த்தன. மனம் தெளிவு பெற்றது. ஆராய்ச்சிச்சக்தி சுடர்விட்டு ஒளிர்ந்தது; அச்சடித்த பாடப்புத்தகத் திலிருந்து குறிப்பு எடுத்துக்கொள்வது போல் அவர்கள் ஏதும் செய்யவில்லை. உள்ளுக்குள் இடைவிடாமல் சிந்தனை புரியும் ஆற்றல் காரணமாக முயற்சி ஓங்கியது. கல்வி - கேள்விகளில் சிறந்த பெரியோர்கள் எங்கிருந்தோ வந்து கூடினார்கள்; மாணவர்களும் புத்திக்கூர்மை உள்ள வர்களாகவும், படிப்பில் அக்கறை கொண்டவர்களாகவும், தகுதிபெற்றவர்களாகவும் இருந்தார்கள். '

'இன்று அந்நியர் ரீதியில் அமைந்த சர்வகலாசாலை களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஒத்து வருவதில்லை. அதுமட்டுமன்றி ஐரோப்பிய கல்வியும் இங்கு குட்டை குளங்களில் தேங்கிய நீரைப்போல் தான் இருக்கிறது, அதில் ஓட்டம் இல்லை. பழமையில் மோகம் கொண்டு அதற்குப் பூவும் சந்தனமும் சாத்தி வழிபடுகின்றோம். ஐரோப்பிய கல்வியை அப்படியே கற்று அதிலிருந்து சில சொற்களைக் கோர்த்து இதுதான் மேனாட்டுப் படிப்பின் சாரம் என்பது போல் செருக்குடன் திரிகின்றோம். புதிய சிந்தனைக்கு இடமில்லை. பொதுமக்களை வருத்தும் தொல்லை களுக்குப் பரிகாரம் தேடவோ அவர்களுக்கு நேரும் சோதனைகளைக் கண்டு அவற்றைத் தக்கபடி தீர்த்துக் கொள்ளவோ சர்வகலாசாலைப் படிப்பு நமக்கு உதவுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. பாடப்புத்தகத்தில் படித்ததை நெட்டுருப்போட்டு எப்படியோ பரீட்சையில் தேறிவிடுகிறோம். பிறரை நம்பிவாழும் பசுமாடு முதலிய பிராணிகளைப் போல் கிடக்கின்றோம். நாமே புதிதாக ஒன்றைப் படைக்கும் ஆற்றலை இழந்துவிட்டோம்.'(ரவீந்திரர், 1992)

வாழ்வுக்கும் சிந்தனைக்குமிடையிலான உறவினைக் காப்பதற்கு தாய்வழி மூலமான கல்வியின் அவசியத்தை உணர்த்திய தாகூரின் கல்வித் தரிசனம் எம் கவனத்திற்குரியது. கற்றவரை மக்களிடமிருந்தும் பண்பாட்டிலிருந்தும் பிரிக்கும் குடியேற்ற நாட்டாதிக்க கல்வியின் அன்னியமாக்கலின் விளைவுகளை நன்கு உணர்ந்து கொண்டவர் தாகூர்.

'எம்முடைய தாய்ப்பாஷையில் உயர்தரக் கல்வியைக் கற்பித்து அக்கல்வியை முழுதும் நமதாக்கிவிட வேண்டும் என்று சொல்லும் தைரியம் எமக்கெப்போதுமே வராது போமோ' என்று ஏங்கிய தாகூர், தாய்மொழி மூலமான கல்வியின் முன்னோடி யாகவும் விளங்கினார்.

கல்வியியலின் அனைத்து அம்சங்களிலும் தாகூரின் கவனம் இருந்தது. ஆக்கதிறன் கொண்ட பிள்ளைகளின் மலர்ச்சிக்கு புதியன புனையும், புத்தார்வம் கொண்ட ஆசிரியர்களை உருவாக்குதலின் அவசியத்தை வலியுறுத்தினார் தாகூர். ஓர் ஆசிரியனுக்கான அடிப்படையாக குழந்தை மனத்தை அடிக்கோடிட்ட தாகூர் குழந்தை மனமில்லாதவன் ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவன் என உறுதியான தீர்ப்பையுமளித்தார். குழந்தை மையம், செயல் மையம், அனுபவ மையம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் தந்த போதும் கல்விச் செயன்முறையில் ஆசிரியர் பங்கும் பொறுப்பும் சிறப்பானதென உறுதியாகக் குறிப்பிடும் தாகூர், ஆசிரியர் கல்விக்கான ஏற்பாடுகளையும் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்கண்டவாறு மனித முழுமைக்கான தாகூரின் கல்விச் சிந்தனைகள் சமூக சூழமைவிலிருந்த அந்நியப்படாததாய் சூழலின் சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்களைப் புரிந்து கொண்டதாக வும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. அறிவை சமூகப் பயனானதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணுதலின் அவசியத்தை எழுதும் கால் மன்ஹைம் போன்ற சமூக சிந்தனையாளர்களின் வழியானது. சமூகத்துடன் இசைந்த கல்வி என்ற நோக்குடனான தாகூரின் சிந்தனையில் நவீன அறிவியல-தொழில் நுட்பம் யாவும் உள்ளூர் மக்களின் பொருளாதார நலனுக்குப் பயன்படுவதாக அமைதலின் அவசியம் வலியுறுத் தப்பட்டது. மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அறிவைத் தேடும் அவரது பயணத்தில் மேலைநாட்டவரான விவசாயத்துறை புலமையாளர் எல்ம்ஹிற் (Elmhirst) இன் அறிமுகம் பெருந்துணையானது. இங்கிலாந்து பயணத்தின்போது எல்ம்ஹிற்றை சந்தித்த தாகூர் 'சாந்திநிகேதனைச் சூழவுள்ள கிராமங்கள் ஒரு காலத்தில் கௌரவமான பொருளாதார சமூக சூழலில் வாழ்ந்தன. இன்று அன்றாட பிழைப்புக்கு அல்லாடும் நிலையில் உள்ளன. அவர்கள் வாழ்வினை மேம்படுத்த உன் அறிவைப் பயன்படுத்துவாயா!' என விடுத்த அழைப்பின் பயனே கிராமிய மீள்கட்டுமானத்துக்கான கல்வி நிறுவனம் (Institute of Rural reconstruction).

பின்னர் ஸ்ரீ நிகேதன் என்று தாகூர் பெயரிட்டார். ஸ்ரீ என்றால் செழிப்பு, நலம், செயற்பாட்டின் வழியான அழகு நலம் தாகூரின் கல்விப்பயனும் இலட்சியமும் ஸ்ரீ நிகேதன் வழி வெளிப்பட்டது. சமுதாயப் பிரச்சினைகளை அறிந்து அனுபவ பாடமாக அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் வல்லமையை பிள்ளைகளுக்குத் தருவதாக ஸ்ரீ நிகேதனின் கலைத்திட்டச் செயற்பாடுகள் அமைந்தன. 'சமுதாய பங்கேற்பின் வழியான கிராமிய மேம்பாடு' எனும் இன்றைய காலத்து மந்திரச்சொல் மார்க்கத்தினை அன்றே தன் நிறுவனத்து நடைமுறையாக்கி யிருந்தார் தாகூர். 'வெளியே இருந்தபடி ஒரு கிராமத்தை வழிப்படுத்துவதென்பது செயற்கையானது' என தெளிவுற உணர்ந்த தாகூரின் கலைத்திட்டத்தில் சமூக பங்கேற்புக்கான ஆர்வத்தினை வளர்க்கும் செயற்பாடுகள் நிறைந்திருந்தன. வருடம்தோறும் புதிய மரங்களை நாட்டுவதற்கென்றே ஒரு உற்சவம் தாகூரினால் ஒழுங்கமைக்கப்பட்டமையை இங்கு நினைவில் கொள்ளலாம். மஞ்சள் உடை தரித்து பெண் பிள்ளைகள் மரங்களை நிலத்தில் நாட்டும்போது ஆண்பிள்ளைகள் அவற்றினைப்பேணும் உளசார் பினை பிள்ளை மனங்களில் நிலைபெறச் செய்வதே இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவத்தின் இலக்காகும். எல்லா உயிரினங்களும் மரங்களில் தங்கியுள்ளன. அவை தரும் பூ, பழம், நிழல், பட்டை, வேர் என அனைத்துமே எம் வாழ்வு நலத்துக்கானவை. செழிப்பின் சின்ன மான மரங்கள் நீடு வாழும்போது நாமும் நீடு வாழ்வோம் என்ற உள்ளத் தெளிவை இந்த உற்சவ ஈடுபாட்டின் வழி மாணவர் பெறுவர் என்பார் தாகூர்.

சுற்றுப்புற சூழல் கல்வி தொடர்பான இன்றைய முன்னெ டுப்புக்களுக்கு எல்லாம் முன்னோடியாக அமைந்தது தாகூர் தந்த அனுபவக் கல்வி. குழுக்களாக பிள்ளைகளை வீட்டிலிருந்து சுற்றுப்புறச் சூழலுக்கு அனுப்பி சுதந்திரமாய் இடைவினை கொண்டு தரவுகளைச் சேகரிக்க செய்தார். இந்தக் கல்விக்கு siksha satra என பெயரிட்ட தாகூர் பிள்ளைகளோடு சேர்ந்து சேகரித்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அறிவார்ந்த தீர்வுகளை இனங்காணும் கல்வியின் தந்தையானார். 'விஞ்ஞானம் எங்கள் சேவகனாக இருக்க வேண்டும் அன்றி ஒருவரினதும் எஜமானாக விடக்கூடாது' எனத் தெளிவாக எடுத்துரைத்த தாகூர், தன் சமூக நல கல்விச் செயற்பாட்டின் பல தடைகளையும் எதிர்கொள்ளவில்லை.

குறிப்பான அடுக்கமைவான சாதிய சமூகக் கட்டமைப்புக் குள் சொந்த சகோதரனையே மதிக்க முடியாமல் தள்ளிவைத்து, தனது சிறையை தானே மூடியிருக்கும் அவலத்தையிட்டு பெரிதும் வருந்தினார் தாகூர். கூடவே வறுமையும், நோயும், தொடர் அடக்குமுறைக்கும் மக்களிடையே பரஸ்பர சந்தேகத்தை வளர்த்து ஒன்றுபட்டு செயற்படுவதற்கு தடையாக இருந்தமையை வெளிப்படுத்தினார். இந்த நிலைமையை மாற்றுதற்கு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதற்கான ஓத்துணர்வினை வளர்த்தலின் அவசியத்தை பயில் அனுபவமாகவே வழங்கும் ஏற்பாடுகளைச் செய்தார். ஏனையோர் மீதான அன்பும், மதிப்பும் அவர் வலிகளை தம் வலியாக உணரும் பக்குவமுமே உண்மையான ஒருமைப்பாடு தரும் என்ற தெளிந்த இலக்குடன் கூட்டுறவு வளர்ச்சி, முதியோர் கல்வி, மருத்துவ சேவை, குடிசைக் கைத்தொழில் என கல்வி விரிவாக்கப் பணிகள் பலவற்றை முன்னெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எப்போதும் விரிவாக்கும் சிந்தனை, சிந்தனை விழிப்பின் வழி மேம்படும் தேசம்' என்பதே தாகூரின் அயராத் தரிசனமானது. தனிமனித முழுமைக்கான அவரின் உழைப்பு யாவும் கூட்டு நலனுக்கான மனதைப் படைக்கும் நோக்கிலானது. தாகூர் இடையறாது வலியுறுத்திய சுய சிந்தனையும், சுதந்திரமும் எல்லா மக்களையும் ஒன்றிணைந்த நீதியான சமூகத்தை படைக்கும் சமூக கடமையின் பாற்பட்டது. கொஞ்சப் பிள்ளைகளையே கெட்டிக் காரர்களாகும், இன்றைய கல்வியமைப்பின் மேலாண்மைகளை புறந்தள்ளிய தாகூரின் கல்வி நிறுவனங்களும், அவர் அவாவிய சமூக மேம்பாடும் அவநம்பிக்கை தரும் நெருக்கடி நிலைமைகளை எதிர் கொண்ட போதும் தளரா நம்பிக்கையின் குரலாக தாகூரின் குரல் ஓங்கி ஒலித்தது.

> 'எந்தவொரு நிலையிலும் மானுடத்தின் மீதான நம்பிக்கையை இழக்கும் கொடிய பாவத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன். எல்லாத் தடைகளையும் கடந்து தோல்வியில் துவண்டு போகாத மனிதன் தன் வெற்றிப் பாதையில் மீண்டும் நடைபோடும் ஒரு நாள் வரத்தான் போகிறது' என்பார் தாகூர்.

தாகூர் என்ற உள்ளத்தின் நிழலில் தழைத்த அவரின் கல்வி நிறுவனங்கள் அவரது மறைவுக்குப் பின் விட்டுக்கொடுப்புக் களுக்குள் தளர்ந்து போகின்ற நிலமைகள் நெஞ்சுக்கு கனமானவை. ஆனால் நாங்கள் அவாவி நிற்கும் கல்வி முழுமையை மீட்டெடுக்கும் எதிர்காலத்துக்கான உரையாடல்களின் உயிர்ப்பு மையங்களாய் அவை விளங்குகின்றன.

தாகூரின் அடிச்சுவட்டில் அரவிந்தர், ஜே. கிருஷ்ணமூர்த்தி என மலர்ந்த ஆளுமைகளின் நீழலிலே அழகிய உலகைப்படைக்கும் கல்வியனுபவங்கள் தொடர்கின்றன.

> 'கல்வி என்பது நூல்களில் இருந்து மட்டும் அன்று, சிலவற்றை மனப்பாடம் செய்வதல்ல ஆனால் எவ்வாறு ஒன்றை நோக்குவது ? எவ்வாறு கேட்பது? என்பதை அறிவதும் உண்மையோ? அல்லது பொய்யோ, நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன கூறுகின்றன என்பதை கேட்பதும், ஆகிய அனைத்தும் கல்வியின் ஒரே பகுதியாகும். தேர்வில் வெல்வது, பட்டம் பெறுவது, வேலைதேடிக்கொள்வது, மணந்துகொண்டு வாழ்க்கை துவங்குவது மட்டும் கல்வியல்ல. பறவைகளுக்குச் செவிகொடுப்பது, வானத்தை நோக்குவது, மரங்களில் உள்ள அசாதாரண அழகைப் பார்ப்பது, குன்றுகளின் வடிவத்தைப் பார்ப்பது, மற்றும் அவற்றோடு ஒரு உணர்வைப் பெறுவதும், உண்மையில் அவற்றினுக்கிடையே நேரான தொடர்பினை கொள்வதுந் தான் கல்வி'

எனும் கிருஷ்ணமூர்த்தியின் இலட்சிய மலர்வாக ரிஷி வேலியில் அமைத்துள்ள செழுங்கலை நியமத்தைக் காணலாம்.

இந்த இலட்சிய உலகின் ஆத்ம உயிர்ப்பாக, நோபல் பரிசு பெற்ற உலகக் கவிஞராகப் புகழ்பெறும்எங்கள் தாகூரின் வாழ்வும் அவர்விட்டுச் சென்ற கல்வி நிறுவனங்களும் விளங்குகின்றன. அவை கல்வி மறுமலர்ச்சிக்கான பெரும் நம்பிக்கைகளாகவும் எம் நெஞ்சிலே காக்கப்படுகின்றன.

"வாழ்க்கை எங்கே தன்னை வெளிப்படுத்தி கொள்ள முனைகிறதோ அங்கே என்னைக் காணலாம். நான் ஆரம்பித்த வகுப்புக்களும், கற்பித்த பாடங்களும் அடுத்த நிலையில் அமைந்தவை. இயற்கையின் அகன்ற விளை யாட்டுத்திடலில் குழந்தைப்பருவத்தின் மென்மை யான அழகையும், அதன் துளிர் விடும் முயற்சிகளையும், அதாவது அதன் அனுபவ ஆகாயத்தினூடே பரவும் முதல் ஒளிக்கதிர்களையும் விழித்தெழச் செய்வது தான் என் உண்மையான பணியாக இருந்தது"

எனும் தாகூரின் சமூக ஆத்மாவை, மானுட முழுமைக்கான கல்வியின் அறிவுத்தளத்தை விளக்கும் கீதாஞ்சலியின் இந்தப் பாடலே என்றைக்குமான எங்களின் பிரார்த்தனையாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே மனம் அச்சமற்று விளங்குகிறதோ
எங்கே தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ
எங்கே அறிவு சுதந்திரமாய் பொலிகிறதோ
எங்கே குறுகிய சாதிமதப் பிளவுகளால்
உலகம் உடையாமல் உருப்பெறுகின்றதோ
எங்கே உண்மையின் ஆழத்து
சொற்கள் உதயமாகின்றனவோ
எங்கே தளரா முயற்சி
பரிபூரணத்தை நோக்கி கைகளை நீட்டுகிறதோ
எங்கே பகுத்தறிவெனும் தெளிந்த நீரோடை
மூடப்பழக்கவழக்கப் பாலையில்
பாயாது மீள்கிறதோ
எங்கே என்றென்றும் விரிந்து செல்லும்
எண்ணத்தை செயலை நோக்கி
என் உள்ளத்தை நின் அருள்
அழைத்துச் செல்கின்றதோ

அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில்
என் தந்தையே
எனது தேசம் விழித்தெழுவதாக.
(கீதாஞ்சலி, 35)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்


*கிருஷ்ணமூர்த்தி, ஜே. (1992)* **ஓர் புதிய தலைமுறையினரை தோற்றுவிப் போம்**, *சென்னை: கிருஷ்ணமூர்த்தி ஃ பௌண்டேஷன்*

*ரவீந்திரர் (தொகுப்பு: இந்திரா பார்த்தசாரதி) (1992)* **ரவீந்திரரின் தேர்ந்தெடுத்த கட்டுரைகள்** *புது தில்லி: சாகித்திய அக்காதெமி*

Sen,Amartya (2011) Child Hood Reason, **GUERNICA** - A Magazine of Art and Politics

Tagore (1913) **Gitanjali** (song offering), London

(1918) **Parrot Training**, Culcutta.

(1919) **The Home and World**, London: Mac.Millan





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவின் சமூகவியல் சிந்தனைகள்

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
சமூகவியல் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனித சிந்தனைக்கும் சமூகச் சூழமைவுக்கும் இடையிலான உறவின் கற்கையாக அறிவின் சமூகவியல் வாய்த்துள்ளது. அறிவின் பயன எல்லை மனிதம்; இந்த இலக்குடனான எல்லா அறிவும் அறிமுறைகளும் மேன்மையானவை. இதனைப் புரிந்து கொள்வதற்கும் நிலைபேறான எதிர்காலத்திற்கான அறிவினைக் கட்டமைப்பதற்குமான காலக் கடமையின் வெளிப்பாடாகவே இந்நூல்.

இன்று எம்மைக் கவ்விநிற்கும் உலகமயமாக்க, கலாசார காலனியவாத அலைகளிலிருந்து எங்கள் சமூகங்கள் நிலைபெறவேண்டுமானால் அவை சுதேச தன்மையுடன் அசைவியக்கம் பெற வேண்டும். இதற்கான ஒரு சிந்தனைத் தளத்தை பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களின் இந்நூல் முன்வைக்கின்றது. பேராசிரியர் அவர்களின் ஆழ்ந்த, நுட்பமான சமூகவியல் பார்வை நம்முடைய வாசிப்புக்கு என்றென்றும் பயன்தரும். இந்நூலானது சமூகவியலுக்கு மட்டுமன்றி தமிழ்ப்புலமை உலகினுக்கும் ஒரு புதிய வரவாகும்.

முனைவர் பக்தவத்சல பாரதி
இயக்குநர்
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்

ISBN 955515601-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org